எகிப்து விமானப் பாகங்கள் மத்தியதரைக் கடலில் மீட்பு
அந்நாட்டு இராணுவம் அறிவிப்பு
பக். 14

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
பரவலான இடி மழை

சுடர் 31 | கதிர் 177 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 08, சனிக்கிழமை 21.05.2016

# ஆட்டிப்படைக்கிறது இயற்கைப் பேரிடர்

✦ 64 பேர் சாவு ✦ 173 பேர் மாயம்
✦ 5 இலட்சத்துக்கு மேற்பட்டோர் நிர்க்கதி



கொழும்பு, மே 21
இலங்கையை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் இயற்கைப் பேரிடர் காரணமாக நேற்று மாலை வரையில் 64 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் 173 பேரின் நிலை இன்னமும் என்னவென்று தெரியாதுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
கொழும்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மழை நேற்று ஓரளவு குறைந்தமையினால், களனி கங்கையின் நீர் மட்டம் குறைந்தது. இதனால் தலைநகர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு குறைவடையத் தொடங்கியுள் பக்.24

## திங்களன்று விடுமுறை இல்லை

கொழும்பு, மே 21
நாட்டில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமையின் காரணமாக நாளை மறுதினம் திங்கட் கிழமை ஏற்கனவே விடுக்கப்பட்ட அரசவிடுமுறைமீளப் பெறப்பட்டுள்ளதாக, உள் நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.
இந்த முறை வழமையான வெசாக் விடுமுறை தினங்கள் இரண்டும் சனி, ஞாயிறு பக்.24

## ஜனாதிபதி செயலகத்தின் ஊழியர்களும் நிதியுதவி

கொழும்பு, மே 21
சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, ஜனாதிபதி அலுவலகத்தினதும் அதன் நிர்வாகத்துக்குட்பட்ட நிறுவனங்களினதும் ஊழியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.
இதற்கு மேலதிகமாக வெசாக் பக்.24

## இடரில் சிக்கிய மக்களுக்கு உடனடி நிவாரணம் தேவை

### அரசிடம் வலியுறுத்துகிறார் சம்பந்தன்

கொழும்பு, மே 21
இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பக்.24

## இடரில் சிக்கியவர்களுக்கு இந்திய அரசினால் உதவி

### இரு கப்பல்களில் வந்தன அத்தியாவசியப் பொருள்கள்

புதுடில்லி, மே 21
இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு, இரண்டு போர்க் கப்பல்களில் இந்திய அவசர உதவிப் பொருள்களை அனுப்பியுள்ளது.
கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படையின் தென்பிராந்தியத் தலைமையகத்தில் இருந்து, ஐ.என்.எஸ் சுகன்யா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் மற்றும் பக்.24

## இடர் பாதித்த பகுதிகளுக்கு வடக்கிலிருந்தும் நிவாரணம்

### மாவட்டச் செயலகங்களினால் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 21
இயற்கை இடரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டச் செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
எனவே, உதவிப் பொருள்களை வழங்க விரும்புவர்கள் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் பக்.24

## வெள்ள நீரில் படகுச் சவாரி இருவர் சாவு; ஒருவர் மீட்பு

கொழும்பு, மே 21
அவிசாவளை - ஹங்வெல்ல பிரதேசத்தில் வெள்ள நீரில் பொழுதுபோக்கு நோக்குடன் படகு ஓடிய இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக ஹங்வெல்ல பொலிஸார் பக்.24

## தேங்காய் உடைப்பே பேரிடருக்கு காரணம்

### மகிந்த ஆதரவு அணியைக் கிண்டலடித்தார் பிரதமர்

கொழும்பு, மே 21
மகிந்த ஆதரவு அணியினர் தேங்காய் உடைத்திருக்காவிட்டால், நாட்டில் இப்படியொரு பேரிடர் ஏற்பட்டிருக்காது, என்று நேற்றுச் சபையில் கிண்டலாகத் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
நாட்டில் ஏற்பட்டுள்ள இடர் நிலை குறித்து அமைச்சர்கள் நாடாளு மன்றத்தில் நேற்று விளக்கமளித்துக் பக்.24

## யாழ்ப்பாணம் டி.ஐ.ஜிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 21
யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு இடமாற்றம் பக்.23

## வெள்ளம் பாதித்தோருக்கு சுகாதார வசதிகள் அவசியம்

### விடுமுறை பெறுவதைத் தவிர்க்குமாறு மருத்துவர்களிடம் அவசர கோரிக்கை

கொழும்பு, மே 21
மண்சரிவு மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுகாதார வசதிகளை வழங்க வேண்டியுள்ளது. எனவே மருத்துவர்கள் விடுமுறை பெறுவதையோ அல்லது விடுமுறையை நீடிப்பதையோ தவிர்த்துக் கொள்ளவும்.
இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை பக்.24

## தொழிலின்போது சாவடைந்த வடக்கு மீனவருக்கு இழப்பீடு

### கூட்டுறவுத் திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 21
தொழிலின்போது கடலில் சாவடைந்த கடற்றொழிலாளர்கள் பற்றிய விவரங்களை வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சு, கூட்டுறவுத் திணைக்களத்தினூடாகத் திரட்டி வருகின்றது.
இதற்கமைய எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களைப் பக்.24

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்கும் உறுதிமொழி தரவில்லை இலங்கை

### ஐ.நா. நிபுணர் ஜுவான் மென்டேஸ் தெரிவிப்பு



கொழும்பு, மே 21
பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக எந்தவித வாக்குறுதியையும் இலங்கை அரசு வழங்கவில்லை.
இவ்வாறு தெரிவித்துள்ளார் சித்திரவதைகள் தொடர்பிலான ஐ.நா. விசேட நிபுணர் ஜுவான் மென்டேஸ்.
வொசிங்டனில் தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது பக்.24

Digitized by Noolaham Foundation

# பாதிப்புற்றோருக்கு நிவாரணம்; 1,588 மில்லியன் ரூபா செலவீடு

## நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு

கொழும்பு, மே 21

இயற்கை இடர் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக ஆயிரத்து 588 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றும்போதே நிதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நிவாணரங்களை வழங்குவதற்குத் தேவையான நிதியைக் குறைக்காது வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இடர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறிய, நடுத்தர வர்த்தகர்களை வழமை நிலைக்குக் கொண்டு வரவும், மக்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டு வரவும் தேவையான நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதியும், பிரதமரும் ஆலோசனை வழங்கியுள்ளனர். எதிரணியினர் மக்களைத் தவறாக வழி நடத்தும் கருத்துக்களை வெளியிடவேண்டாம். அமைச்சுக்களுக்குத் தேவையானால் செலவிட முடியும்.

எனினும் இடர் முகாமைத்துவ அமைச்சின் ஊடாக நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பல நாடுகள் நிவாரணங்களை வழங்க முன்வந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அனைவரும் ஒன்றிணையுமாறும் தேவையான நிதியை அரசு பெற்றுக் கொடுக்கும் எனவும் நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-5)




நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக மண்சரிவுக்கு உட்பட்டு, கணிசமான அளவுக்கு மனித உயிர்களை காவு கொண்ட அர நாயக்கப் பகுதில், ராஜகிரி விஹாரையில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி மக்களுக்கு சிவன் பவுன்டேசன் அமைப்பினால் நிவாரண உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. ராஜகிரி விஹா ரையிலுள்ள முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள ஆனந்த தேரிடம் சிவன் பவன்டேசன் அமைப்பின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம் நிவாரணப் பொருள்களைக் கையளித்தார். (த-ஐ)

# சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தேசிய மாநாடு கொழும்பில்

வலி.வடக்கு, மே 21

சர்வதேச லயன்ஸ் கழகம் 306 பி1 இற்கான 11 ஆவது தேசிய மாநாடு வந்தளை பிஹாசஸ் றீவ் ஹோட்டலில் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் போது 2 ஆவது உப மாவட்ட ஆளுநருக்கான தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் நீர்கொழும்பு ஒறியன்ற் லயன்ஸ் கழக உறுப்பினரும், நீர்கொழும்பு ஹோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டலின் நிர்வாக இயக்குநருமான லயன் தேவா பீற்றர் 2 ஆவது உப மாவட்ட ஆளுநராகத் தெரிவாகியுள்ளார்.

லயன்ஸ் கழக ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்கார தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், புதிய ஆளுநராக வைத்தியர் லயன் வை.தியாகராஜாவும், முதலாவது உப ஆளுநராக லயன் கமிலஸ் பெர்னாண்டோவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஆளுநர் சபையின் செயலாளராக லயன் எம்.ஐ.எம்.ராசிக், பொருளாளராக லயன் நிஹால் லைல் ஆகியோரும், ஆளுநரின் பிரதம இணைப்பாளர்களாக லயன் கே.கணேசமூர்த்தி, லயன் என்.எஸ்.விக்ரர், லயன் கே.எம்.பத்மநாதன், லயன் எஸ்.ஹரிரத்ன ஆகியோரும், பிரதி செயலாளர்களாக லயன் எஸ்.சந்திரசேகர, லயன் வி.ஸ்ரீபிரகாஷ், லயன் எஸ்.அப்புகாமி ஆகியோரும், பிரதிப் பொருளாளர்களாக லயன் கே.ரவிநாதன், லயன் கே.ஜெயந்தன், லயன் டபிள்யூ.ஏ.ரெசாறா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-ஐ-25)

# நன்றியுள்ள நாயின் மனித நேயம்

கொழும்பு, மே 21

நாய் நன்றி மிக்க பிராணி என்று சிறுவர்களுக்கான பாடப் புத்தகங்களில் பதியப்படுவது உண்டு. அத்தகைய பட்சமுள்ள நாய் குறித்த மனிதநேய நிகழ்வு, கேகாலை மாவட்டம், அரநாயக்க என்ற கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

அடைமழை பெய்து தள்ளியதால், ஏற்பட்ட மண்சரிவால் குறித்த பட்சமுள்ள நாயை வளர்த்தவர்கள் -- குடும்பத்துடன் மண்ணில் புதையுண்டதால், அவர்களைத் தேடி அங்கும் இங்கும், நிலை குலைந்து பெரும் குரலில் கத்திக் கொண்டு திரிந்தது.

அரநாயக்கவின் பெயர் பெற்ற விகாரையைச் சுற்றி அழுது புரண்டது. உடம்பு முழுவதும் சேற்றினால் மூடப்பட்டதால் அந்த நன்றி உள்ள பிராணியை, அதன் சுயரூபத்தைக் கண்டறிய முடியாது இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்மீது அனுதாபம் கொண்ட, கிராமத்தின் அன்பர் ஒருவர் தம்முடன் கூட்டிச் சென்று தூரத்தில் உள்ள ஓர் இடத்தில் விட்டார்.

ஆனால் அந்த நன்றி உள்ள பிராணி, சேற்றுக் குழிக்குள் குதித்து பெரும் குரலில் கத்திக் குளறியது.

அதன் ஏங்கிய நிலைகண்டு, மனம் சகிக்காமல் அந்த நன்றி உள்ள பிராணி தேடி அலைந்த, மண்ணில் புதையுண்ட அந்தக் குடும்பத்தவர்களது உடல்களைத் தேடும் பணியில் இரு இளைஞர்கள் ஈடுபட்டனர்.

அந்தோ பரிதாபம், புதைந்து போனவர்களைத் தேடிய இருவரும் அந்தச் சேற்றுக் குழியில் புதைய ஆரம்பித்த நிலையில் தெய்வ சித்தமாக அங்கு நின்ற ஏனையோரால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர். (அ)

# வற்றாப்பளைப் பொங்கலுக்கு இ.போ.ச. விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், மே 21

பிரசித்திபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், வடக்கின் ஏனைய பகுதிகளிலிருந்து அங்கு செல்பவர்களின் நன்மை கருதி விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.சாலை, பருத்தித்துறைச் சாலை, காரைநகர் சாலை, கிளிநொச்சி சாலை, மன்னார் சாலை, வவுனியா சாலை ஆகிய இடங்களிலிருந்தே விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் நாளை மறுதினம் காலை ஆரம்பமாகி மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை நிறைவடையும். அதற்காக நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை தொடக்கம் வற்றாப்பளைக்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லத் தொடங்கி விடுவர்.

அதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை, மறுநாள் திங்கட்கிழமை, அதற்கும் மறுநாள் செவ்வாய்க்கிழமை ஆகிய 3 நாள்களும் பயணிகளின் வருகைக்கு ஏற்ப வற்றாப் பளைக்கு விசேட பஸ் சேவை நடத்தப்படும்.

அத்துடன் கிராமப் புறங்களிலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்குச் செல்லும் அடியவர்கள் தாம் ஒரு குழுவாகச் சேர்ந்து இலங்கைப் போக்குவரத்துச் சேவை பஸ் சாலைகளில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், அவர்களது இடத்துக்கு பஸ்களை அனுப்பி வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச்சென்று மீண்டும் அவர்களது இடத்தில் சேர்க்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4)

# பொதுநலவாய அமைப்பும் இடர் பாதிப்புக்கு இரங்கல்

கொழும்பு, மே 21

சீரற்ற வானிலையால் நாட்டில் ஏற்பட்ட மண்சரிவு இடர்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பொதுநலவாய நாடுகள் அமைப்பு தமது அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

பொதுநலவாய அமைப்பின் சார்பாக இலங்கை மக்களுக்கு தமது கவலையை தெரிவித்துக் கொள்வதாக, அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் பெற்றீசியா ஸ்கொட்லன்ட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பிரார்த்திப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அழிவை எதிர்நோக்கியுள்ள குடும்பங்கள் மற்றும் நபர்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் ஊடாக உதவிக் கரம் நீட்டுவது குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இலங்கைக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குமாறு பொதுநலவாய நடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் பெற்றீசியா ஸ்கொட்லன்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-5)

# இலங்கை இடருக்கு சீனாவும் அனுதாபம்

இலங்கையில் இயற்கை இடரால் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு மற்றும் அழிவுகளுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், சீனா அனுதாபம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த சீனத் தூதுவர், யி சியான்லியாங், சீன அதிபர் ஜி ஜின்பிங் சார்பில், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த நெருக்கடியான கால கட்டத்தில், இலங்கைக்கு நிவாரணப் பணிகளில் உதவவும், மீள்கட்டுமாணப் பணிகளில் உதவவும் சீனாவினது விருப்பத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ சீனா முன்வந்துள்ளதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

# இடர் பாதிப்புக்களுக்கு உதவியளிக்க ஆஸி. தயார்

கொழும்பு, மே 21

இலங்கையில் இடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்குத் தயாராகவுள்ளதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு உதவிகளை வழங்கத் தயார் என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிசப் கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் மழை வெள்ளத்தால் உயிரிழந்த அனைவரினதும் குடும்பங்களுக்கும் அவர் இரங்கல் தெரிவித்துள்ளார். இலங்கையில் தங்கியிருக்கும் ஆஸ்திரேலியர்கள் பாதுகாப்பாக இருப்பதை குடும்ப உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல அபிவிருத்தித் திட்டங்களை நேற்று ஆரம்பித்து வைத்தார் வடக்கு முதல்வர்

கிளிநொச்சி,மே 21



கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதிகளையும், குடிதண்ணீர்த் திட்டங்களையும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் சபைச் செயலாளர் கணேசன் கம்சநாதன் தலைமையில், சந்தைக் கட்டடத் தொகுதிகள் மற்றும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு முதலமைச்சர் குறித்த கட்டடத் தொகுதிகள் மற்றும் குடிதண்ணீர் விநியோகங்களை ஆரம்பித்து வைத்தார்.

ஸ்கந்தபுரம் மற்றும் வட்டக்கச்சிப் பகுதிகளில் நெல்சிப் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 16 கடைத் தொகுதிகளும், மலையாளபுரத்தில் வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டமும் மற்றும் வட்டக்கச்சியில் அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவு என்பன ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு. பசுபதிப்பிள்ளை, வை. தவநாதன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், பிரதிப் பிரதம செயலாளர் எஸ்.யூ. சந்திரகுமாரன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி. கேதீஸ்வரன், கரைச்சிப் பிரதேசசெயலாளர் கோ. நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந. பிரபாகரன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(த-ஐ-21)

# கண்டி-தெல்தோட்டவில் கீழ் இறங்கியுள்ளது நிலம்

கண்டி மாவட்டம் தெல்தோட்டப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெல்தோட்ட குரூப் தோட்டத்தில், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நிலம் கீழ் இறங்கியுள்ளது. இதனால் 25 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் இடம் பெயர்ந்து கலஹா -தெல்தொட்ட குரூப் திருவள்ளுவர் தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

லயன் இலக்கம் 1, லயன் இலக்கம் 2, வீட்டு குடியிருப்பு தொகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்ப கட்ட நடவடிக்கையாக பிரதேச செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவினரால் உலர்உணவுப்பொருள்கள் உட்பட அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பாதிப்புக்குள்ளான மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், எங்களுக்கு தேவையான ஆரம்பக் கட்ட வசதிகள் யாவும் பூர்த்தியாகி உள்ளன. அடுத்த கட்டமாக எங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கும், தொடர்ந்து நிரந்தர வீடுகளுக்கும் செல்லச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர். இதேவேளை, கலஹா, டுனாலி, மல்பேரி பிரிவுக் கிராமத்தில் கால நிலை மாற்றத்தால் ஏற்பட்ட பெரிய நிலவெடிப்பின் காரணமாக 48 குடும்பங்களைச் சேர்ந்த 191 பேர் இடம்பெயர்ந்து டுனாலி தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமா கத் தங்கியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் பல இடங்களில் பெரிய நில வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வீடுகளும் வெடித்துள்ளன. நீர் ஓட்டம் மற்றும் கசிவு அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் இவர்களை குறித்த இடங்களில் இருந்து வெளியேறுமாறு இடர் முகாமைத்துவ அதிகாரிகள் அறிவுறுத்தலை வழங்கியுள்ளனர்.

(த-ஐ-5)

# வெளிநாட்டு உதவிப் பொருள்களுக்கு வரி விலக்களிப்பு

கொழும்பு, மே 21

இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வரும் வெளிநாடுகள் உதவிப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் அறிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும்போது, அமைச்சுகள் தனித்தனியே வழங்குவதைத் தவிர்த்து, இடர் முகாமைத்துவ அமைச்சினூடாக வழங்குமாறும் அவர் ஆலோசனை வழங்கினார்.

சீரற்ற கால நிலையால் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விளக்கமளித்தபோதே, அமைச்சர் ரவி கருணாநாயக்க இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

வெள்ளப் பாதிப்புகள் தொடர்பில் பல நாடுகளும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களை நன்கொடை செய்யவும் அந்த நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அதன் நிமித்தம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தேவையான பொருள்கள் பற்றி நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தால், அவற்றை வரியின்றி இறக்குமதி செய்ய முடியும்.

ஜனாதிபதியும், பிரதமரும் இதற்கான ஆலோசனையை வழங்கியுள்ளனர் - என்றார்.

(த-வ-5)

# யாழ். இளைஞர் சம்மேளனமும் வெள்ள நிவாரணப் பணிகளில்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளனம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம், கந்தரோடை இளைஞர் கழகம் ஆகியன இணைந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிக்குத் தயாராகி வருகின்றன.

வெள்ள இடர் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடங்கலாகத் தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவும் வகையில் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் உடைகள் என்பவற்றையும் சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பொருள் சேகரிப்பு முயற்சி இன்று சனிக்கிழமை யாழ் குடாநாடு முழுவதுமாக நடத்தப்படவுள்ளது. இதன்போது விசேட வாகனம் மூலமாக வர்த்தக நிலையங்களிலும் பொருள்களைச் சேகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இன்று சுன்னாகம் ,யாழ்ப்பாணம், திருநெல்வேலி,மானிப்பாய், சங்கானை ,பண்டத்தரிப்பு முதலான இடங்களில் இந்தப் பொருள் சேகரிப்புப் பயணம் இடம் பெறவுள்ளது.

பால்மாப் பொதிகள்,தேயிலை, சீனி, பிஸ்கட் பொதிகள் மற்றும் பாய், படுக்கைப் பொதிகள் என்பவற்றை வழங்க முடியும். 0775417659, 0750416493 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இவற்றை வழங்க முடியும்.

(து)

# சகல வைத்தியசாலைகளிலும் இனி பல் வைத்திய நிபுணர்கள்

வரணி,மே 21

தற்போது பிரதேச வைத்தியசாலைகளில் பல் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அதற்கமைவாக இன்னும் சில வருடங்களில் சகல வைத்தியசாலைகளுக்கும் பல்வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படுவர். இவ்வாறு மாகாண சுகாதார சேவைகள் மேலதிகப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் பிரதேச வைத்தியசாலையில் வேள்ட்விசன் நிறுவனத்தால் நிறுவப்பட்டிருந்த பற்சிகிச்சை நிலையத் திறப்பு விழா நிகழ்வின்போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வரணி வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம், எமது திணைக்களம் ஊடாக வேள்ட்விசன் அதிகாரிகளை அணுகி பற்சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்துத் தரும்படி கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமைவாக இங்கு பற்சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படுகிறது.

குறிப்பாக இந்த வைத்தியசாலை கடந்த 2, 3 ஆண்டுகளாக பல அபிவிருத்தி வேலைகளைக் கண்டுள்ளது. இந்த வைத்தியசாலைக்கு இன்னும் ஒரு வைத்திய அதிகாரி தேவை. மருத்துவர் நந்தகுமார் இது விடயம் தொடர்பில் தனது பரிந்துரையை வழங்கியுள்ளார். இன்னும் ஓரிரு மாதங்களில் மேலும் ஒரு வைத்திய அதிகாரி நியமிக்கப்படுவார்- என்றார்.

(த-ஐ-122)

# ஞான வைரவருக்கு இன்று பொங்கல்

யாழ்ப்பாணம். மே. 21

விசாகத் திருநாளை முன்னிட்டு காரைநகர் மேற்கு மாதடை கப்பம்புலம் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் விசேட பூசையுடன் கூடிய விசேட அபிசேகமும், பொங்கல் விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெற உள்ளது.

எனவே இன்றைய விசேட பூசைக்கு தேவையான பால், தயிர், இளநீர், பூ ஆகியவற்றை தந்துதவி, ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையிலும் கலந்து கொண்டு, ஞானவைரவரின் அருளைப் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

(வ-2)

வேலையாள்கள் தேவை
புதிய உணவகம் ஒன்றிற்கு காசாளர்
(சகல வேலைகளும் தெரிந்தவர்)
ரீமேக்கர்
கொத்து ரொட்டி போடுபவர்
ஓடருக்கு உணவு தரக்கூடியவர்களும்.
தொடர்பு : 077 868 5652

தேவை
ஆங்கில தட்டச்சு
இயந்திரம் தேவை.
தொடர்பு:
077 853 5693










சாவல் கட்டு கிராமிய கடற்றொழில் அமைப்பு
அறிவித்தல்
20.04.2016 அன்று சாவல்கட்டு கடற்றொழில் கிராமிய அமைப்பாக யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திரு.நா.ரமேஸ்கண்ணா முன்னிலையில் புதிய நிர்வாகிகளாக நாம் தெரிவாகியுள்ளோம் என்பதனை அனைத்து கடற்றொழில் சங்கங்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.
தலைவர்: மகேந்திரன் சிவசுதன்
செயலாளர்: வெள்ளிமயில் தங்கமுருகன்
பொருளாளர்: ர. ராஜேந்திரன்
நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு உடன் வாடகைக்கு

சாவகச்சேரி பஸ்தரிப்பு, நீதிமன்றம் முன்பாக தேவாலயவீதி, டச்சுவீதி ஆகிய இருவீதியாலும் போகக்கூடிய இடத்தில் நான்கு அறை இணைந்த குளியல் அறை பெரிய வரவேற்பறை வாகன தரிப்பிடம் உள்ள வீடு அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு வாடகைக்கு விடப்படும்.

**077 936 1366, 077 113 8513, 077 846 7526**

## தேவை

**கணவன், மனைவியாக திருக்கேதீஸ்வரம், சபாரத்தின சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்து மடத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்கக் கூடியவர்கள் உடன் வரவும்.**

த.துரைராசா, சபாரத்தின சுவாமிகள் மண்டபம்,
திருக்கேதீஸ்வரம், மன்னார்
**023 790 0002**

## பெயர்மாற்றம்

அல்வாய் வடக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **வின்சன் நிசன்** ஆகிய நான் எனது பெயரை **வின்சன் றிஷாந்** என மாற்றிக் கொண்டுள்ளேன். எனது புதிய பெயராகிய **வின்சன் றிஷாந்** எனப் பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே சகல ஆவணங்களிலும் ஒப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**அல்வாய் வடக்கு,**
**அல்வாய்** **வின்சன் றிஷாந்**

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/=ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **'தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்'** என்ற முகவரிக்கு 03.06.2016 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கவேண்டும்.

**பதவி : கணக்குப் பதிவாளர் (நிரந்தரம்)**
**சம்பள குறி இல. : 301/11,**
**வெற்றிட எண்ணிக்கை : 01**
**சம்பள அளவுத்திட்டம் : (13/2015 சுற்றறிக்கை)**
**14945 - 145x10-160x10=17955.00**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்டக் கணக்குப் பதிவாளர் அல்லது எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13ஆவது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அலுவல்களில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர் தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அலுவல்கள் பற்றிய இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பொதுவான நியந்தனைகள்:**

1. வயது 03.06.2015 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பனவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கப் பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.
6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதைத் தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**21.05.2016** **தலைவர்.**

# போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் தேவை

## கனேடியப் பிரதமர் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, மே 21

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்று கனேடிய அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 7 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டுக் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ருடோ வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

போரில் பாதிக்கப்பட்ட மக்கள் பலரையும் தான் சந்தித்திருப்பதாக குறிப்பிட்டுள்ள கனேடியப் பிரதமர், அவர்களின் காயங்கள் ஆற்றப்பட வேண்டும் என்பது மட்டுமன்றி, நீண்டகால நிலையான நல்லிணக்கமும், சமாதானமும் பேணப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இணைந்து செயலாற்றுவதற்கு இலங்கை அரசுக்குக் கடப்பாடு இருப்பதோடு, அதற்கான அழுத்தங்களையும் பிரயோகிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைகள் அர்த்த புஷ்டியாக அமையவேண்டுமாயின், வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அலுவலக நீதிபதிகளும் உள்வாங்கப்படவேண்டியது அவசியம் என்றும் கனேடியப் பிரதமர் தெரிவித்துள்ளார். (கு-வ-5)

## தனது வெளிநாட்டுப் பயணத்துக்கு அரசிடம் பணம் கேட்டவர் மகிந்த

### கயந்த கருணாதிலக தெரிவிப்பு

தனது சொந்த வெளிநாட்டுப் பயணத்துக்காக அரசிடம் பணம் கேட்டவர் மகிந்த ராஜபக்ச ஒருவரே என்று அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன பிரிட்டனில் நடந்த ஊழல் ஒழிப்பு மாநாட்டுக்கும், இந்தியாவுக்கும் பயணம் மேற்கொண்டு, அந்த நாடுகளின் தலைவர்களது ஏகோபித்த வரவேற்பையும், ஆதரவையும் பெற்று நாடு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச, தேர்தல் மோசடிக்குப் பிரபலமான உகண்டா ஜனாதிபதியின் பதவி யேற்பு நிகழ்வுக்கு சென்று வந்துள்ளார்.

மகிந்த கேட்டுக் கொண்டதற்கு இணங்க விமானபயணச்சீட்டுக்கானபணத்தைவெளி விவகார அமைச்சு ஏற்றுக் கொண்டது.

அதுவும், தான் முன்னாள் ஜனாதிபதி என்பதால் விமான நிலையத்தில் நீண்ட நேரம் காத்துக் கொண்டிருக்காமல் விடுதியில் தங்க வைக்க வேண்டும் என்றும் தனது பயணத்துக்கான ஏனைய செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வெளி விவகார அமைச்சிடம் மகிந்த கோரியிருந்தார்.

எனினும், ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கூட இவ்வளவு சலுகைகளைக் கேட்பதில்லை.

முன்னாள் ஜனாதிபதியொருவர் தனது தனிப்பட்ட பயணத்துக்கான பயணச்சீட்டுக்கான செலவை அரசிடம் கோருவது இதுவே முதல் தடவையாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பல வெளிநாட்டுப் பயணங்களைமேற்கொண்டிருந்தும்அதற்கான கட்டணத்தைக் கடந்த அரசிடம் அவர் ஒரு போதும் கேட்டதில்லை. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு விமான பயணச்சீட்டுக்கான கட்டணம் எதிர் காலத்திலும் வழங்கப்படலாமா என்பது குறித்து அரசு விரைவில் தீர்மானம் ஒன்றையும் மேற்கொள்ளும் – என்றார். (ற-ஐ-5)


## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள ஸ்தாபனம் ஒன்றுக்கு சைவசமய பற்றுடையவர் தேவை. (45 வயதுக்கு மேல் விரும்பத்தக்கது)

**071 623 6624**

## யுனிலிவர் பியூரிட் நீர் சுத்திகரிப்பு சாதனங்கள்

**சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி!**
**நீரிலுள்ள பக்டீரியா, வைரஸ், கல்சியம் மற்றும் நுண்ணுயிர்களை அகற்றுவது RO தொழில்நுட்பத்தால் மட்டுமே உவர் நீரையும் தூய்மையாக்கும் திறன் இதற்கு உண்டு. விசத்தன்மையுள்ள நீரையும் தூய்மையாக்கிப் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுத் தரும்.**



***விசேட விலைக்கழிவில் இம்மாதம் 25 ஆம் திகதி மட்டும்.**
***அரச ஊழியர்களுக்கு மட்டும் தவணைக் கட்டணங்களுக்கு வழங்கப்படும்.**

**மேலதிக விவரங்களுக்கு:**
**077 010 9562, 077 013 3514**
**வடமாகாண விநியோகஸ்தர்**

| Narayana Hard Ware Trader | House of Ceramic |
|---|---|
| Stanly Road, Jaffna. | K.K.S.Road, Jaffna. |
| **021 222 5390** | **021 222 9599** |

## GCE AL Examination - 2015
## Best performance award in Northern Province

DFFS · YMCA JAFFNA

**Jaffna YMCA**, in association
with **Direct Family Financial Support Canada**
Offers the following **Best Performance Awards**

**J T Arulanantham Award (Arts Stream)**
**S K Sandrasekeran Award ( Maths Stream)**
**Thangarani Francis Award (Bio Stream)**
**Kamaladevi & Nagalingam Award ( Commerce Stream)**

Each awardee will receive a cash gift of Rs. 40,000 and a certificate of merit from the YMCA, in Aug 2016

Eligible Students are requested to apply with their result grades, their rank at the **District level** and **island wide level** certified by the principal, to the General Secretary, YMCA, 109, Kandy Road, Jaffna.

Recipients who fulfil the selection criteria of **Direct family Financial Support** Are also eligible to receive a scholarship of **Rs.32,000** from the second year at the University.

General Secretary,
YMCA Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் மலையகம் பாதிப்பில்





கொழும்பு,மே 21

நாடு முழுவதும் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக நுவரெலியா, மாத்தளை, கண்டி, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் பெய்து வரும் அடை மழை காரணமாக இதுவரையில் 7 ஆயிரத்து 522 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 867 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக இங்கு அதிகரித்துள்ள குளிர்நிலை மற்றும் சீரற்ற தன்மையினால் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயங்கள், போக்குவரத்துத் தடைகள், வெள்ளப்பெருக்கு ஆகியவற்றுடன் அணைக்கட்டுக்கள் திறந்து விடும் தேவையும் ஏற்பட்டுள்ளது. சீரற்ற காலநிலை நீடித்துக் கொண்டிருப்பதால் பொது மக்களை அவதானமாகச்செயற்படுமாறும், எந்த நேரத்திலும் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

பதுளை, நுவரெலியா மாவட்டங்களின் பல பகுதிகளில் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள மண்சரிவு காரணமாக ரயில், வீதிப் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்துள்ளன.

மேலும் மஸ்கெலியா – சாமிமலை ஸ்டர்ஸ்பி சூரியகந்தை தோட்டத்தில் மண்சரிவு காரணமாக 18 குடும்பத்தைச் சேர்ந்த 96 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சூரியகந்தை தோட்ட ஆறாம் இலக்க லயன் குடியிருப்பின் பின்புறத்தில் கடந்த 13 ஆம் திகதி இரவு மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அத்தோடு கடந்த 15 ஆம் திகதி அன்றும் தொடர்சியாக மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர். மண்சரிவினால் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. எனினும் உயிராபத்துகள் எவையும் இல்லையெனவும், சில பொருள்கள் மட்டும் சேதமாகியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

தொடரும் மழை காரணமாக இந்தப் பகுதியில் பெரிய அனர்த்தம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக இராணுவத்தினரை குறித்த பகுதியில் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


இதேவேளை கொத்மலை பிரதேசத்துக்குட்பட்ட பலபொக்குன பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வந்த மழை மற்றும் காற்று காரணமாக மரம் ஒன்று, வீடுகளின் மேல் சரிந்து வீழ்ந்ததால் இரு வீடுகளும் ஒரு பாரவூர்தியும் சேதமுற்றுள்ளன. மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டு திருத்தப் பணிகளை கொத்மலை மின்சார சபை மேற்கொண்டது. அனர்த்தம் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளை கொத்மலை பிரதேச சபை இடர் முகாமைத் துவ பிரிவினரும் பொலிஸார், கிராம சேவகர் மற்றும் பொது மக்கள் உதவியுடன் மேற்கொண்டு வந்தனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென் ஜோன்டிலரி கீழ் பிரிவு தோட்டத்தில் மண்சரிவு அபாயத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். சென்ஜொன்டிலரி தோட்டத்தின் 12 ஆம் 16 ஆம் இலக்க லயன் குடியிருப்பிலுள்ளவர்களே இவ்வாறு தோட்ட மருந்தகத்திலும், சிறுவர் பராமரிப்பு நிலையத்திலும் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் கடந்த 16 ஆம் திகதி அன்று குறித்த குடியிருப்பு பகுதியில் நிலத்தில் ஏற்பட்ட வெடிப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு வட்டவளை நகரில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு பின்புறம் அமைக்கப்படிருந்த பாதுகாப்பு மதில் நிலம் தாழிறங்கியதால் இடிந்து வீழ்ந்துள்ளது.

மதில் திடீரென சரிந்து வீழ்ந்த போதிலும் எவருக்கும் பாதிப்புகள் இல்லையென வட்டவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் ரொத்தஸ் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள வீடென்றில் ஏற்பட்ட மண்சரிவையடுத்து அவ்விடத்திலிருந்து ஐந்து குடியிருப்பாளர்களை உடனடியாக வெளியேறுமாறு கட்டட அகழ்வாராய்ச்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இதே வேளை குறித்த குடியிருப்புகளில் பெரிய வெடிப்புகள் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த இடர் குறித்து கொட்டியாகலை கிராம உத்தியோகத்தரின் ஊடாக அம்பகமுவ பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், தங்கவைக்கபட்டுள்ள மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லிந்துலை, சென்கூமஸ் லெமினியர் தோட்டத்தில் கடந்த 18 ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 7 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மேற்படி 36 பேரும் கொழுந்து மடுவத்திலும், பொது இடங்கள் மற் றும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என லிந்துலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

2015 ஆம் ஆண்டு பெய்த கடும் மழையால் குடியிருப்புப் பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டதையடுத்து, நுவரெலியா மாவட்ட இயற்கை இடர் முகாமைத்துவ அதிகாரிகளால், மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தெல்தோட்ட பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெல்தோட்ட குரூப் தோட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நிலம் கீழ் இறங்கியுள்ளதால் லயன் இலக்கம் 1, லயன் இலக்கம் 2 வீட்டுக் குடியிருப்பு தொகுதிகள் வெடிப்புற்ற நிலையில், 25 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் இடம் பெயர்ந்து கலஹா தெல்தொட்ட குரூப் திருவள்ளுவர் தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக பிரதேச செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கல் உட்பட அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலஹா, டுனாலி, மல்பேரி பிரிவு கிராமத்தில் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட நில வெடிப்பின் காரணமாக 48 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் இடம் பெயர்ந்து டுனாலி தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளனர். நீர் ஓட்டம் மற்றும் கசிவு அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் இவர்களைக் குறித்த இடங்களில் இருந்து வெளியேறுமாறு இடர் முகாமைத்துவ அதிகாரிகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (த-ஐ)

**வேலையாள் தேவை**

பண்ணையில் நிரந்தரமாகத் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய நபர் தேவை

077 318 7946

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த பூராடம், 6இல் சூரி, செவ். கி.பாவம் 16 உடைய தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சைவ போசனம் விரும்பத்தக்கது.

075 545 8216, 077 315 1593

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம், கொழும்பு பஸ் ஆசன பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஆள்கள் தேவை

குறிப்பு: ஆண்கள் மட்டும்.
தங்கும் இடம் இலவசம்

077 325 8492

**வீடு விற்பனைக்கு**

தெல்லிப்பழை, K.K.S. வீதியில் "தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி"இற்கு அருகில் 3 பரப்புக் காணியில் 3 அறைகள், குசினி, இரண்டு குளியல் அறைகள் மற்றும் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது. தரகர் தேவையில்லை.

077 184 0858, 021 205 9213

**வேலைவாய்ப்பு**

இலங்கையில் பிரசித்திபெற்ற பிரபலமான ஐஸ்கிறீம், ஜாம், சொக்லட், நூடில்ஸ், பால்மா, பிஸ்கட், டொபி உற்பத்தி செய்யும் இடங்களுக்கும் வேலையாள்கள் தேவை. அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் இலவசம். ஒரு நாளைக்கு 1200/=. கிழமைச் சம்பளம் 10,000/= மாதச் சம்பளம் 35,000/=. விரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். வயது 18-55 வரை. வரும்நாளிலே வேலைக்குச் சேர்க்கப்படுவர். தீம்க்காணும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

071 147 5324, 077 494 3502

**கணக்காய்வு பரீட்சகர் சேவை தரம் II ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை – 2016**

செப்டம்பர்-2016 இல் நடைபெறவுள்ள பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்புக்கள் தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் கொண்ட தலைநகர் மற்றும் யாழ் மண்ணின் முன்னணி விரிவுரையாளர்களது வழிகாட்டலில்

ஆரம்பம்: 28-05-2016
அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது
பதிவுகளுக்கு முந்துங்கள்

INSTITUTE OF BUSINESS MANAGEMENT
Quality Learning for Quality Life
01, 2nd Lane, Power House Rd, Jaffna (Near Bus Stand)
Phone: 021 222 4111 Hotline: 0777 83 66 53

**அபி பஷன் வேல்ட்**

ஒரு வருடகால பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் பரிசு மழையை வென்றிடுங்கள்

ரூபா 10,000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்

முதலாம் பரிசு: 1 பவுண் தங்க நாணயம்
இரண்டாம் பரிசு: குளிர்சாதனப் பெட்டி
மூன்றாம் பரிசு: தொலைக்காட்சிப் பெட்டி

மேலும் பல பெறுமதிமிக்க ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

எனவே வாரீர் பரிசில்களை வென்றிடுங்கள்
மே 1 முதல் மே 22 வரை



யாழ். மண்ணில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அனைத்து ஆடைத்தெரிவுகளுடன் கூடிய மிகவும் பிரமாண்டமான புடவை மாளிகை...

ABI Fashion World
No:112, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 3738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 22.04.2016 வெள்ளிக்கிழமை இறைபத மடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி

**தெய்வானைப்பிள்ளை கந்தையா**

அவர்களின் வீட்டுக்கிரியைகள் நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திரு.சிவராசா (சேவையர்) இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கிரியைகளிலும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
26
11
1932



மறைவு
21
04
2016

**அமரர் கந்தையா சிவகுரு**

(ஓய்வு நிலை ஆசிரியர், பெரியபுலம் மகாவித்தியாலயம், தலைவர் விஸ்வலிங்க மகாகணபதி தேவஸ்தானம், ஸ்தாபகர் ஐங்கரன் சனசமூக நிலையம்)

21.04.2016 சித்திரை பௌர்ணமி தினத்தில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரது ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் இன்று (21.05.2016) சனிக்கிழமை நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில் நடை பெறும் இப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
20
11
1937



இறப்பு
05
06
2001

**சிவசம்பு சிவயோகேஸ்வரன்**

(ஓய்வு பெற்ற பிரதி பிரதம தபால் அதிபர் - யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் பதினைந்து கடந்தாலும்
தாங்கள் நினைவுகளுடன் - நாம்
என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மனைவி,
பிள்ளைகள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி **ப. ஜெயகௌரி** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி கனகம்மா கந்தசாமி**

காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்.

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அன்னை மடியில் 01.07.1963

இறைவன் அடியில் 21.04.2016

**திருமதி தயாவதி நவகுமாரன்**

(பருத்தித்துறை வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி)



21.04.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வின்போது நேரடியாக வந்து கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், பத்திரிகை மூலமாகவும், தொலைத் தொடர்பு ஊடகங்கள் ஊடாகவும் , கடித மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், பதாகைகள் மூலமாகவும், மலர் வளையங்கள் வைத்தும், அஞ்சலி உரைகளை நிகழ்த்தியும், அஞ்சலி செலுத்திய அனைத்து உள்ளங்களுக்கும் அவர் மறைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து இறுதி நிகழ்வுகள் நிறைவு பெறும்வரைக்கும் சகல வழிகளிலும் உதவியும், ஒத்தாசையும் நல்கிய நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசனமும் சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறும்.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!


இல.17/45, பண்டாரக்குளம் மேற்கு
ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

ந.நவகுமாரன் (கணவர்)
Retired Staff -
Commercial Bank P.L.C Jaffna.

## மரண அறிவித்தல்

**வீரகத்தி நடராஜா**

(முன்னாள் அலுவலர் - இலங்கை துறைமுக அதிகாரசபை)



தோற்றம் 05.08.1928 — மறைவு 11.05.2016

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga வை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராஜா 11.05.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், நவீனன், நிர்மலன், தேவகி (இலங்கை), கிரிஜா, நிரஞ்ஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியம் (பிரித்தானியா), காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் கனகம்மா (பிரித்தானியா), சண்முகராஜா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவகுமாரி, நீலாவதி, Dr.சிவாலன் (இலங்கை), ஜெயச்சந்திரன், கிருஷ்ணா (மோகன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் புஷ்பராணி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன், சரஸ்வதி, வாலாம்பிகை, கதிர்வேலு ஆகியோரின் அன்பு மைத்துனரும், சின்டி பூமிகா, எமிலிவானகா, டேஸ்சிநீருகா, அரவிந்தன் (யாழ்.மருத்துவபீடம்), ஆரணி, ஆரமுதன், கபீஷன், ஷெரினா, சுவேதா, கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கமலாதேவி (மனைவி) - +190 527 97959
நவீனன் - (மகன்) + 141 6471 8091
திருமதி தேவகி சிவபாலன் (மகள்) - 077 045 6493

### கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு

வடமாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் நாளை பி.ப. 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு, முதல் நியமனக் கடிதம், கடமை நிறைவேற்று அதிபர் நியமனக் கடிதம், உயர் கல்விச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் தவறாது கூட்டத்துக்குச் சமூகம் தரவும் வேண்டும் எனவும் சமூகம் தராதவர் தொடர்பில் சங்கம் கவனம் செலுத்ததாது எனவும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (வ)

### கல்விக் கண்காட்சி

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்விக் கண்காட்சி எதிர் வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைஅதிபர்அருட் சகோதரி திரேசம்மா சில்வா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கல்விக் காண்காட்சியில் மாணவர்களின் ஆக்கங்கள், செயற்றிறன்கள் என்பன காட்சிக்கு வைக்கப் படவுள்ளன. (த-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிடக் கூட்டாக இணைவோம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 21

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்களுக்கான அவசர உதவிகள் தேவைப்படுமிடத்து அவற்றை விரைந்து முன்னெடுப்பதற்கு நாம் அனைவரும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும் எனவும், இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரையும் வினயமாக வேண்டி நிற்பதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய இடர் தொடர்பில் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் 7 ஆவது ஆண்டு நினைவேந்தல் துன்பியல் நிகழ்வுகளில் கலந்து கொண்டு, உறவுகளை இழந்த பெற்றோர்கள், சகோதரர்கள் ஆகியோரின் துன்பச் சுமைகளை நாமும் பகிர்ந்து கொண்டு திரும்பிய வேளையில் இடர் முகாமைத் துவ நிலையத்தால் வெளியிடப்பட்ட செய்தி எம் அனைவரையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் கொழும்பை அண்டியுள்ள களனி கங்கைப் பகுதியிலும் மற்றும் கேகாலை மாவட்டத்தில் உள்ள புளத்ஹொஹப்பிட்டிய பிரதேசத்திலும் ஏற்பட்ட வெள்ள மற்றும் பெரிய மண்சரிவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மூன்றரை லட்சத்தையும் தாண்டியுள்ளதாக அந்தச் செய்தி தெரிவித்துள்ளது.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவர்களுக்கான அவசர உதவிகள் தேவைப்படுமிடத்து அவற்றை விரைந்து முன்னெடுப்பதற்கு நாம் அனைவரும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும் எனவும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் அனைவரையும் வினயமாக வேண்டி நிற்கின்றேன்.

> முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் 7 ஆவது ஆண்டு நினைவேந்தல் துன்பியல் நிகழ்வுகளில் கலந்து கொண்டு, உறவுகளை இழந்த பெற்றோர்கள், சகோதரர்கள் ஆகியோரின் துன்பச் சுமைகளை நாமும் பகிர்ந்து கொண்டு திரும்பிய வேளையில் இடர் முகாமைத்துவ நிலையத்தால் வெளியிடப்பட்ட செய்தி எம் அனைவரையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

மண்சரிவு ஏற்படுவதற்கான காரணங்கள், குடியிருப்புப் பிரதேசங்களின் ஸ்திரத் தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து இது போன்ற பெரிய மண்சரிவுகளில் இருந்து மனித உயிர்களைப் பாதுகாக்க அரசு திட்டங்களை வகுக்க வேண்டும்.

முன்னர் கொஸ்லந்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்ட போதும் அவ்விடத்தைப் பார்வையிட்ட பின்னர் இதே கருத்தையே வெளிக்கொண்டு வந்தேன்.

தற்போது மீட்புப் பணிகளில் ஈடுபடுகின்ற மீட்புப் பணியாளர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று அந்த அறிக்கையில் உள்ளது. (த-ஐ-5)

### குருபூசை

யாழ்ப்பாணம்,மே.21

ஆனைக் கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நாயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் திருமதி.சிவமலர் சுந்தரபாரதி சிறப்புரையாற்றவுள்ளார். (த-ஐ-ரி4)

### நாடகப் போட்டிகள் பிற்போடப்பட்டன

றோயல் கல்லூரியினால் இன்றும், நாளையும் நடத்தப்படவிருந்த நாடகப் போட்டிகள் சீரற்ற காலநிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் இன்றும், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான போட்டிகள் நாளையும் நடைபெறவிருந்தன. ஆனால் கல்வி அமைச்சால் சீரற்ற காலநிலை காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டதையடுத்து இந்தப் போட்டிகள் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாகவும் போட்டிகள் நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-422)

## இரு தனியார் நிறுவனங்களில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,மே 21

முன்னணி தனியார் நிறுவனங்கள் இரண்டில் 300 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவித்துள் ளார்.

இந்த ஆட் சேர்ப்பானது ஐ.ஓ.எம் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில், யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப. ஒரு மணிவரை இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தால் நடைமுறைப்படுத் தப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கு அமைய, முன்னணி தனியார் நிறுவனங்கள் இரண்டில் 300 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பும் மற்றும் தொழிற் பயிற்சியின் பின் என்.வி.கியூ - 3ஆம் தர சான் றிதழ் வழங்கல் ஆகியவற் றுக்கான நேர்முகத் தேர்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வில் க.பொ.த சாதாரண தரத்தில் குறைந் தது 4 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தராதரத்தை உடைய விண்ணப்பதாரிகள் பங்குபற்றி தொழில் வாய்ப்பைப்பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விளக்கங்கள் அறிவுறுத்தல்களை 0212219359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாக அல்லது பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-21)

## நோயாளர்கள் தங்கும் பகுதி உடைந்து விழும் நிலையில்

சாவகச்சேரி,மே 21



சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த 2005 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு உளநலச் சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை, மார்பு நோய் சிகிச்சை உட்பட்ட சிகிச்சைகள் நடை பெற்று வந்த கட்டடத்தின் நோயாளர் தங்கும் பகுதி முறிந்து விழும் நிலையில் காணப்படுகிறது என நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உளநலச் சிகிச்சை நிபுணர் சிவயோகனின் முயற்சியால், பத்து லட்சம் ரூபா செலவில் உளநலச் சிகிச்சைப் பிரிவுக்கென தனியான கட்டம் அமைக்கப்பட்டது. கிளினிக்குக்கு வரும் நோயாளர்கள் மற்றும் உதவியாளர்களின் நலன் கருதி வைத்தியசாலையில் போரின்போது சிதைவடைந்த கட்டடங்களிலிருந்து மீட்கப்பட்ட பொருள்களினால் இந்தப் பகுதி அமைக்கப்பட்டது.

இந்தப் பகுதிக்கு நடப்பட்ட மரங்கள் மற்றும் கூரை மரங்கள் பழுதடைந்து காணப்படுவதால், எந்தநேரமும் உடைந்து விழும் அபாய நிலை காணப்படுகிறது.

வாரத்தில் இரு தினங்கள் இந்தக் கட்டடத்தில் கிளினிக்குகள் நடத்தப்படுவதால்அதனைப்புதுப்பித்து வழங்குமாறு நோயாளர்கள் முறையிட் டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது, கட்டடம் புனரமைப்பதற்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதெனவும், இந்த நிதி போதாத நிலையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க நிதியையும் பெற்று புனரமைக்கப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.(த-ஐ-9)

## போதையில் சாரத்தியம்; மூவருக்கு கடூழியச் சிறை

மது போதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய மூன்று இளைஞர்களுக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றால் 2 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திய குற்றச்சாட்டில் 7 பேர் யாழ்ப்பாணப் பொலிஸாராலும், கோப்பாய் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர்.

அவர்களில் நால்வர் தமக்கெதிரான குற்றச்சாட்டை மறுத்ததன் காரணமாக அவர்களுடைய வழக்குகள் விளக்கத்துக்கு நியமிக்கப்பட்டதுடன், ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையிலும், 30ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய மூவரும் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். அவர்களில் சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதமும், 2 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும், ஏனைய இருவருக்கும் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதத்துடன், 2 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (த-ஐ-183)

## கிராமத்துக்கு ஒரு மில்லியன்; முன்மொழிவுகளுக்கு அனுமதி

வலி.வடக்கு, மே 21

கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்துக்கான முன்மொழிவுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும், கிராம சேவையாளர்கள் ஊடாகவும், கிராம மக்கள் ஊடாகவும் முன்னுரிமைப் படுத்தப்பட்டுத் தெரிவு செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருந்தன.

வலி.தெற்குப்பிரதேசஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஒரு மில்லியன் திட்டத்துக்கான முன்மொழிவுகள்சபையின்அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு, அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து இன்று ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், எதிர்வரும் 30 ஆம் திகதி வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், 31 ஆம் திகதி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் மழையால் 4,000 ஏக்கர் பயிர்கள் அழிவு

கிளிநொச்சி,மே 21
தொடர் மழையால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக பயிர் செய்கையில் 4 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பயிரினங்கள் அழிவடைந்துள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட செயலகப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலும் கடந்த இரண்டு நாள்களாக கனமழை பெய்தமையால், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மக்கள் வாழ்விடங்களுக்குள்ளும், பயிர்ச்செய்கை நிலங்களுக்குள்ளும், வர்த்தக நிலையங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்து பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

கிளிநொச்சிமாவட்டத்தில்செய்கை பண்ணப்பட்டு வெள்ளப் பெருக்கால் அழிவடைந்துள்ள நெற்பயிர்ச்செய்கை, சிறுதானியப் பயிர்ச்செய்கை என்பவற்றின் விவரத்தின் படி, அக்கராயன் பகுதியில் 2 ஆயிரத்து 790 ஏக்கர் சிறுபோக நெற்செய்கையில், 2ஆயிரத்து 500 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது. வன்னேரிக்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 121 ஏக்கர் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

இதேவேளை, இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 500 ஏக்கர் சிறு தானியப் பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது என அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இரணைமடுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றமையால், இம்முறை இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு, கிளிநொச்சியின் ஏனைய குளங்களின் கீழான சிறுபோக நெற்செய்கையே இடம்பெற்றிருந்தது.

> இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 500 ஏக்கர் சிறு தானியப் பயிர்ச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது என அந்த புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தற்போது பெய்த கனமழை வெள்ளப் பெருக்கால் குறித்த 4 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பயிரினங்கள் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கிளிநொச்சியில் பெய்த பெருமழையால் குளங்களில் நீர் தேங்கியுள்ளமையைப் பயன் படுத்தி, வெள்ளப்பெருக்கால் பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ள வயல் நிலங்களில் துரித மாக மீள்விதைப்பை மேற்கொள்வது பற்றிய முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் இலங்கையில் அசாதாரண காலநிலை தொடர்ந்தும் காணப்படுகின்றமையால் கடன்பட்டுப் பெருமளவு பணத்தைச் செலவு செய்து மீண்டும் விதைத்துப் பயிரழிவுகள் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்துடனும் கவலையுடனும் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்தோடு போரால் பெரிதும் பாதிக்கப்பட்டுக் கிளிநொச்சியில் மீள்குடிமர்த்தப்படும்போது ஆரம்ப காலங்களில் வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்ற பணத்தைப் பயன்படுத்தி நெற்செய்கையில் ஈடுபட்டிருந்தோம். அப்போது ஏற்பட்ட கனமழை வெள்ளப்பெருக்கால் வயல் நிலங்கள் முற்றாக அழிவடைந்தன. இந்தநிலையில் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களைத் தற்போது வரை திருப்பிச் செலுத்த முடியாது அவலப்பட்டு நிற்கின்றோம்.

இந்த நிலையில் மீண்டும் மீண்டும் இவ்வாறான அழிவுகள் எங்களைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது என விவசாயிகள் மேலும் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் இவ்வாறு அழிவடைந்த பயிர்கள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்ட ஈடுகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அண்மையில் மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகத்துடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஜ-21-426)

## வவுனியா தெற்குக் கல்வி வலய ஆசிரியர் மாநாடு அடுத்த வாரம்

வவுனியா,மே 21
வவுனியா தெற்குக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் மாநாடு எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் வலயப்பணிமனையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களுக்கான தொழில்சார்வாண்மையை ஏற்படுத்துதல், தொழில்சார் ஊக்கத்தை வழங்குதல், நவீன கற்பித்தல் சாதனங்களின் மூலம் கற்பித்தலை மேம்படுத்துதல், கற்பித்தல் சார் அனுபவங்களை வழங்குதல், போன்றவற்றை நோக்கமாகக் கொண்டே இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

முதல்நாள் வியாழக்கிழமை இடம்பெறும் நிகழ்வு முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி க.சீனிவாசகம் அரங்கில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார். தொடர்ந்து பேருரையை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி சி. ஸ்ரீ சற்குணராசா நிகழ்த்துவார்.

இரண்டாம் நாள் வெள்ளிக்கிழமை இடம்பெறும் நிகழ்வு முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வீ.ஆர் ஏ.ஒக்ஸ்வேல்ட் அரங்கில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் கலந்து கொள்வார். தொடர்ந்து பேருரையை பேராசிரியர் மா.சின்னத்தம்பி நிகழ்த்துவார்.

இந்த மாநாடானது ஆய்வரங்கு, கண்காட்சி, பேருரைகள், கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இடம்பெறவுள்ளது. கண்காட்சி வவுனியா சைவப்பிரகாச மண்டபத்தில், தரம் 1 தொடக்கம்; க.பொ.த உயர்தரம் வரையிலான மாணவர்களின் அனைத்து பாடங்களுக்கான கற்பித்தல் சாதனங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (த-ஜ-21-402)

## வவுனியா மாவட்டத்தில் 910 வீடுகளுக்கு அனுமதி

மீள் குடியேற்ற அமைச்சின் நிதிப் பங்களிப்பில் வவுனியா மாவட்டத்தில் 8 லட்சம் ரூபா பெறுமதியிலான, 910 வீடுகள் அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்தில் வவுனியா மாவட்டத்துக்கு 910 வீடுகள் அமைப்பதற்கும், 50 வீடுகள் திருத்தத்துக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்தத் திட்டத்துக்கு மேலதிகமாக 55 ஆயிரம் ரூபா செலவில் ஆயிரம் கழிப்பறைகளுக்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தத் திட்டங்களுக்கான பயனாளிகளுக்கான விநியோகங்கள் விரைவில் மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-101)

## பல மாதங்கள் கவனிப்பின்றி சந்தைக் கட்டடத் தொகுதி



மன்னார்,மே 21
மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை மீள் குடியமர்வுத் திட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள, சந்தைக் கட்டடத் தொகுதி கடந்த பல மாதங்களாக பராமரிப்பு அற்ற நிலையில் இருப்பதாகப் பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முசலி பிரதேச சபையிடம் கட்டடத்தை வாடகைக்கு எடுத்து நடத்துவதற்கு யாரும் முன்வராமையினாலேயே, இந்தக் கட்டடம் பூட்டப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அன்ரன் செரோன் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முசலி பிரதேச சபையின் ஊடாகவே இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது.

இந்தச் சந்தை இது வரை காலமும், யாருக்கும் பயன் இல்லாமல் ஆடு, மாடுகளின் உறைவிடமாக மாறி வருகின்றது. பல லட்சம் ரூபா செலவில் மக்கள் பணத்தில் அமைக்கப்பட்டுள்ள குறித்த சந்தைத் தொகுதிக் கட்டடங்களை ஒழுங்கான முறையில் பராமரிக்காமல் முசலி பிரதேச சபையினர் அசமந்தமாக விட்டுள்ளனர்.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, இந்தப் பிரதேசத்துக்குரிய சொத்துகளைப் பாதுகாக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

மக்களுடைய கோரிக்கை தொடர்பாக மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, ஆரம்பத்தில் குறித்த பிரதேசத்தில் அதிகமான மக்கள் குடியமர்ந்தனர். இதனால் அந்தக் கடைகள் இலாப நோக்கத்தைக் கருத்திற் கொண்டு கட்டப்பட்டன. தற்போது அங்கிருந்து பலர் வெளியேறியுள்ளனர். இதனால் சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதேச சபையால் கட்டடத்துக்காகக் கோரப்படுகின்ற வாடகையைச் செலுத்த முடியாமையினாலேயே இந்தக் கட்டடங்களை மக்கள் பெற்றுக் கொள்ள முன்வர வில்லை.

இதனால் இந்தக் கட்டடங்கள் பூட்டப்பட்டுள்ளன. தற்போது கட்டடத்துக்கான வாடகையைக் குறைத்து மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.-என்றார். (த-ஜ-56-21)

## கிளிநொச்சியில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை

வலி.வடக்கு, மே 21
சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினர், போரால் கடும் பாதிப்புக்குள்ளான வன்னி மாவட்டத்தின் மன வளர்ச்சி குன்றிய மாணவர்களின் கல்வியை விருத்தி செய்யும் நோக்கில் முதலாம் பண்ணை வீதி, கனகபுரம், கிளிநொச்சியில் மனவிருத்திப் பாடசாலையை நிறுவியுள்ளனர்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சியில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், மகாதேவா ஆச்சிரம முதல்வர் சிவஸ்ரீ கணேசானந்த சுவாமிகள், அமெரிக்கா கவாய் ஆதீனம் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், யாழ்ப்பாணம் சின்மயாமிசன் முதல்வர் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், கிளிநொச்சி சின்மயாமிசன் முதல்வர் பிரம்மச்சாரி சிவேந்திரா சைதன்ய சுவாமிகள், காவேரி கலாமன்றப் பணிப்பாளர் வண.பிதா சி.யோசுவா ஆகியோர் நிகழ்த்துவர். (த-ஜ--25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 93 பாடசாலைகள் இன்னமும் மூடிய நிலையில்

யாழ்ப்பாணம், மே 21
வடக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 91பாடசாலைகளில் 93 பாடசாலைகள் இன்று வரை மூடப்பட்ட நிலையிலேயே உள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

> யாழ்ப்பாணத்தில் 57 பாடசாலைகளும் , வவுனியாவில் 20 பாடசாலைகளும் , கிளிநொச்சியில் 8 பாடசாலைகளும், மன்னாரில் 5 பாடசாலைகளும் , முல்லைத்தீவில் 3 பாடசாலைகளும் இன்றுவரை இயங்காமல் உள்ளன. இவ்வாறு வட மாகாணத்தில் மொத்தம் 93 பாடசாலைகள் இயங்காத நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணத்தில் போருக்கு முன்பு ஆயிரத்து 91பாடசாலைகள் இயங்கிய போதிலும், இன்று வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயத்திலும் மொத்தமாக 998 பாடசாலைகளே இயங்குகின்றதாக வட மாகாண கல்வி அமைச்சின் புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்தின் வடக்கு கல்வி வலயத்தில் 93 பாடசாலைகள் உள்ளன. இங்கு 85பாடசாலைகளே இயங்குகின்றன. அதேபோன்று தெற்கு வலயத்தில் 111 பாடசாலைகள் உள்ள போதும், 99 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன. இவ்வாறு வவுனியா மாவட்டத்தில் உள்ள 204 பாடசாலைகளில் இன்று வரை 184 பாடசாலைகளே இயங்கும் நிலையில் 20 பாடசால்கள் இயங்காத நிலையில் உள்ளன.

அதேபோன்று மன்னார் மாவட்டத்தின் மன்னார் வலயத்தில் உள்ள 92 பாடசாலைகளில், 90 பாட சாலைகளும் , மடுக் கல்வி வலயத்தில் உள்ள 54 பாடசாலைகளில், 51 பாடசாலைகளுமாக மொத்தம் உள்ள 146 பாடசாலைகளில் 141 பாடசாலைகள் இயங்குகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரை இங்கு ஒரேயொரு கல்வி வலயம் மட்டுமே உள்ளது. இங்கே 112 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் தற்போது 104 பாடசாலைகளே இயங்குகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இங்கு இரு கல்வி வலயங்கள் உள்ளன. அதில் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 65 பாடசாலைகள் உள்ள போதும் 62 பாடசாலைகள் இயங்கும் நிலையில், துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 61 பாடசாலைகளும் இயங்குகின்றன.

இதேவேளை குடாநாட்டின் 5 கல்வி வலயங்களிலும் உள்ள 503 பாடசாலைகளில், 446 பாடசாலைகள் மட்டுமே இயங்கும் நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று வரை 57 பாடசாலைகள் இயங்காத நிலையில் உள்ளன.

இவற்றின் பிரகாரம் மாவட்ட ரீதியில் யாழ்ப்பாணத்தில் 57 பாடசாலைகளும் , வவுனியாவில் 20 பாடசாலைகளும் , கிளிநொச்சியில் 8 பாடசாலைகளும், மன்னாரில் 5 பாடசாலைகளும் , முல்லைத்தீவில் 3 பாடசாலைகளும் இன்றுவரை இயங்காமல் உள்ளன. இவ்வாறு வட மாகாணத்தில் மொத்தம் 93 பாடசாலைகள் இயங்காத நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-101)

## மூத்த பிரசைகள் 63 பேருக்கு கண் வில்லைகள் வழங்கல்

அச்சுவேலி, மே 21
வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூத்த பிரசைகள் 63 பேருக்குச் சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் தேசிய செயலகம் கண் வில்லைகளை வழங்கியுள்ளது.

கண்வில்லை பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு கண்வில்லைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார்.

மூத்த பிரசைகளுக்கு நடத்தப்பட்ட கண்பரிசோதனை கிளினிக்கில், கண்வில்லை பொருத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட 63 பேருக்கும் உரிய கண்வில்லைகளை சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் தேசிய செயலகம், வலி.கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

கண்வில்லை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவின் ஊடாகக் கண் வில்லைகள் கையளிக்கப்படுகின்றன. (த-ஐ-11)

## ஓட்டோவில் சென்று கொள்ளை;
## சி.சி.ரி.வி கமராவின் உதவியுடன் 2 பேர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம் மே 21
மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணின் கைப்பையை, ஓட்டோவில்சென்ற போது கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் .நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த 2 பேரும் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாண கச்சேரிக்கு முன்னால், கணவருடன் பெண்ணொருவர் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். மோட்டார்சைக்கிளில்பின்புறத்தில் அமர்ந்திருந்த குறித்த பெண் வைத்திருந்த கைப்பையை ஒட்டோவில் சென்ற இரண்டு இளைஞர்கள் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. தொடர்ந்து சம்பவம் தொடர்பாக அங்கிருந்த கடையொன்றின் கண்காணிப்புக் கமராவின் காட்சிகளின் அடிப்படையில் விசாரணை செய்த பொலிஸார், அன்றைய தினமே பூம்புகார்பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைக் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் நேற்று யாழ்ப்பாண நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். குறித்த இரண்டு இளைஞர்களையும் அடையாள அணிவகுப்புக்காக, அடுத்த வழக்குத் தவணைக்கு முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட மேலதிக நீதிவான் கஜநிதிபாலன், இருவரையும் இம் மாதம் 25 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (த-ஐ-4-103)

## நினைவுத்தூபி திரைநீக்க விழா

யாழ்ப்பாணம், மே.21
யாழ்ப்பாணம் சென்.றோக்ஸ் மறைந்த முன்னோடிகளின் ஞாபகார்த்தநினைவுத்தூபிதிரை நீக்க விழா நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு, நினைவுத்தூபியை திரை நீக்கம் செய்வார். (த-ஐ-ரி4)

## பூசகர் உட்பட மூவர் விபத்தில் படுகாயம்

வலி.வடக்கு, மே 21
காங்கேசன்துறை வீதி, மருதனார் மடத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒரு பூசகர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

முன்னால் சென்ற பாரவூர்தி ஒன்றை முந்துவதற்கு முற்பட்ட பூசகரும், திருமண வீடொன்றில் வீடியோ படப்பிடிப்பை மேற்கொண்டு விட்டு எதிராக வந்த இரு இளைஞர்களுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளானவர்களை அப்பகுதியில் நின்றவர்கள் ஓட்டோ ஒன்றின் மூலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். பின்னர் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (த-ஐ-25)



தமிழகத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக பதவியேற்கவுள்ள செல்வி ஜெயலலிதாவின் வெற்றியை யாழில் வெடி கொளுத்திக் கொண்டாடினார் யாழ். எம்.ஜி.ஆர்.கோப்பாய் சுந்தரலிங்கம். (த-ஐ)

## பதவிக்குரியவற்றை ஆளுநர் அறிந்திருந்தால் சிக்கலில்லை
### வடக்கு முதலமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம், மே 21
வடக்கு மாகாண ஆளுநர் தன்னுடைய பதவிக்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டால், எந்தவிதமான சிக்கல்களும் ஏற்படாது-இவ்வாறுவடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே விமர்சனங்களை முன்வைத்திருந்தார். இது தொடர்பில், வடக்கு மாகாண முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

ஆளுநர் தன்னுடைய பதவிக்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டாரானால் இவற்றில் எந்த விதமான சிக்கல்களும் ஏற்படாது என்று நான் கருதுகின்றேன். அதேநேரம் தற்போதைய ஆளுநர் ஓர் நல்ல மனிதர் என்றும் நான் கூறுகின்றேன்.- என்றார். (த-ற-5-101)

## குடாநாட்டில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே 21
யாழில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் குடாநாட்டின் பொலிஸார் மற்றும் மாகாண சபைப் பிரதிநிதிகள் , சிவில் சமூகப் பிரதிநிதிகள், மாவட்டச் செயலர் என 30 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் , அதற்குக் கூட்டாக மேற்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பில் கூடி ஆராய்ந்ததோடு அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் முடிவெடுக்கப்பட்டது.

இதற்காக உடனடியாகப் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டும் எனவும் , தமிழ் தெரிந்த பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதுடன், பொலிஸாருக்கான விண்ணப்பம் கோருவது உள்ளிட்ட சில முக்கிய முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. (த-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இயற்கையின் கோரத் தாண்டவம்
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் கோரத் தாண்டவம்







# நான் சத்தம் கேட்டு ஓடுவதற்குள் குடும்பமே மண்ணுள் புதைந்தது

## குடும்பத்தை இழந்த சுனில் சாந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 21

'மகனே, மழை பெய்யப் போகிறது சீக்கிரம் கடைக்குப் போய்வா' என்றார் அம்மா. இதையடுத்து கடையை நோக்கிப் புறப்பட்டேன். பாதித் தூரம் சென்றதும் கிராமத்தைத் திடீரென இருள் மேகம் சூழ்ந்து கொண்டது. என்று மில்லாதவாறு பெரிய சத்தமும் கேட்டது. வீட்டை நோக்கி ஓடினேன். அதற்குள் எல்லாமே முடிவடைந்து விட்டது. முழுக் குடும்பமுமே மண் ணுக்குள் புதைந்து விட்டது.

தனது தாய் (மல்லிகா), தந்தை (கருணா தாச) மற்றும் மருமகள் என்று முழுக் குடும்பத்தையுமே மண்ணுக்குப் பறிகொடுத்து விட்டு சோகத்தில் வாடிக்கொண்டிருக்கும் சுனில் சாந்த என்ற இளைஞர் தனது குடும்பத்துக்கு நேர்ந்த அவலத்தை இவ்வாறு கண்ணீர் மல்க விவரித்தார்.

கேகாலை மாவட்டத்திலுள்ள அரநாயக்க பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட மண் சரிவில் சிறிபுர, பல்லேகபே, எலகிபிட்டிய ஆகிய மூன்று கிராமங்கள் புதைந்துள்ளன. இதில் பல்லேகபே பகுதியிலேயே மேற்படி இளைஞர் வாழ்ந்து வந்துள்ளார்.

மாலை 5 மணி இருக்கும். அம்மா சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா நித்திரையில் இருந்தார். அக்காவின் மகள் படித்துக் கொண்டிருந்தார். எனக்குக் கடைக்குப் போக வேண்டிய தேவை ஏற் பட்டது. வெளியே வரும்போது, எங்கேடா போகிறாய் மழைவரும். வீட்டுக்குள்ளேயே இரு, என்றார் அம்மா. ஆனால், அதை மீறி நான் சென்றேன்.

5.15 மணியிருக்கும், மேகம் கிராமத்தைச் சூழ்ந்து கொண்டது. பெரிய சத்தம் கேட்டது. பனி மூட்டத்தால் ஒன்றும் விளங்கவில்லை. அலறல் சத்தம் கேட்டதையடுத்து வீட்டை நோக்கி ஓடினேன். அதற்குள் எங்கள் ஊர் மக்களை மண் விழுங்கி விட்டது என்றும் அவர் கூறினார்.

**தவிக்கும் நாய்கள்**

மலைப்பகுதி தொடர்ந்தும் சரிந்த வண்ணமேயுள்ளது. குறித்த பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், அயல் கிராமங்களிலுள்ளவர்கள் சம்பவ இடத்துக்கு சிறு பிள்ளைகளுடன் படையெடுத்த வண்ணமுள்ளனர். அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களும், அவர்களின் உற வினர்களும் வீடுகள் புதையுண்ட இடங்களுக்கு வந்து கதறியழுதபடி உறவினர்களைத் தேடினர்.

மண்ணுக்குள் புதையுண்டவர்களால் வளர்க்கப்பட்ட நாய்கள் குறித்த பகுதிக்கு வந்து ஊளையிட்டு அழுதன. அங்குமிங்குமாக தமது எஜமானர்களைத் தேடி அலைந்தன. இந்தக் காட்சியானது பார்ப்பவர்களை மனம் நெகிழ வைத்தது.

(த-ஜ-5)

## இடர் பாதித்த மக்களுக்கு உதவியளிக்க ஐ.நா. தயார்

கொழும்பு, மே 21

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்களைத் தெரிவித்துள்ள ஐ.நா., மீட்புப் பணிகளுக்கு உதவத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. சபையின் இலங்கை அலுவலக ஒருங்கிணைப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இயற்கை இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் காணாமற் போனோர் தொடர்பிலான செய்திகள் எமக்கு கவலையளிக்கின்றது. பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்கு ஐ.நா. சபை இலங்கை அரசுடன் இணைந்து செயற்படவுள்ளது. மீட்புப் பணிகளின் போது ஒன்றிணையவும், பாதிக்கப்பட்டோருக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவும் முழு ஒத்துழைப்பை வழங்கவும் ஐ.நா. தயாராகவுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(த-ஜ-5)

# இடரால் இடம்பெயரும் மக்களின் சொத்துக்கு இராணுவப் பாதுகாப்பு

கொழும்பு, மே 21

இயற்கை இடரால் இடம்பெயரும் மக்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



மழை வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பாதிப்புக்களை எதிர்நோக்கிய மக்களின் சொத்துக்களைப் பாதுகாக்கப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

சொத்துக்கள் களவாடப்பட்டு விடும் என்ற அச்சத்தால் சிலர் ஆபத்துக்களின் போதும் சொந்த இடங்களை விட்டு வெளியேறாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும், எச்சரிக்கை விடுக்கப்படும் போது அந்த இடங்களை விட்டுப் பொதுமக்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

(ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனல் மின் நிலைய விவகாரம்; தமிழர்களுக்கு பெரும் ஆறுதலே!

உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்று பேச்சு வழக்குத் தமிழில் ஒரு சொற்றொடர் உண்டு. அதனை ஒத்த நிலைமை தான், கிழக்கு மாகாணத்தின் உத்தேச சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்துக்கும் ஏற்பட்டுள்ளது. சம்பூர் அனல் மின்நிலையம் அமைக்கப்படாது போகலாம் என்று போக்குக் காட்டி உள்ளார், நல்லாட்சி அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன.

அரசின் தகவல் திணைக்களத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து, உத்தேச சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பதைத் தாம் விரும்பவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால, இந்தியப் பிரத மர் நரேந்திரமோடியிடம் குசுகுசுத்து உள்ளார் என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பதிலுக்கு அது குறித்துப் பரிசீலிப்பதாக இந்தியப் பிரதமரும் தெரிவித்துள்ளாராம்.

இதற்கிடையில், உத்தேச சம்பூர் அனல்மின் நிலையத்துக்குப் பதிலாக, வேறு வகைசார்ந்த முறையிலான மின்திட்டம் குறித்து ஆராயுமாறு, இந்தியப் பிரதமரிடம் இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பதும் தகவல்.

மேலும், இலங்கையின் சுற்றாடல் துறைசார் நிபுணர்கள், அனல்மின் நிலையத்தால் சுற்றாடலுக்கு பெரும் தீங்கு ஏற்படும் என்று எச்சரித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தனைக்கும் சம்பூர் அனல் மின் நிலையத் திட்ட யோசனை முன்வைக்கப்பட்ட வேளையிலிருந்தே, அந்தப்பகுதி மக்களும், தமிழ் அரசியல் வாதிகளும் அதற்குத் தொடர்ச்சியாக எதிர்ப்புக்காட்டி வந்த போதிலும், அவை இலங்கை, இந்திய அரசுகளால் அலட்சியம் செய்யப்பட்டமை பதிவுகள்.

இந்த நிலையில் தற்போது ஏதோவோர் அரசியல் நிகழ்ச்சி நிரலின் பின்னணியில், இறுக்கமான அழுத்தத்தின் பேரில்தான் குறித்த அனல் மின் நிலையத்திட்ட யோசனை கைவிடப்படக்கூடுமென்ற எதிர்வுகூறல் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் கருத்தில்கொள்ளத்தக்க தொன்றே.

ஒட்டு மொத்தத்தில், சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்கப்பட முடியாத நிலையே மேலோங்கி நிற்பதாக எமது நாட்டின் அமைச்சரவைப் பேச்சாளர் கையை விரித்துள்ளார் என்பது ஒரு சோகக் கதையை ஒத்ததாக விரிந்துள்ளது.

அனல் மின் நிலையத்தை எமது அரசு விரும்பவில்லை. அதனை இந்தியா புரிந்து கொள்ளாமலா போகும் என்று எமது நாட்டின் அமைச்சரவைப் பேச்சாளர் பூசி மெழுகி உள்ளார்.

தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு எடுக்காமல், போகடி போக்காக திருமலைத் தமிழர்களின் எதிர்ப்பின் மத்தியில், தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற நிலையில் நின்ற நல்லாட்சி அரசுக்கு, இது ஒரு தலையிடி என்றும் கொள்ளலாம்.

அதேவேளை இந்தத்திட்டம் கைவிடப்படுவதன் மூலம் திருமலையின் தமிழ் மக்கள் புண்ணியம் செய்தவர்கள் என மன ஆறுதல் கொள்ளவும் முடியும்.



# விழிநீர் சிந்த வைத்துள்ள அரநாயக்க பேரிடர்

(அரநாயக்கவிலிருந்து
■ ஆர்.சனதி)

பத்து வருடங்கள் கடந்தும் ஆமைவேகத்தில் செயற்படுகின்றது இடர் முகாமைத்து அமைச்சு. இலங்கையில் கடந்த சில நாள்களாக அகோர மழை ஊழித்தாண்டவமாடியது. இதனால், உயிர்ச்சாவுகள், உடைமை இழப்புகள், இடப்பெயர்வுகள் எனப் பேரவலங்களும் உச்சம்தொட்டன.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தரவுகளின் அடிப்படையில், 10 நாள்களுக்குள் 58 பேர் சாவடைந்துள்ளனர். 130 இற்கும் மேற்பட்ட வர்கள் காணாமற்போயுள்ளனர். இவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

3 லட்சம் பேருக்கு அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், 4 ஆயிரம் வரையான வீடுகள் சேதமடைந்துள்ளன. இதற்கிடையில் தொற்றுநோய்களும் தலைதூக்கியுள்ளன.

நாட்டின் பல பகுதிகளில் இடர்கள் ஏற்பட்டிருந்தாலும், அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட மண்சரிவே பேரிடராகக் கருதப்படுகின்றது. சிறிபுர, பல்லேகபே, எலகபிட்டிய ஆகிய மூன்று கிராமங்கள் முழுமையாக மண்ணுக்குள் புதையுண்டுள்ளன. இந்தச் துயரச் சம்பவமானது ஒட்டுமொத்த இலங்கையர்களையும் விழிநீர் சிந்த வைத்துள்ளது.

கேகாலை மாவட்டத்திலிருந்து, அரநாயக்க பகுதிக்குச் சென்ற பின்பு, அங்கிருந்து சிறிது தூரம் பயணித்த பின்னர் பெரிய தொரு கல்மலைத் தொடர் இருக்கின்றது. அதனை பிரதேசவாசிகள் சாமசர கந்த என்றே அழைக்கின்றனர்.

கிராமத்தை நாலாபுறமும் பெரியமலைகள் சூழ்ந்துள்ளன. இந்த மலை அடிவாரத்துக்கு கீழ்ப் பகுதியிலேயே குடியேற்றங்களுக்காக சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்படி கிராமங்கள் உருவாக்கப்பட்டன.

விவசாயத்தை முழுமையாக நம்பியே மக்களின் வாழ்வாதாரம் இருந்துள்ளது. வீடுகளுக்கு முன்பாக வயல் நிலங்களும் காணப்பட்டுள்ளன.

இவ்வாறு பச்சைப்பசேலென இருந்த ஊர், சிறுவர்கள் துள்ளிக்குதித்து விளையாடிய மண் இன்று மயானபூமியாக காட்சி தருகின்றது. இதனால், அரநாயக்க பகுதியே சோகத்தில் மூழ்கியுள்ளது.

மண்ணுக்குள் புதையுண்டுள்ள மூன்று கிராமங்களிலும் 220 குடும்பங்கள் வாழ்ந்துள்ளன என்று கிராம சேகவர்களின் தரவுகளை ஆதாரங்காட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது. மேற்படி குடும்பங்களில் எத்தனை பேர் வாழ்ந்தனர் என்பதற்கான உத்தியோகபூர்வ புள்ளிவிவரம் இன்னும் வெளியாகவில்லை.

இந்தப் பேரிடருக்கு எவர் காரணம்? மழையின்மீது இலகுவில் குற்றச்சாட்டைபோட்டு விட்டு, விதியின் விளையாட்டு என ஆறுதல் கூறிக் கொண்டு, விடுபட்டுவிட முடியுமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கை இடர்களை தடுக்கமுடியாது என்பது சிறுபிள்ளைகளுக்குகூட தெரியும். ஆனால், முன்கூட்டியே இடர்கள் ஏற்படவிருப்பதை அறிந்து, ஊகித்து, எதிர்வுகூறி, உயிர் - உடைமை இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இதற்குரிய தொழில்நுட்பச் சாதனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா போன்ற நாடுகளில் சூறாவளி போன்ற இடர்கள் ஏற்பட விருந்தால், குறித்த பகுதியில் வாழும் மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுவார்கள்.


இப்படி மக்கள் பாதுகாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. மேலும், சில நாடுகளில் பலவழிகளிலும் எச்சரிக்கை சமிக்ஞைகள் இருக்கின்றன. திடீரென்று ஏற்படும்போது அதிலிருந்து தம்மை எப்படி பாதுகாப்பது என்பது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வுகள் வழங்கப்படும்.

ஆனால், இலங்கையின் இவ்வாறானதொரு நிலைமை இல்லை என்பது கசப்பான உண்மையாகும். கடந்தகால இடர்களிலிருந்து எந்தவித பாடமும் கற்றுக் கொள்ளப்படவில்லை.

குறிப்பாக 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இலங்கையிலும் கோரத்தாண்டவம் நடத்தியது. இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் பேரவலத்தின் பின்னரே இலங்கையில் இடர் முகாமைத்துவ அமைச்சுக் கூட உருவாக்கப்பட்டது.

ஆனால், இயற்கை இடர்கள் பற்றி முன்கூட்டியே விழிப்புணர்வு, உரிய தகவல் பரிமாற்றக் கட்டமைப்பு இருந்திருந்தால் சுனாமியால் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கையைப் பாதியாக குறைத்திருக்க முடிந்திருக்கும்.

அதாவது, இந்தோனேசியாவில் இருந்து இராட்சத அலைகள் இலங்கையை நோக்கி வந்து சுழ்வதற்கு மூன்று மணித்தியாலங்கள் எடுத்தன. மணிக்கு ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்திலேயே இராட்சத அலைகள் தாண்டவமாடி வந்தன. எனவே, முன்கூட்டியேநடவடிக்கைகளை எடுத்திருந்தால் - இடர்ப் பாதுகாப்புத் திட்டமிருந்திருந்தால் மூன்று மணி நேரத்துக்குள் ஆயிரக்கணக்கானோரைப் பாதுகாத்திருக்கலாம். பகுதியளவிலாவது நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம்.



சரி... இது இலங்கைக்கு முதல் அனுபவம் என எடுத்துக்கொண்டாலும், அதன் பின்னர் ஏற்பட்ட இடர்களின் போதும் உரிய நடவடிக்கைகள் இடம் பெறவில்லை என்பது கவலைக் குரிய விடயமாகும்.

இடர் முகாமைத்துவ அமைச்சு உருவாக்கப்பட்டு பத்து வருடங்கள் தாண்டியும் அமைச்சும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களும் ஆமை வேகத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதையே இன்று இடம்பெறும் சம்பவங்கள் புடம்போட்டுக் காட்டுகின்றன.

முன்கூட்டிய அறிவிப்புகள் உரிய வகையில் வருவதில்லை. விழிப்புணர்வுத் திட்டங்களும், தகவல் பறிமாற்றத் திட்டங்களும் முறையாக இல்லை. இதனால் நாளாந்தம் மக்கள் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், முன்கூட்டியே இடர்களை அறியும் சாதனங்கள் தம்மிடம் இல்லையென இடர் முகாமைத்துவ அமைச்சு கூறுவதானது வெட்கக்கேடான அறிவிப்பாகும்.

அதேவேளை, மீரியபெத்தவில் மண்சரிவு ஏற்பட்ட பின்பு, இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசதரப்பில் அறிவிப்பு விடுக்கப்பட்டது. மண்சரிவு அபாய வலயங்களை இனங்காண்பதற்கு கட்டட ஆராயச்சி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. மீரியபெத்த மண்சரிவுச் சம்பவத்தை ஒரு பாடமாக எடுத்து, உரிய தொழில்நுட்ப வசதிகளுடன், மண்சரிவு அபாய வலயங்கள் அடையாளம் காணப்பட்டிருக்குமானால் இன்று அரநாயக்கவில் இடம்பெற்ற பேரிடர் போல் அரங்கேறியிருக்காது. எனவே, வளிமண்டலவியல் திணைக்களம், இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியவை உடனடியாக மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதையே இவ்வாறான சம்பவங்கள் வலியுறுத்தி நிற்கின்றன.

நான் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக இங்கு வாழ்கின்றேன். இதற்கு முன்னர் இப்படியொரு மண்சரிவு வந்தது இல்லை. மண்சரிவு அபாயம் இருக்கின்றது என அதிகாரிகள் வந்து எச்சரிக்கை விடுக்கவும் இல்லை என்று சுட்டிக்காட்டினார் சிரிபுர மண்சரிவு சம்பவத்தில் இருந்து தப்பிய நபர் ஒருவர், இந்தச் சம்பவத்தையடுத்து நாங்களும் இடம் பெயர்ந்துள்ளோம். பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கூறுகின்றனர். நாங்கள் எங்கு செல்வது? எனவே, அரசு உரிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கிறார் அரநாயக்க பகுதியை அண்டிவாழும் பியதாச என்பவர். மேலும், பலரினது கோரிக்கையும் இதுவாகத்தான் இருக்கின்றது. குறித்த பகுதிகளில் திடீரென மண்சரிவு ஏற்பட்டதற்கான காரணம் இன்னமும் தெளிவாகத் தெரியவரவில்லை. ஆனாலும், அண்மைய நாள்களில் ஏற்பட்ட கடும் வெப்பத்தால் ஏற்பட்ட வெடிப்புகளுக்குள் நீர் புகுந்ததாலேயே இப்படி நடந்திருக்கலாம் என பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆரம்பத்தில் கூறப்பட்ட மலைத்தொடர் தொடர்ந்தும் சரிந்த வண்ணமுள்ளது. இதனால், அதனைச்சூழவுள்ள, கங்துண உள்ளிட்ட கிராம மக்களும் அச்சத்தில் இடம்பெயர்ந்துள்ளனர். 9 முகாம்களில் இரண்டாயிரம் வரையானோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். எனவே, அந்தப்பகுதிக்கு மக்கள் வருவதை தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

இடர் ஏற்பட்ட பின்பு அனுதாபம் கூறுதல், நிதி ஒதுக்கீடு செய்தல், இடங்களைப் பார்வையிடுதல், அதிரடியாக நிவாரணங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்கு அப்பால் முன்கூட்டியே எப்படி மக்களை பாதுகாக்கலாம் என்ற சிந்தனை இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் மத்தியில் எழவேண்டும். மீண்டுமொரு அரநாயக்க பேரிடர் ஏற்படாமல் இருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதே புத்திஜீவிகளின் கோரிக்கையாகும்.

## குறைகளை நிவர்த்தி செய்யவும்

யாழ். நகரிலுள்ள காங்கேசன்துறை வீதியில் பன்றிக் கோட்டுப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் மானிப்பாய் வீதியை இணைக்கும் வகையில் செல்லும் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு குறைவான நீளமுடைய பிரப்பங்குளம் வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் கடுமையான தேசத்துக்கு உள்ளாகியுள்ளது. இதனால் இந்த வீதியையும் சுற்றுப்புற ஒழுங்கைகளையும் சேர்ந்த பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் பிரதான வீதிகளைக் கடக்க, இந்த வீதியைப் பயன்படுத்துபவர்களும் மிகவும் சிரமத்துக்குள்ளாவதுடன் விபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதைவிட இந்த வீதியில் பல கட்டடங்களில் தனியார் வர்த்தக நிலையங்களின் களஞ்சிய சாலைகள் உள்ளன. பிரதானமாக குடியிருப்புக்களுக்கு மத்தியில் தனியார் நிறுவனத்தின் சிமெந்து களஞ்சியசாலை ஒன்றும் உள்ளது. இவற்றை தினசரி பலதடவைகள் பயன்படுத்தும் பெரிய வாகனங்களினால் வீதியின் மத்தியில் நீர் வழிந்து வடிகாலுக்கு செல்லும் மதகு இடிந்து முற்றாக கீழிறங்கி பெரிய குழி ஏற்பட்டுள்ளது. இதனால் அண்மையில் பெய்த மழையினால் நிரம்பிய நீர் வடிகாலுக்கு வழிந்தோட வழியில்லாமல் இரண்டு அடிவரை தேங்கிநின்று வீதி மேலும் சேதமாகியுள்ளது.

மேலும், இந்தக் களஞ்சிய சாலையில் இருந்து பரவும் சிமெந்துத் தூசியினால் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக் கூடிய ஏதுக்கள் ஏற்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து, மேற்படி குறைகளை நிவர்த்தி செய்யுமாறு குடியிருப்பாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

கு.தேவபாலன்

## வயோதிபர்கள் கவனத்துக்கு

வயோதிபர்கள் என்பவர்கள் எமது வழிகாட்டிகள். இவர்களே தவறுகளை விட்டுவிட்டு இளம் சந்ததியினரைக் குற்றம் கூறுவது ஏன் ? இளமை என்பது தள்ளாடும் மனசு. அவர்களை நல்வழிப்படுத்துவது உங்கள் கடமை. சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் குற்றம் கூறி, இளசுகளின் மனதை புண்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் திருமணம் முடித்துவிட்டால் மனைவியுடனும் கணவனுடனும் அவர்களின் பிள்ளைகளுடனும் மகிழ்ச்சியாக இருப்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு அவர்களுடன் நீங்களும் சுகதுக்கத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். சொத்துக்களை கொடுத்து விட்டு என்னைச் சுரண்டிவிட்டார்கள் எனப் புலம்புவதை தவிர்த்து [illegible] வேண்டும். சின்னச் சண்டைகளைப் பெரிதுபடுத்தாது [illegible] முறையில் தீர்த்து கொள்ள வேண்டும்.

*கலைவாணி, கிளிநொச்சி*

## விளையாட்டு வினையாகலாம்

இன்று குழந்தைகள் விளையாடும் பொருள்களில் முதலிடம் பெறுவது விளையாட்டுத்துப்பாக்கி. சிறுவர்களைக் கவரும் விதத்தில் வகை தொகையாய் இவற்றைப் பரப்பிவைத்து வியாபாரம் செய்வதை காண்கின்றோம். விதம் விதமாய் ஏனைய விளையாட்டுப் பொம்மைகள் இருந்தாலும், அதிக விலை கொடுத்தாவது விளையாட்டு பொம்மையாய் துப்பாக்கிகளைப் பெற்றோர் வாங்குவதே வழமையான நிகழ்வு. குழந்தையும் டமார் டுமீர் என்று சினிமா வில்லன், கதாநாயகன் ஆகிவிடுவதும் பெரியோர்களும் வீரவிளையாட்டு என்று ரசிப்பதும் உண்டு. உலகமகா பயங்கரவாதி பின்லேடன் சிறுபிராயத்தில் இருந்தே துப்பாக்கி ரசிகன் என்பது அவன் வாழ்க்கைக் குறிப்பில் அடக்கம். வன்முறைக்கு வித்திடாமல் அடம்பிடிக்கும் சிறுவனுக்கு அன்பாய் நயமாய் அறிவுபூர்வமாய் நன்மை தீமைபற்றிய விளக்கமும், பெற்றோருர்க்கும் உறவுகளுக்கும் விழிப்புணர்வும் தேவை. பிள்ளைவிரும்பியதைக் கொடுப்பது பாசத்தின் வெளிப்பாடு என்றாலும், அமெரிக்கா போன்ற வளர்முக நாடு களில் கைத்துப்பாக்கி புழக்கத்தில் உள்ளதால் பலதுரதிஷ்டமான நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டு இருப்பதைச் செய்திகளில் அறிகிறோம். விபரீதம் புரியாத சிறுமி தாயின், துப்பாக்கியால் தாயை சுட்டுக் கொன்றதும் விளையாட்டு வினையான சம்பவமே. பிஞ்சுக்கரங்களில் துப்பாக்கியை திணிப்பதை தவிர்க்க வேண்டும். எமது பண்பாடு, கலாசாரம், ஒழுக்கவிழுமியங்கள் என்பவை சாம்பல் மேட்டில் புதையுண்டு போகும் நிலையில் எத்தனையோ நற்காரியங்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் தேவையாகவுள்ளன. உங்கள் செல்லக் குழந்தைக்கு துப்பாக்கியே வேண்டாம்.

உதயன் வாசகி
கல்வயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வரலாற்றுச் சிறப்பு மக்களால்தான் சாத்தியம்

## ஜெயலலிதா வெற்றிப் பேச்சு

சென்னை, மே 21

2016 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு கிடைத்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி, தமிழக மக்களாலேயே சாத்தியமானதாக அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.



சென்னை போயஸ் தோட்டத்தில் ஜெயலலிதாவை அதிமுக தொண்டர்கள், கட்சி பிரமுகர்கள், பல்வேறு துறை சார்ந்தவர்களும் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அங்கு அவர் பேசியதாவது:-

தமிழக மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 1984 ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சி சாத்தியமாகியுள்ளது. எனது நெஞ்சத்தின் அடித்தளத்தில் எழுகின்ற நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வார்த்தை, தமிழ் அகராதியில் இல்லை.

இந்தத் தேர்தலில் பெரிய கூட்டணி இல்லாதபோதிலும் ஆண்டவனையும் மக்களையும் கூட்டணியாகக் கொண்டு களம் கண்டேன். மக்கள் என்னைக் கைவிடவில்லை. தமிழக மக்கள் மீது அளவற்ற நம்பிக்கை வைத்துள்ளேன். அந்த நம்பிக்கையை மக்கள் வீண் போகச் செய்யவில்லை. மக்களால் நான், மக்களுக்காக நான் என்பதே எனது தாரக மந்திரம்.

இதே தாரக மந்திரத்தின் அடிப்படையில் இனியும் தொடர்ந்து செயற்படுவேன். எனது வாழ்க்கையைத் தமிழக மக்களுக்கு அர்ப்பணித்துள்ளேன். என்றென்றும் மக்கள் தொண்டில் என் வாழ்வை அர்ப்பணிப்பேன். அ.தி.மு.கவின் அமோக வெற்றிக்கு உழைத்த கட்சியின் தொண்டர்கள் அனைவருக்கும் இந்தத் தருணத்தில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் – என்றார். (து)

# ஜெயலலிதாவுக்கு மோடி வாழ்த்து

புதுடில்லி. மே 21

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலிதாவுக்குப் பிரதமர் மோடி தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இது குறித்து மோடி தனது டுவிட்டரில், சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றிக்காக ஜெயலலிதாவுக்குத் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் வாக்குப்பதிவு நடந்து முடிந்த 232 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கியது.

முற்பகல் 11 மணி நிலவரப்படி அ.தி.மு.க. கூட்டணி 135 தொகுகளிலும், தி.மு.க. கூட்டணி 86 தொகுதிகளிலும் முன்னிலை வகித்தன. இந்நிலையில், ஜெயலலிதாவுக்குப் பிரதமர் நரேந்திரமோடி தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்துள்ளார். (து)

# தோல்வி கண்ட பிரபலங்கள்





சென்னை, மே 21

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் பல கருத்துக் கணிப்புகளும், தேர்தலுக்குப் பிந்திய கணிப்புகளும் வெளிவந்தன.

ஆனால், மக்களின் தீர்ப்பு எப்போதுமே எவராலும் கணிக்க முடியாததாகவே இருக்கும் என்பதற்கு இந்தத் தேர்தலும் ஒரு முன்னுதாரணமாகவே அமைந்துவிட்டது.

அந்த வகையில், எத்தனையோ கட்சிகளின் கடும் போட்டிகளுக்கு இடையே நேற்று அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியமைப்பது உறுதி செய்யப்பட்டது.

ஆனால், தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சி தலைவர்களைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுமே தோல்விகளைத் தழுவியுள்ளனர்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், பா.ம.க இளைஞரணித் தலைவர் அன்புமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார், அமைச்சர்கள் வளர்மதி, கோகுல இந்திரா ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். (து)

# எகிப்து விமானப் [...] மத்தியதரைக் கட[...]

## அந்நாட்டு இராணுவம் அறிவிப்பு

கெய்ரோ, மே 21

பாரிசில் இருந்து கெய்ரோ நோக்கி 66 பயணிகளுடன் சென்ற எகிப்து விமானம் மத்திய தரைக்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதன் பாகங்கள் மத்திய தரைக்கடலில் கண்டுபிடிக்கப்பட்டதாக எகிப்து ராணுவம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் இருந்து எகிப்து தலைநகர் கெய்ரோ நோக்கி எகிப்து எயார் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றது. விமானம் 37 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபடி, எகிப்து நாட்டின் வான் எல்லைக்குள் நுழைந்த போது திடீரென ராடர் கண்களில் இருந்து மறைந்தது.

இதனால் பதற்றம் அடைந்த விமான நிலைய அதிகாரிகள், விமானத்தை தொடர்பு கொள்ள முயற்சித்தனர். ஆனால், எகிப்தின் துறைமுக நகரமான அலெக்ஸாண்டிரியா அருகே மத்திய தரைக்கடலில் அந்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 66 பேரும் உயிரிழந்தனர்.

> "விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 66 பேரும் உயிரிழந்தனர். இந்நிலையில் இந்த விமானத்தின் பாகங்களும், பயணிகளின் உடைமைகளில் ஒரு சிலவும் கடலில் கண்டெடுக்கப்பட்டதாக எகிப்து ராணுவம் தெரிவித்துள்ளது."

இந்நிலையில் இந்த விமானத்தின் பாகங்களும், பயணிகளின் உடைமைகளில் ஒரு சிலவும் கடலில் கண்டெடுக்கப்பட்டதாக எகிப்து இராணுவம் தெரிவித்துள்ளது.

எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியாவுக்கு 290 கி.மீ. தூரத்தில் இவைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக எகிப்து ராணுவத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். (து)



## துருக்கிக்கு புதிய பிரதமர்

இஸ்தான்புல், மே.21

துருக்கியில் புதிய பிரதமராக பினாலி யல்டிரிம் தேர்வு செய்யப்பட்டார். முன்னர் பிரதமராக இருந்த அகமட் டாவுடோகுலுவுக்கும், ஜனாதிபதி எர்டோகனுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இந்த விரிசல் வெளிப்படையாக தெரியவந்ததையடுத்து கடந்த 4 ஆம் திகதி பிரதமர் அகமட் பதவி விலகினார்.

இதையடுத்து புதிய பிரதமரை தேர்வு செய்வதற்காக ஆளுங் கட்சியின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் போக்குவரத்து துறை அமைச்சராக உள்ள பினாலி யல்டிரிம் பிரதமர் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெயர் மட்டுமே கட்சியால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், நாளை நடைபெற உள்ள கட்சியின் சிறப்புக் கூட்டத்தில் அவரது பெயர் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பினாலியல்டிரிம் ஜனாதிபதியான எரகனுடன் 20 ஆண்டுகளாக நட்புடன் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர் அவர் பிரதமராக முறைப்படி பதவியேற்பார். (த-ரி4)

## அ.தி.மு.க. – தி.மு.க. இடையே கைகலப்பு

சென்னை, மே 21

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் தபால் வாக்கில் தி.மு.க வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

இதனை ஏற்க முடியாது என அ.தி.மு.கவினர் தகராறு செய்துள்ளனர். இதனால் அதிகாரிகள் முடிவை அறிவிக்காமல் நிறுத்தி வைத்தனர். அ.தி.மு.கவினருக்கு ஆதரவாக அதிகாரிகள் செயற்படுவதாக தி.மு.க. குற்றஞ்சாட்டி உள்ளது. இதனால் அ.தி.மு.க. -தி.மு.க. இடையே கைகலப்பு ஏற்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (து)

## மென்சிவப்பு வைரம் ஏலத்தில் சா[...]

ஜெனிவா, மே 21

ஜெனிவாவில் அரியவகை மென் சிவப்பு வைர மோதிரம் ஏலத்தில் சாதனை படைத்துள்ளது.

15.38 கரட் உள்ள மென் சிவப்பு வைரம் 31.6 மில்லியன் ரூபாவுக்கு ஏலமெடுக்கப்பட்டுள்ளது. ஆசியாவைச் சேர்ந்தவரால் தொலைபேசியில் இது ஏலமெடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக 2010 ஆம் ஆண்[...] உள்ள வெங்காய மென்சி[...] மோதிரம் 46.2 மில்லியன[...] பட்டிருந்தது. இதுவே உ[...] இருந்தது. ஆனால், இதனை[...] தற்போதைய ஏலம் இடம்[...] பிரபல ஏல நிறுவனமான [...] துள்ளது.



உலகிலேயே பிரம்மாண்டமான சொகுசுக் கப்பல் தனது பயணத்[...] ரன் துறை முகத்தை சென்றடைந்துள்ளது. 32 மாதக் கட்டுமானத்[...] டொலர் செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கப்பல், ஆயிரத்து 188 [...] 27 ஆயிரம் தொன் ஆகும். அமெரிக்க தொழிலதிபரொருவருக்[...] ரிடப்பட்டுள்ளது. இது 2 ஆயிரத்து 100 பணியாளர்களையும், 6 ஆ[...] கோபுரத்தை விட உயரமானதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகங்கள்
# டலில் மீட்பு



## ாதனை




ண்டு 24.78 கரட்டில் சிவப்பு பதித்த வைர ணுக்கு ஏலம் எடுக்கப் உயர்வான பதிவாக னை மீறும் வகையில் பெற்றுள்ளது எனப் ன சோத்பே தெரிவித்
(து-ரி4)



தை ஆரம்பித்துள்ளது. இது கடந்த திங்கட்கிழமை பிரிட்டனின் சவுத்தாம் த்தின் பின்னர் இது தனது பயணத்தை அரம்பித்துள்ளது. ஒரு பில்லியன் 3 அடி நீளமும், 215 அடி அகலமும் கொண்டது. இதன் எடை 2 லட்சத்து க்குச் சொந்தமான இந்தக் கப்பலுக்கு 'ஹாமனி ஒப் த சீஸ்' என பெய ஆயிரத்து 780 பயணிகளையும் சுமந்து செல்லக் கூடியதும், பாரிஸ் ஈபிள்
(து-ரி4)

# ஜனநாயகம் படுதோல்வி பணநாயகம் பெருவெற்றி

### கூறுகின்றார் ராமதாஸ்



சென்னை, மே 21
தமிழகத் தேர்தலில் ஜனநாயகம் படுதோல்வி அடைந்திருக்கிறது; பணநாயகம் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது என்று பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் எது நடக்கக் கூடாது என நினைத் தார்களோ, துரதிர்ஷ்டவசமாக அது தான் நடந்திருக்கின்றது. தமிழகத் தேர்தலில் ஜனநாயகம் படுதோல்வி அடைந்திருக்கிறது; பணநாயகம் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

அதே நேரத்தில் திராவிடக் கட்சிகளுக்கு எதிரான பா.ம.கவின் தர்மப் போர் இன்னமும் முடிவடையவில்லை. இந்த தேர்தலில் பா.ம.கவுக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டப்பேரவைத் தேர்தலில் இரு திராவிடக் கட்சிகளும் போட்டிப் போட்டுக் கொண்டு பணத்தை வாரி இறைத்தன. ஊழலும், ஊழலும் கை கோர்த்தன என்று கூறும் வகையில் அனைத்து இடங்களிலும் எம்மைத் தவிர வேறு எவரும் வெற்றிபெற்று விடக்கூடாது என்று தி.மு.கவும், அ.தி.மு.கவும் ஒப்பந்தம் செய்துகொண்டு பணத்தை கொடுத்து வாக்காளர்களை விலைக்கு வாங்கின.

தமிழ்நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான கொள்கைகளையும், செயற்றிட்டங்களையும் உருவாக்கி முன்னேற்றத்துக்கான ஆவணத்தை பா.ம.க. முன்வைத்தது. ஆனால், தமிழகம் முன்னேறி விடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ள அ.தி.மு.கவும், தி.மு.கவும், பா.ம.க முன்வைத்த வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றுக்கான கொள்கைகளையும், திட்டங்களையும் பண பலத்தைப் பயன்படுத்தியும், தேர்தல் ஆணையம், ஊடகங்கள் ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்தும் வீழ்த்தியிருக்கின்றன.

எப்படியும் ஜெயலலிதாவை வெற்றி பெற வைத்துவிட வேண்டும் என்ற வெறியுடன் பணியாற்றிய தேர்தல் அதிகாரிகளும் இதற்கு துணை போயிருக்கின்றனர். இதன்மூலம் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை இரு கட்சிகளும் திட்டமிட்டுத் தடுத்திருக்கின்றன. எனினும், எமது பயணம் தொய்வின்றி, புதிய உத்வேகத்துடன் தொடரும். இறுதியில் வெற்றி எமக்கே. அதுவரை எமது மக்கள் பணி தொடரும் - என்றார்.
(து)

## வரலாறு காணாத வெப்பம் வட இந்தியாவில்

புதுடில்லி, மே.21
இந்தியாவின் வட மாநிலமான ராஜஸ்தானில் இதுவரை இல்லாத அளவுக்கு வெப்ப வாசிப்பு பெறப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அந்த மாநிலத்தின் சிறு நகரான பலோடியில் 51 பாகை செல்சியஸ் அளவிற்க்கு வெப்பம் தாக்கியுள்ளது.

1956 ஆம் ஆண்டு இந்தியாவின் பாலைவன மாநிலமான அல்வாரில் 50.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதியப்பட்டது. 1914 ஆம் ஆண்டு மக்கள் வாழும் பிரதேசத்தில் 50 பாகை செல்சியசுக்கு அண்மையில் வெப்பநிலை வாசிப்பு பெறப்பட்டுள்ளது. அதாவது 1914 ஆம் ஆண்டு, மே மாதம் 28 ஆம் திகதி 49.5 பாகை வாசிப்பு பதியப்பட்டது. 102 வருடங்களின் பின்னர் இந்த பதிவு முறியடிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ராஜஸ்தான் மாநிலம் இந்த வருடம் இதுவரை இல்லாத அளவுக்கு அசாதாரண வெப்பத்தைக் கொண்டுள்ளது என வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதுடன், சிவப்பு எச்சரிக்கை விளக்கும் ஒளிரவிடப்பட்டுள்ளது. மேலும் இரு தினங்களுக்கு வெப்பம் நிலவும் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. முற்பகல் 11 மணியில் இருந்து, மாலை 4 மணி வரை வெயிலில் வெளியில் செல்ல வேண்டாம் எனவும் வானிலை மையம் அறிவுறுத்தியுள்ளது. இதனால் மின்விசிறி, குளிரூட்டிகள் என்பவை வழ [illegible]
(து-ரி4)

# தி.மு.க-அ.தி.மு.க வாக்கு வித்தியாசம் 1.1 வீதமே

### கருணாநிதி கூறுகிறார்



சென்னை, மே 21
தேர்தலில் அ.தி.மு.க. அணிக்கும், தி.மு.க. அணிக்கும் உள்ள வாக்குகள் வித்தியாசம் 4 லட்சத்து 41 ஆயிரத்து 686 வாக்குகள் தான்; அதாவது 1.1 சதவீதம் வாக்குகள் தான் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகச் சட்டப் பேரவைக்கான 15வது பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்து 232 தொகுதிகளுக்கான முடிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. தி.மு.க. கூட்டணி 98 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 232 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு 1 கோடியே 71 லட்சத்து 75 ஆயிரத்து 374 வாக்குகள் அதாவது 39.7 சதவிகிதம் வாக்குகள் கிடைத்துள்ளன.

அ.தி.மு.க. அணிக்கு 1 கோடியே 76 லட்சத்து 17 ஆயிரத்து அறுபது வாக்குகள் அதாவது 40.8 சதவிகிதம் வாக்குகள் கிடைத்துள்ளன. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அணிக்கும், தி.மு.க. அணிக்கும் உள்ள வாக்குகள் வித்தியாசம் 4 லட்சத்து 41 ஆயிரத்து 686 வாக்குகள் தான்; அதாவது 1.1 சதவீதம் வாக்குகள் தான் இரண்டு அணிகளுக்கும் உள்ள வித்தியாசம் ஆகு... எப்படி என்றாலும் அவர்... ஆளும்கட்சி. தி.மு.க எதிர்க் க... எதிர்க் கட்சி என்றால், தமிழ... சட்டப் பேரவையில் இதுவரை... இல்லாத அளவுக்கு 89 உ... பினர்களைக் கொண்ட தி.மு... தான் பிரதான எதிர்க்கட்சி.

தி.மு.க. கூட்டணிக்கு, வாக்கள... வாக்காளப் பெருமக்கள் அ... வருக்கும் திராவிட முன்னே... கழகத்தின் சார்பில் மனமா... நன்றிகளைத் தெரிவித் கொள்கிறேன்.

அதுபோலவே, திருவாரூர் தொ... தியில் கழக வேட்பாளராக இ... டாவது முறையாக அந்த ... ணின் மைந்தன் என்ற முறை... போட்டியிட்ட நிலையில், 1 லட்... 21 ஆயிரத்து 473 வாக்குக... அளித்து, தமிழ்நாட்டிலே... அதிக வித்தியாசமான 68 ... ரத்து 366 வாக்குகள் கூடுத... அளித்து என்னை வெற்றி ... செய்த திருவாரூர் தொகுதி ... காளப் பெருமக்கள் அனை... கும் எனது மனமார்ந்த நன்... என்று கருணாநிதி தெரிவித்... ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

நட்சத்திரப் பொதுப்பலன்கள் என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் மூலம், பூராடம் நட்சத்திரங்களது பலன்களைப் பார்த்தோம். இன்று உத்த ராடம், திருவோணம் நட்சத்திரங்களது பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

## உத்தராடம்

உத்தராடம் நட்சத்திரத்தில் பிறந்தவராக இருந்தால் நீங்கள் நல்ல அறிவுபூர்வமான பேச்சுத் திறமையை உடையவராய் இருப்பீர்கள். எந்த நேரத்திலும் சுறுசுறுப்பான மனநிலையைக் கொண்டிருப்பீர்கள். சேமிப்பில் ஆர்வம் கொண்டிருப்பீர்கள். திறமையான பேச்சால் சிறந்த நிர் வாகத்திறமை கொண்டவராய் விளங்குவீர்கள். திறமையாக மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தராய் இருப்பீர்கள். பெண்களுக்கு இனிமையானவர், முகத்தில் மரு உடையவர், சரீர பலம் உடையவர், பலவான், புத்திமான், சுற்றத்தாருக்கு நல்லவர், நீண்ட மூக்கு உடையவர், நல்ல வார்த்தைகளையே பேசுபவர், உணவுப் பிரியர், தண்ணீரைக்கண்டு அஞ்ச மாட்டார், தர்ம் செய்வதில் விருப்புடையவர், பிறர் பொருளை விரும்பமாட்டார், தூயவர், நல்லவருக்கு நல்லவர், தியாகி. அழகான தோற்ற மும், தேக பலமும் கொண்டவர்கள். கலைகளில் ஆர்வம் காட்டுவர். பொறுமையும், இனிமையும் இவர்கள் பேச்சில் கலந்திருக்கும்.

1. உத்தராடம் முதல் பாதத்தில் பிறந்தவர், அழகு வாய்ந்தவர், நல்ல புத்திசாலி, ஈகைத்தன்மை உடையவர், சகல விதமான சாஸ்திரங்களை அறிந்தவர், குருவை உபசரிப்பவர்.

2. உத்தராடம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர், நல்லவருக்குச் சாதுரியம் உடையவர், உலோபி, தற்பெருமை பேசுபவர், திடவான், மேன்மையான கருமங்களை இரகசியமாகச் செய்பவர்.

3. உத்தராடம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர், கல்விமான் பெருநோக்காய்ப் பேசுபவர், குரூரமானவர், கலங்கிய மனத்தை உடையவர், கோபி, பருத்த தேகத்தை உடையவர்.

4. உத்தராடம் நான்காம் பாதத்தில் பிறந்தவர், தைரியம் வீரியம் உடைய வர், தருமம் செய்பவர், விசேட செயற்பாடு உள்ளவர், வியாபாரி, சுற்றத்தார்களிடத்தில் அன்புள்ளவர்.

## திருவோணம்

திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவராக இருந்தால் நீங்கள் பயன் எதிர் பாராமல் மற்ற வர்களுக்கு உதவி செய்யும் குணத்தை உடையவராய் இருப்பீர்கள். மற் றவர்கள் தவறு செய்யும்போது அதைத் துணிந்து திருத்தவும் முயற்சி செய்வீர்கள். சுறுசுறுப்பான மனநிலையைக் கொண்டிருப்பீர்கள். சரியான நேரத்துக்கு உணவருந்தமாட்டீர்கள். சேமிப்பில் ஆர்வம் கொண்டு செயற்படுவீர்கள். சுத்தமான ஆடை அணிவது உங்களுக்கு மிகவும் பிடித்தமான விடயமாக இருக்கும். கல்வியில் சிறந்தவர், ஒற்றைப் போக்குடையவர், விரைவில் கோபம் வந்து உடனே மாறும் குணம் உடையவர். முன்னும் பின்னும் பார்த்து நடப்பவர், உயர்ந்த கால்களை உடையவர், பெண்களுக்கு இனியவர், வாசனைப் பொருள்களில் விருப்பம் உடையவர், தலைமுடி அழகர், உற்சாகமுடையவர், சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர், ஈகைக் குணம் இல்லாதவர். தெய்வீக வழிபாட்டில் பக்தியும், பெரியவர்களிடத்தில் மரியாதையும் கொண்டிருப்பர்.

பொது விடயங்களில் ஆர்வத்துடன் பங்கேற்பர். மற்றவர்களைப் புரிந்து கொள்வதில் வல்லவர்கள்.

1. திருவோணம் முதல் பாதத்தில் பிறந்தவர், புத்திசாலி, தூயதேகத்தை உடையவர், பிள்ளைகள் இல்லாதவர், போகி, நிலைபெற்ற உற்சாகி.


2. திருவோணம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர், ஞானி, மனிதாபிமானம் நிறைந்த பரிவு இல்லாதவர், லோபி, சிநேகம் இல்லாதவர்.

3. திருவோணம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர், கருமி, ரோகி, போகி, செல்வம், உடையவர், உதாரகுணம் உடையவர், தயவற்றவர்.

4. திருவோணம் நான்காம் பாதத்தில் பிறந்தவர், சீலம் உடையவர், தருமம் புகழ் உடையவர், தனவான், பயிர் செய்பவர்.

(தொடரும்)

# என்றும் நினைவில் நிற்பவர் அமரர் எஸ்.ஏ.ஈ. இரட்ணராஜா



ஒருவர் வாழ்ந்த வாழ்வு, ஆற்றிய பணிகள், அவர் பதித்துச் செல்லும் விழுமியங்கள் , விட்டுச் செல்லும் பதிவுகள், வெற்றிடமாக்கப்படும் இடம் என்பவை எல்லாமே வாழ்பவர்களுக்கே பாடமாகும்

■ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

அமரர் எஸ்.ஏ.ஈ.இரட்ணராஜா இவ்வுலகை விட்டுப் பிரிந்து நேற்றுடன் 12 ஆண்டுகள் நிறைவாகின்றன. கரம்பொன் புனித செபஸ்தியார் பங்குத்திருச்சபையின் பெருமைமிகு மகனாய் – ஊர்காவற்றுறை புனித அந்தோனி யார் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராய் – தீவகம் முழுவதிலும் அனைவராலும் அறியப் பட்டு மதிக் கப்பட்ட தீவக மண்ணின் மைந்தனாய் வாழ்ந்தவர் இவர்.


12 ஆண்டுகள் கடந்து விட்ட பின்னரும், அமரர் எஸ்.ஏ.ஈ.இரட்ணராஜா பற்றியும், அவர் ஆற்றிய பணிகள் பற்றியும் தொடர்ந்தும் பலர் நினைத்தும் கதைத்தும் கொண்டிருப்பதும் அவரது பணிகளைப் பலவழிகளில் தொடர்ந்து கொண்டிருப்பதும், அவரது அர்ப்பணத்தையும் ஆளுமையையும் உறுதி செய்வதாய் இருக்கிறது. ஒருவரின் இறப்போடு அவரது பணியும் பங்களிப்புக்களும் முடிவுபெறாமல் எப்போது அவரைத் தொடர்பவர்களால், அவருக்கு நெருங்கியவர்களால் வளர்க்கப்படுகிறதோ, அப்போது இறந்த அவரது வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாகிறது. ஒருவர் வாழ்ந்த வாழ்வு – ஆற்றிய பணிகள் – அவர் பதித்துச் செல்லும் விழுமியங்கள் – விட்டுச் செல்லும் பதிவுகள் – வெற்றிடமாக்கப்படும் இடம் என்பவை எல்லாமே வாழ்பவர்களுக்கே பாடமாகும்.

ஒருவரின் இறப்பின் பின்னர் நடத்தப்படுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் இறந்து போனவர்க்கே நிகழ்த்தப்பட்டாலும், அவை அனைத்தும் உயிரோடு இருப்பவர்களுக்கே பயனாகவும் படிப்பினையாகவும் அமைகிறது.

ஒருவரின் அன்பு – ஆளுமை – ஆன்மிகம் என்பவை வழிகாட்டுவதாக, தாக்கம் ஏற்படுத்துவதாக அமைந்தால், அதனை நமதாக்குவோம்; வாழ முற்படுவோம். அமரர் எஸ்.ஏ.ஈ.இரட்ணராஜாவின் வாழ்விலும் இது நிஜமானது என்பதற்கு இவரது பணிகளைத் தொடரும் பலர் சாட்சிகளாய் உள்ளனர்.

அமரர் எஸ்.ஏ.ஈ.இரட்ணராஜாவின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி ஆய்வினூடான அபிவிருத்தி ஆசிரியரே ஆய்வாளர் வகிபாகம்

பா.தனபாலன்

ஆய்வு என்பது மெய்மையை அல்லது உண்மையைக் கண்டறியும் தேடல் பயிற்சியாகும். இன்று கல்வித் துறை ஏனைய துறைகளைவிட பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இலங்கை நாட்டில் கல்வித்துறையில் துரிதமான மாற்றம் தேவை என்ற கருத்தியல் மேலோங்கியுள்ளது. வட மாகாணம் ஒப்பீட்டு ரீதியில் இலங்கையின் கவ்வித்துறையில் பின்தங்கிக் காணப்படுகின்றது. கல்வியை விருத்தி செய்யும் விடயத்தில், கலைத்திட்டத்திலும் ஏனைய துறைகளில் விருத்தி செய்தாலும் ஆசிரி யர்களுடைய மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே கல்வித்துறையில் அபிவிருத்தியைக் காண முடியும் என நவீன பிரயோகக்கல்வி ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. இதற்கமைய, ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பாகவே உலகளாவிய ரீதியில் கவனம் செலுத்தப்படுகின்றது. வடமாகாணத்திலும் இதற்கேற்ப ஆசிரிய மாநாடுகள் வலய ரீதியாக நடைபெற்று வருகின்றன. இதில் ஆசிரியரே ஆய்வாளர் என்ற வகிபாகம் முதன்மையடைந்துள்ளது. ஆசிரியர்களே சமூக விடுதலையின் முன்னோடிகள். ஆசிரியர்களை வலுவூட்டுவதன் மூலம் பாடசாலைக் கல்வியையும் நாட்டினது மனிதவள அபிவிருத்தியையும் உயர்த்த முடியும் என்ற வகையில் ஆசிரியரே ஆய்வாளர் என்ற எண்ணக்கரு இன்று கல்வித்துறையில் முதன்மை பெற்றுள்ளது.

**ஆசிரியரே ஆய்வாளர்**

ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கும்போதும், பாடசாலையில் பணியாற்றும்போதும், சமூகத்தில் செயற்படும் போதும் பல்வேறு தரப்பினர்களின் தாக்கங்களுக்கு உட்படுகின்றார்கள். இந்தத் தாக்கங்கள் அவர்களது மனதைத் தொழிலைப் பாதிப்படையச் செய்கின்றது. இதனால் அவர்களுடைய கற்பித்தல் வினைத்திறன் சிதைக்கப்படுகின்றது. பல சவால்களுக்கு முகம் கொடுத்து தமது தொழில் வாண்மையில் பின்னடைவுகளை எதிர் நோக்குகின்றார்கள். இதிலிருந்து அவர்களை விடுபடச் செய்தல் சகல தரப்பினரது கடமையாகவுள்ளது.

ஆசிரியர்கள் சுயமாகவே சவால்களை எதிர்கொண்டு தமது தொழிலில் வெற்றியும் திருப்தியும் காண ஆய்வாளர் வகிபாகமும் வழிகாட்டுகின்றது. இதில் பிரதிபலிப்புச் சிந்தனை முதன்மை பெறுகின்றது. பிரதிபலிப்பு என்பது ஓர் அனுபவத்தை மீண்டும் ஞாபகப்படுத்தி ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பதன் மூலம் பெறப்படும் தீர்வுக்கான உணர்வாகும். இது ஆத்ம விளக்கத்துக்கும், ஆய்வுச்சிந்தனைக்கும், சுயாதீன அபிவிருத்திக்கும் அடுத்த முறை முயற்சிக்கான வெற்றிக்கும் உதவும். இந்த வகையில் ஆசிரியர்கள் பிரதிபலிப்பின் மூலம் ஆய்வாளர் வகிபாகத்தை பின்வரும் ஆய்வு நோக்கங்களோடு அடைய முடியும். கற்றல் கற்பித்தல் பிரச்சினைகளும் தீர்வுகளும் புதிய புலக்காட்சியை கண்டறிதலும்.

ஆசிரிய தொழில் சார் திருப்தியைக் கண்டறிதலும், அறியாப் பொருள்களை அறிய வைத்தலும், கல்விப் பிரச்சினைகள் தொடர்பான எண்ணளவுப் பெறுமானங்களையும், பண்பளவுப் பெறுமானங்களையும் கண்டறிதல்.

சமகாலப் கல்விப் பிரச்சினைகளை ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளும் தன்மைகளை ஏற்படுத்துதல் .

அறிவுப்பரப்பில் புதிய தூண்டல்களையும், துலங்கல்களையும் முன்வைத்து புதிய தீர்மானங்களை எடுப்பதற்கு வழிகாட்டல்.

ஆசிரிய வலுவூட்டல் தொழில் வாண்மை தொடர்பான புதிய எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும், விதிகளையும் நிறுவுதல் –

தனது ஆசிரியத்துவம் தொடர்பான புலமைப்பயிற்சி கருதுகோள்களையும், ஆய்வு வினாக்களையும் பரீட்சித்தல் சமூகப்பயனுறுதி வாய்ந்த பங்கேற்புச் செயன் முறைகளில் ஈடுபடல் என்ற ஆய்வு நோக்கங்களை அடைய ஆசிரியரே ஆய்வாளர் எண்ணக்கரு முதன்மையானதாகவுள்ளது. ஆசிரியர்களைக் கல்வியியல் ஆய்வுகளில்

> **ஆசிரியர்கள் சுயமாகவே சவால்களை எதிர்கொண்டு தமது தொழிலில் வெற்றியும் திருப்தியும் காண ஆய்வாளர் வகிபாகமும் வழிகாட்டுகின்றது. இதில் பிரதிபலிப்புச் சிந்தனை முதன்மை பெறுகின்றது. பிரதிபலிப்பு என்பது ஓர் அனுபவத்தை மீண்டும் ஞாபகப்படுத்தி ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பதன் மூலம் பெறப்படும் தீர்வுக்கான உணர்வாகும்.**

ஈடுபடுத்தும் செயன்முறைகள் இன்று உலகளாவிய ரீதியில் பெருமளவு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எமது நாட்டில் இது மேலும் வளர்க்கப்பட வேண்டியுள்ளது. எமது வடமாகாணத்தில் இது தொடர்பான ஆரம்ப செயன்முறைகளே தொடங்காத நிலை காணப்படுகின்றது. எனவே கல்வித்துறை அபிவிருத்தி அதனூடான சமூக பொருளாதார கலை, கலாசார, பண்பாட்டு, மானுடவியல் அபிவிருத்திக்கு கல்வியியல் ஆய்வுகள் மிக அவசியமானவையாகவுள்ளன.

**கல்வியியல் ஆய்வுகள்**

கல்வித்துறையில் விரைவான வெற்றிகரமான தீர்மானங்களை மேற்கொள்ள, அதிபர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்களின் உடனடித் தேவைகளையும் கல்விப் பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டதாக கல்வியியல் ஆய்வுகள் வளர்ச்சியடைந்துள்ளன. கல்வி ஆய்வினூடான அபிவிருத்தி என்ற கோட்பாட்டுக்கு தற்போது முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. இது கல்வித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் நடைமுறைப் பிரச்சினைகளை பெரிதும் கருத்திற் கொள்கின்றது. ஒப்பீட்டு ஆய்வுகளில் பல்வேறு நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி கல்வித் துறைக்குப் பொறுப்பானவர்கள் கொள்கை உருவாக்குதல் தொடர்பான ஆய்வுகளையே உருவாக்குவிக்கின்றனர். அத்தோடு முடிவுகளைக் காணும் ஆய்வுகளும் செல்வாக்குப் பெற்றுள்ளன. கல்வி ஆய்வு முடிவுகளைப் பரப்புதல், எவரையும் அறியச் செய்தல், அனுபவங்களைப் பரிமாறுதல், வெளியீடு செய்தல், ஆய் வுக்கட்டுரைகளை, சுவரொட்டிகளை, விளம்பரங்களை உருவாக்குதல் இன்று கல்வியியல் ஆய்வுகளில் முத ன்மைபெற்றுள்ளன. செயல் நிலை ஆய்வுகள் இன்று ஆசிரியர் வாண்மை விருத்தியில் முக்கி யம் பெறுகின்றன. ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், அதிபர், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் தொழிலில் ஈடுபடுகையில் தமது தீர்மானங்கள் மற்றும் செயன்முறைகளின் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகச் செய்யும் ஆய்வுமுறை அல்லது பிரச்சினை தீர்க்கும் முறையே செயல்நிலை ஆய் வாகும். குறிப்பாக மற்றும் பொதுவான குறிக்கோள்களின்படி மாணவர்களது விருத்தியை மேம்படுத்தும் மற்றும் மதிப்பீடு செய்யும் மேலும் நம்பகரமான பொருத்தமான வழிகளே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். ஆய்வுக்கு உள்ளாகும் குழுவுக்கு அப்பால் அதன் கண்டறிக்கைகள் பயனுறுதி வாய்ந்ததாக அமைய, தொழில் வாண்மையை உயர்த்த, செயல் நிலைக்கல்வி ஆய்வுகள் வழிகாட்டுகின்றன.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லாவும் செல்வந்தனும்

முல்லாவின் வீட்டுக்கு அருகில் ஒரு செல்வந்தனின் வீடு இருந்தது. அவனிடம் ஏராளமான பணம் மற்றும் வீடு வாசல், தோட்டம் துரவு எனச் சொத்துக்களும் நிறைய இருந்தன. ஆனால் அந்தச் செல்வந்தன் ஒரு நாள் கூட மகிழ்ச்சியாக இருந்ததில்லை.

முல்லாவைச் சந்திக்கும் போதெல்லாம், என்னால் ஒரு நிமிடம் கூட மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் கவலையாகவும், கலக்கமாகவும் அல்லவா இருக்கிறது. நான் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியுடன் இருக்க முல்லா அவர்களே எனக்கு ஒரு யோசனை கூறக் கூடாதா? என்று பரிதாபமாகக் கேட்டான்.


செல்வந்தன் ஒரு பெரிய பேழையில் தன்னுடைய பணத்தையெல்லாம் சிறுசிறு மூடைகளாகக் கட்டிப் போட்டு வைத்திருந்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவன் அந்தப் பணப் பைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துப் பார்த்து வைப்பான். முல்லா அவன் வீட்டுக்கு அடிக்கடி சென்று அவனுடன் பொழுது போக்காகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருவது வழக்கம்.

அன்றும் அவர் வழக்கம்போல செல்வந்தன் வீட்டுக்கு வந்தார்.

அந்தச் சமயத்தில் செல்வந்தன் பணப் பெட்டியைத் திறந்து பணமூடைகளை எடுத்துப் பார்த்து விட்டு மீண்டும் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந் தான்.

என்ன ஐயா செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டவாறு பணப்பெட்டி இருக்குமிடத்தை நோக்கி நடந்தார் முல்லா.

முல்லா வீட்டுக்குள் வருவதைக் கண்ட செல்வந்தன் அவசர அவசரமாகப் பணப் பைகளைப் பெட்டியில் வைத்துப் பூட்டத் தொடங்கினான். அப்போது அவனுடைய பணப் பைகளில்



ஒன்று செல்வந்தன் அறியாமலேயே பணப் பெட்டிக்கு அருகில் விழுந்து விட்டது.

செல்வந்தன் அதைக் கவனிக்கவில்லை ஆனால் முல்லா கவனித்து விட்டார்.

உடனே அவர் பாய்ந்துசென்று பணப் பையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்.

ஐயோ என் பணப்பை போய் விட்டதே என்று கூக்குரலிட்டவாறு முல்லாவைத் துரத்திக் கொண்டு செல்வந்தன் ஓடினான்.

முல்லா இரண்டொரு தெருக்கள் வழியாக வேண்டுமென்றே ஓடினார்.

செல்வந்தன் பணம் போய் விட்டதே என்று கூக்குரலிட்ட வண்ணம் முல்லாவைப் பின்தொடர்ந்து ஓடினான்.

முல்லா கடைசியாகச் செல்வந்தன் வீட்டுக்கே ஓடி வந்தார். பணப்பையை அவனுடைய பணப் பெட்டியின் மீது தொப்பெனப் போட்டார்.

செல்வந்தன் ஓடிவந்து பணப் பையைத் தூக்கிக் கொண்டு அப்பாடி இப்பொழுது தான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று மலர்ந்த முகத்துடன் கூறினான்.

பிறகு எதற்காக என் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினீர்கள். இந்தப் பணம் கிடைக்காவிட்டால்என் உயிரே போயிருக்கும் என்றான்.

இப்பொழுது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா? என்று முல்லா. கேட்டார்.

மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பறிபோய் விட்டது என்று நான் நினைத்த பணம் திரும்பக் கிடைத்து விட்டதே! என் மகிழ்ச்சிக்குச் சொல்லவும் வேண்டுமா? என்று கூறினான் செல்வந்தன்.

எதற்காகப் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன் என்று கேட்டீரல்லவா? உமக்குக் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியை ஊட்டலாமே என்பதற்காகத் தான் பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன். உம்மால் எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று கூறினீர் அல்லவா? அதற்காகத்தான் உமக்கு மகிழச்சியை ஏற்படுத்த வேண்டுமே என்று பணத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினேன் என்றார் முல்லா.



## நல்ல நாய்

நமது நாய் நல்ல நாய்
நன்றி உள்ள உண்மை நாய்!

பகலில் எங்கும் சுற்றியே
பார்த்துக்கொள்வார் ஊரையே!

இரவில் தங்கி வீட்டிலே
இருக்கும்பொருளைக்காப்பாரே!

திருடன் வந்தால் தாவியே
தேடிப் பிடித்துக் கவ்வுவார்!

என்னைக் கண்டால் வாலையே
எதிரில் நின்று ஆட்டுவார்!

நாளும் அன்பு காட்டியே
நமது நெஞ்சில் வாழுவார்!

அன்பு காட்டிப் பழகினால்
ஆயுள் முழுதும் உருகுவார்!


நாயைப் போன்று நன்றியில்
நாமிருப்போம் உலகினில்!

## வரலாற்றில் இன்றைய தினம்



996 - புனித றோமின் பேரரசராக பதினாறு வயது மூன்றாம் ஒட்டோ முடி சூடினார்.
1851 - தென் அமெரிக்க கொலம்பியாவில் அடிமைத்தனம் இல்லாமல் செய்யப்பட்டது.
1856 - அடிமைத் தனத்துக்குச் சார்பான படைகளால் லோறன்ஸ் மற்றும் கன்சாஸ் ஆகிய இடங்கள் கைப்பற்றப்பட்டு எரிக்கப்பட்டன.
1864 - அயோனியன் தீவு கிரேக்கத்துடன் மீள இணைக்கப்பட்டது.
1871 - பிரான்ஸ் துருப்புக்கள் பாரிஸ் கொம்மியூனுள் புகுந்து அங்குள்ளவர்களுடன் சண்டையிட்டதில் 20,000பேர்வரையான கொம்மியூன்கள் சாவடைந்ததுடன் 38,000 பேர் கைது செய்யப்பட்டனர்.
1871 - ஐரோப்பாவின் முதல் ரயில்பாதை றிகி மலையில் தொடங்கப்பட்டது.
1881 - கிளாறா பார்டனால் வோஷிங்டன் நகரில் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கப்பட்டது.
1894 - ஐக்கிய ராச்சியத்தில் மான்செஸ்டர் கப்பற் கால்வாய், விக்டோரியா மகாராணியால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டதுடன் அதனை வடிவமைத்த சேர் எட்வட் லீடர் வில்லியம் 'நைற்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
1904 -உலக உதைபந்தாட்ட சம்மேளனம் பீபா (FIFA) பாரிஸில் உருவாக்கப்பட்டது.
1917 - அட்லாண்டா தீயினால் 5.5 மில்லியன் டொலர் அளவிலான சேதம் ஏற்பட்டது.
1934 - அமெரிக்காவின் ஒஸ்காலூஸா, லோவா ஆகியவை குடி மக்களின் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்த முதல் மாநகர சபைகளாகின.
1961 - இனக் கலவரம் வெடித்ததையடுத்து, சட்டம் ஒழுங்கை மீளமைக்கும் முயற்சியாக அலபாமா ஆளுநர் ஜோன்மல்கம் பற்றேர்சனால் மார்ஷல் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.
1969 - 15வயதான மாணவனின் கொலையை அடுத்து ஆர்ஜன்ரீனா றொசாரியோவில் குழப்பநிலை தோன்றியது.
1980 - ஸ்டார் வோர்ஸ் 5ஆம் பாகம் திரையரங்குகளில் வெளியிடப்பட்டது.
1969 - 15வயதான மாணவனின் கொலையை அடுத்து ஆர்ஜன்ரீனா றொசாரியோவில் குழப்பநிலைதோன்றியது.
1980 -ஸ்டார் வோர்ஸ் 5ஆம் பாகம் திரையரங்குகளில் வெளியிடப்பட்டது.
1981 - ஐரிஷ் குடியரசுவாதிகள் றேய்மண்ட் மக் கிறீஷ் மற்றும் பாற்சி ஓ ஹறா ஆகியோர் மேஷ் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து சாவடைந்தனர்.
1991 - முன்னாள் இந்தியப் பெண் பிரதமர் ராஜிவ் காந்தி பெண் தற்கொலைதாரி ஒருவரால் சென்னைக்கு அருகே படுகொலை செய்யப்பட்டார்.
1994 - யேமன் குடியரசிலிருந்து பிரிந்து செல்லும் ஜனநாயக யேமன் குடியரசின் முயற்சி தோல்வியடைந்ததையடுத்து போர் வெடித்தது.
2003 - வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும் எனப் புலிகள் வற்புறுத்து. நோர்வே பிரதியமைச்சருக்கு அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.
2003 - அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை சபாநாயகரின் முன் அனுமதியுடன் ஹன்சாட்டிலிருந்து முற்றாக நீக்கம்.
2003 - வெள்ளம் மற்றும் மண் சரிவால் 256 பேர் சாவு. 100 கோடி ரூபா சொத்து அழிவு என நாடாளுமன்றில் அமைச்சர் கரு ஜயசூரிய தகவல்.
2006 - பாதுகாப்புச் செயலர் மீது போர்க்குற்ற வழக்குத் தொடர அமெரிக்காவில் தமிழ் அமைப்புக்கள் முயற்சி.
2009 - மடுவிலிருந்து படைகள் விலகாவிடில் அரசுக்கு பாதக விளைவு என இரத்தினபுரி ஆயர் தெரிவிப்பு

## அன்புச் செல்வங்களுக்கு தாத்தாவின் அறிவுரைகள்



எனதருமைக் குட்டிச் செல்வங்களே! இன்று உங்களுக்கு சுகாதாரப் பழக்க வழக்கம் தொடர்பாகத் தாத்தா எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

**சுகாதாரப் பழக்கவழக்கம்**

நாம் நோய் நொடியின்றி வாழ வேண்டுமானால் சுகாதாரப் பழக்க வழக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும். உணவு உண்பதற்கு முன்பு கைகளைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். காலையில் எழுந்ததும் பல் துலக்கி முகம் கழுவுதல் சுத்தம் பேண உதவும். இரவு படுக் கைக்குச் செல்வதற்கு முன்னர் பற்களைத் துலக்கி வாயைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். வெறுங்காலுடன் வெளியில் செல்லக் கூடாது. கண்ட கண்ட இடங்களில் கிடைக்கும் உணவுகளை உண்ணக் கூடாது. உணவுகளை எப் போதுமே அளவுடன் உண்ணவேண்டும். இவ்வாறு சுகாதாரப் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அன்புடன் சிவனடித் தாத்தா.





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டோருக்கு உதவுங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை இடரின் தாண்டவத்தில் சிக்கி 58 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமற் போயும், 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்தும், 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சில மாதங்களாக வாட்டி வதைத்த வெயிலின் கொடுமையைத் தாங்காது - மழை இல்லாது, மழை வராதா என்று அனைவரும் ஏங்கித் தவித்த நிலையில் சேர்த்துவைத்து ஒன்றாக அனுப்பிவைத்தமை போல, சில நாள்களில் மட்டும் கொட்டித் தீர்த்துவிட்டிருக்கிறது மழை. இந்த மழை கொஞ்சம் கூடித்தான் போய்விட்டது. ஒரே தடவையில் திணித்துவிட்ட இந்த மழையை எதிர்கொள்ளமுடியாது பலரும் திணறிப்போயுள்ள நிலையில், அவர்களை இடம்பெயரவும் வைத்து, மேலும் துன்பத்துக்குள்ளாக்கியிருக்கிறது மழைப் பொழிவு. வடக்கில் அதிகளவாக கிளிநொச்சியில் அதிக பாதிப்பு ஏற்பட்ட நிலையில் நாடளாவிய ரீதியில் கொழும்பில் வீட்டுக்கூரை வரையில் மழைவெள்ளம் உயர்வடைந்து- வீட்டினுள் வெள்ளம் போய் நாசம் செய்யும் அளவுக்கும் மோசமான நிலையை மழை ஏற்படுத்தி விட்டது. அதனையும் ஓரளவு சமாளிக்கலாம் என்றால் அதனையும் தாண்டி கண்டி, கேகாலையில் மண்சரிவை ஏற்படுத்தி சாவு பலரது உயிரைக் காவு கொண்டுள்ளது இயற்கை.

மண்மேடுகள் சரிந்ததனால் பலர் அதனுள் புதையுண்ட நிலையில் சிலர் மீட்கப்படவும், 58 பேர் சடலங்களாக மீட்கப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டதோடு அந்தச் சோகம் இன்னமும் நீடிக்கும் வகையில், அந்த மண்மேடுகளில் சிக்கிக் காணாமற் போயுள்ளவர்களை இனி உயிருடன் மீட்பது பலத்த சந்தேகம்தான் என்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். அதனால் இயற்கை காவு கொண்டவர்களின் எண்ணிக்கை 200 இற்கும் அதிகமாகும் என்று அஞ்சப்படுகிறது. காணாமற்போனவர்கள் உயிருடனோ அல்லது பிணமாகவோ மீட்கப்படுவர் என்பதுகூடச் சந்தேகமான நிலையிலுள்ளதாகவே மீட்புப் பணியில் ஈடட்டுள்ளவர்களின் கருத்து அமைகிறது.

இந்த நிலை மலையகத்தை மட்டுமன்றி ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் கவலை கொள்ளச் செய்துள்ளது. இயற்கையின் இந்தத் தாண்டவத்துக்கு எவர் மீது குற்றஞ் சுமத்துவது?

அவர்களின் தற்போதைய அவலத்தைப் போக்க ஏனையவர்களால் - எம்மால் முடிந்ததைச் செய்ய அனைவரும் முன்வரவேண்டும். இழப்புக்களும்- வலிகளும் எங்களுக்குப் புதிதல்ல என்பதும், அவற்றுக்குத் தீர்வு கிடைக்காது என்பதும் எம்மவர்களுக்குப் பட்டுத் தெளிந்த உண்மை என்றாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது எமது பொறுப்பாக இருக்க வேண்டும். மனிதாபிமானமாக இருக்க வேண்டும். அதிலிருந்து எவரும் பின்வாங்கக்கூடாது.

மலையகத்தில் சரி, கிளிநொச்சியில் சரி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவேண்டி தேவை உள்ளது. அவர்களுக்கு உதவ இடர் முகாமைத்துவப் பிரிவு உள்ளபோதும் உடனடி உதவி தேவை. தனியார் சிலர் அவ்வாறு உதவிவருகிறார்கள். எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள்.

தவிர இடரிலிருந்து எப்படித் தப்புவது என்றும் திட்டமிட்டு கட்டட வேலைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுங்கள். தண்ணீர் வழிந்தோடக்கூடியதான அல்லது தண்ணீர் பெருக்கு ஏற்பட்டால் அது தன்பாட்டில் செல்லக்கூடியதாக நகர திட்டமிடலும் வீட்டில்கூடத் திட்டமிடலும் மிகமிக அவசியம். அதனைப் பலரும் புரிந்து கொள்வது குறைவாகவே உள்ளது. நில அமைப்பு, தன்மை பற்றிக் கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் அவை உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்தும் கவனம் செலுத் தப்பட வேண்டும். எதிர்கால சன நெருக்கம், இடப்பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பலதும் பிரச்சினைகளையே உருவாக்கவுள்ளன. அதன்போது வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட பல பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளன. அதுபோன்றே சில நாள்களுக்கு முன்னர் ஏற்பட்டுள்ள மழையின் கோரத்தாண்டவத்தின் இடர் என்று கூறலாம். அதனை ஏதோவொரு வகையில் அனைவரும் கண்டிருப்பீர்கள் - கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்களுக்கு இப்போது இருப்பிடமும் இல்லை. ஒருபுறம் சடலங்கள் மீட்கப்பட, மறுபுறம் தண்ணீரில் நனைந்தபடி குளிரில் உடல் விறைத்துப்போக உறவுகளை இழந்த துயரம் ஒருபுறம், மனதை நோகடிக்க அவர்கள் மிகவும் மோசமான நிலையை எதிர்கொண்டுள்ளனர். அவற்றுக்கு உதவுவதோடு இந்த இயற்கை இடர் எமக்கு இன்னொரு படிப்பினையாகவும் இருக்கட்டும்.




# அனுபவங்களே ஆசான்

பரம்சிகா

மனிதர்களில் பெரும்பாலானவர்கள், தாம் கடந்து வந்த வாழ்க்கைப் பயணத்தைத் திரும்பிப் பார்க்க விரும்புவதில்லை. இங்கே திரும்பிப் பார்ப்பது என்பது அவர்கள் ஒவ்வொரு பொழுதுகளிலும் தாம் பட்ட துயரத்தை, அனுபவித்த அவலத்தை, உறவுகளின் உயிர் இழப்புக்களை, ஏமாற்றங்களை...., வஞ்சிப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிடுவதாகும்.

இவ்வாறான ஒவ்வொரு வலிகளையும் அனுபவிக்கும்போது மனதில் திடம் இல்லாதவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள்; சோர்ந்து போகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, வலிமையுள்ளவர்கள் அந்த வலிகளை நன்குணர்ந்து அவற்றைத் தம் வாழ்வுக்கான ஏணிப்படிகளாகக் கைக்கொண்டு மற்றோர் திகைக்கவும் வியப்புறவும் வாழ்க்கையில் நல்லதொரு நிலைக்கு உயர்ந்து விடுகிறார்கள்.


அது மட்டுமன்றி, இப்படித் துன்ப-துயரங்களோடு போராடி... வறுமைச் சூழலில் எதிர்ப்பட்ட ஒவ்வொரு பசிக் கொடுமைகளையும் எதிர்த்து அவற்றை உளபலத்தால் மிதித்து நசுக்கிப் பயணிக்கும்போது... அதன் மூலம் ஏற்படுகின்ற அனுபவங்களே அவர்களுக்கு ஆசானாகி அவர்களை நல்வழிப்படுத்துகின்றன.

இவ்வாறாக அவர்கள் நல்வழியில் பயணிக்கும்போது அவர்களது மனது பக்குவம் கொள்கிறது, தெளிவடைகிறது, அறிவு விரிவடைகிறது. அறிவு விரிவடையும்போது தமக்கு ஏற்படும் ஒவ்வொரு செயல்களையும் சிந்தித்துப் பார்க்க வைக்கிறது. இது ஏன் நடந்தது...? எதற்காக நடந்தது...? இதை நடப்பிப்பவர் யார்...? இதற்கான காரணி என்ன...? என்ற வினாக்களுக்கு விடை தேட முயற்சிக்கிறது. இந்த முயற்சியின் நிமித்தம் கிடைக்கப் பெறும் விடைகளின் தெளிவில் ஞான உணர்வு பெறுகிறது.

மனித மனம் ஒரு குரங்கின் மரம் தாவும் நிலைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. எதிலும் ஒரு நிலைக் கொள்கையோடு ஒரு முகமாய் பற்றிப் பிடித்து, வாழ்வின் போராட்டங்களுக்கு மத்தியில் எதிர் நீச்சல் அடித்து, முன்னேறுவது என்பது எல்லோராலும் சாத்தியப்படக் கூடிய விடயமல்ல.

இருப்பினும், இவற்றைச் சாத்தியமாக்கியவர்கள் சரித்திரத்தில் நிலையாக அமர்ந்து கொண்டார்கள். முடியாதவர்கள் கால ஓட்டத்துடன் அள்ளுண்டு போய் எவர்கண்ணுக்கும் புலப்படாமல் சாவடைந்து போனார்கள்; போகிறார்கள்.

கால வரலாற்றில் நிலையாகிப் போனவர்கள் பலர் இன்றும்கூட மக்களின் மனங்களில் வாழ்வதற்கும், அந்த மக்களால் இன்றும் கூடப் போற்றிப் புகழப்படுவதற்கும் அவர்களது கடந்த கால வாழ்க்கைப் பின்னணியே காரணமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கல்வி முறையை வலியுறுத்தும் அச்சமின்றி



விஜய் வசந்த், சமுத்திரக்கனி, சிருஷ்டி டாங்கே, ராதாரவி, கருணாஸ் நடிக்கும் படம், "அச்சமின்றி". 'ட்ரிபுள் வி ரெகார்ட்ஸ்' சார்பில் வி.வினோத்குமார் தயாரிக்கிறார். ஒளிப்பதிவு, ஏ.வெங்கடேஷ். இசை, பிரேம்ஜி. பாடல்கள், யுகபாரதி. வசனம், ராதாகிருஷ்ணன். படத்தை இயக்கியுள்ள பி.ராஜபாண்டி கூறியதாவது; பின்லாந்து நாட்டிலுள்ள கல்விமுறை உலகத்துக்கே எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதுபோன்ற கல்வியை நாட்டிலுள்ள மாணவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் படம் இது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதில் சந்திக்கும் சிரமங்கள் மற்றும் இந்தச் சமூகத்தின் மீது அவர்களுக்கு இருக்கும் அக்கறை, அவர்கள் மீது சமூகத்துக்கு இருக்கும் அக்கறை ஆகியவற்றை அலசும் படம் இது.



பாட்டி: ஏண்டா பேராண்டி.. எரும மாட்டை தடவினா முடி வளருதாமே... நிஜமாகவா?
பேராண்டி: ஐயோ பாட்டி.. அது எரும மாட்ட தடவினா இல்லை.. எவர் மாட்டை தடவினா... நீ வேற உசிர வாங்காத...

அம்மா சீரியல் பாக்குறா...
அப்பா வந்தா யாரு சோறு போடுறது
அது தான் நான் களத்தில இறங்கிட்டன்..



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்த்த சில நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி புரிவீர்கள். முக்கிய வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அரசு தொடர்பான உதவி கிடைக்கும்.

**இடபம்:** சொந்த நலன்களைத் தியாகம் செய்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறத் தேவையான பணிபுரிவீர்கள். இடையூறு விலகி உற்பத்தி, விற்பனை செழிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மிதுனம்:** நண்பரின் யதார்த்தப் பேச்சு சங்கடம் ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணவரவுக் கேற்ப, செலவுகளைத் திட்டமிடுவீர்கள். வெளியூர்ப் பயணத் திட்டத்தில் மாறுதல் உண்டு.

**கடகம்:** சிலர் சுயநலத்துக்காக உதவி செய்ய முன்வருவர். கூடுதல் உழைப்பு தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியை உருவாக்கும். தியானம், தெய்வ வழிபாடு மனதில் அமைதி தரும்.

**சிங்கம்:** செயலில் லட்சிய நோக்கம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** கூடுதல் பணிகளால் சிரமம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்புப் பின்பற்ற வேண்டும். பொருள் இரவல் கொடுக்க வாங்கக்கூடாது.

**துலாம்:** வாழ்வில் புதிய வசந்தகாலம் உருவாகும். தொழில், வியாபாரம் நல்லவிதமான முன்னேற்றம் பெறும். புதிய வாகனம் வாங்கத் திட்டமிடுவீர்கள். நித்திரையில் தெய்வீகம் தொடர்பான கனவு வரும்.

**விருச்சிகம்:** எதிர்வரும் பணிகளுக்காக முன்னேற்பாடு செய்வது நல்லது. தொழில், வியாபாரம் சுமுகமாக இருக்கும். சேமிப்புப் பணம் செலவுகளுக்குப் பயன்படும். அறிமுகம் இல்லாதவர் தரும் உணவு உண்ண வேண்டாம்.

**தனுசு:** முக்கியமான விடயத்தில் சுமுக தீர்வு ஏற்படும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உருவாகும்.

**மகரம்:** நண்பர் உறவினருக்கு உதவி செய்வீர்கள். இஷ்ட தெய்வ அருளால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு மனதில் புதிய நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். சேமிப்புப் பணம் செலவுக்குப் பயன்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**மீனம்:** குடும்ப வறுமையைப் பிறரிடம் சொல்வதால் மதிப்புக் குறைவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவீர்கள். ஆடம்பரப் பணச்செலவைத் தவிர்க்கவும்.

ஒருவன்:- "புதுச் செருப்பு ஏன் கடிக்குது?"
மற்றவன்:- "இதுக்கு முன்னாடி எவரும் அதைக் காலில் போட்டு மிதிச் சிருக்க மர்ட் டார்கள்.... அதுதான் கோபம் வந்து கடிக்குது."

படித்ததில் பிடித்தது

மருத்துவர்:- "உங்க கிட்னி பெயில் ஆகிட்டுது"
நோயாளி:- "அப்படியா? ஆச்சரியமா இருக்கிறது. நான் எனது கிட்னியைப் படிக்க வைக்கவே இல்லையே டாக்டர். அப்புறம் எப்படி அது பெயில் ஆகும்?"

ஒருவர்: "தலைவரை ஏன் மேடையில ஏற்றி எல்லோரும் இப்படி அடிக்கிறாங்க?"
இன்னொருவர் "ஓட்டப்பந்தையத்தில முதலாவதா வந்த ஒரு பொண்ணுக்கு "ஓடுகாலி" என்று பட்டம் கொடுத்திட்டாராம்"



பையன்:- "எங்கள் தாத்தா மாதிரியே வயலின் வாசிக்கிறீர்களே....."
பெரியவர்:- "அப்படியா? அவர் பெரிய வயலின் வித்துவானா?"
பையன்:- "இல்லை. அவருக்கும் வயலின் வாசிக்கத் தெரியாது."

கேள்வி: "நெப்போலியனுக்கு பயம் என்றால் என்னவென்று தெரியாது.... ஏன்?"
பதில்:- "ஏனென்றால்.... நெப்போலியனுக்குத் தமிழ் தெரியாது"

ஷேர்ஹான் @im_ShaN_
வாழ்க்கையில் நம்பிக்கை இருக்கணும்
எவரையும் நம்பித் தான் இருக்கக் கூடாது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 4 | | | 3 | | | |
| 8 | | 7 | | | | 3 | | 5 |
| 9 | | | 1 | | | | | 4 |
| | | 6 | 4 | 3 | | 9 | | |
| | | | | | | | | |
| | | 9 | | 2 | 7 | 8 | | |
| 5 | | | | | 2 | | | 6 |
| 7 | | 8 | | | | 5 | | 2 |
| | | | 9 | | | 7 | 3 | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 1 | 6 | 9 | 3 | 4 | 8 | 7 |
| 7 | 8 | 6 | 1 | 4 | 5 | 2 | 3 | 9 |
| 3 | 4 | 9 | 2 | 8 | 7 | 6 | 1 | 5 |
| 9 | 3 | 4 | 7 | 5 | 2 | 1 | 6 | 8 |
| 6 | 7 | 8 | 3 | 1 | 4 | 9 | 5 | 2 |
| 1 | 2 | 5 | 9 | 6 | 8 | 7 | 4 | 3 |
| 8 | 1 | 2 | 5 | 7 | 6 | 3 | 9 | 4 |
| 5 | 6 | 7 | 4 | 3 | 9 | 8 | 2 | 1 |
| 4 | 9 | 3 | 8 | 2 | 1 | 5 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்ட்து. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எணகள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது புதுசு

## மேலைத்தேய மோதிரங்கள்

மேலைத்தேய மோதிரங்கள் அறிமுகமாகியுள்ளன. விதம் விதமான வடிவங்களில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 300 ரூபா தொடக்கம் 350 ரூபா ஆகும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | – | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | – | 600 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | – | 300 |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 300 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 500 | 250 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | – | 400 | 200 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 200 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | – | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 250 | 400 | 150 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | – | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | – | 350 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 200 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |

நாளை
வைகாசி-09
ஞாயிற்றுக்கிழமை - 22.05.2016
திதி: பிரதமை
பி.இ.04.25 வரை
நட்சத்திரம்: அனுசம்
மு.இ.09.41 வரை
ராகுகாலம்:
04.22-05.52 வரை
சுபநேரம்:
08.52-10.22 வரை



# வேர்க்கடலை பிஸ்கட்

### தேவையான பொருள்கள்

வேர்க்கடலை : 1 கப்
கோதுமை மா : 1 கப்
சீனி : 1 கப்
உப்பு : 1 தேக்கரண்டி
சமையல் சோடா : 1 தேக்கரண்டி
எசன்ஸ் : அரைத் தேக்கரண்டி
நெய் : 2 தேக்கரண்டி

### செய்முறை

வறுத்து, பொடித்த வேர்க்கடலை மற்றும் சீனி, கோதுமை மா அனைத்தையும் எடுத்துக்கொண்டு உப்பும், சமையல் சோடாவும் சேர்த்து தண்ணீர் ஊற்றி சப்பாத்தி மாவு போல் பிசைய வேண்டும்.

அடுத்து அந்த மாவைப் பூரி போல் உருட்டித் தட்டி, சிறிய வட்டமாக வெட்டி, அலங்கரிக்க ஊசியால் அதன் மேலே சிறு புள்ளிகளைக் குத்த வேண்டும்.

பிறகு ஒரு தட்டில் நன்றாக நெய் தடவி ஒன்றின் மேல் ஒன்று ஒட்டாதவாறு இடைவெளி விட்டுப் போட வேண்டும். ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் மணல் போட்டு மெல்லிய தட்டு போட்டு மூடி, நன்றாக ஆவி வரும் வரை ஓவனில் வைத்து பிஸ்கட் தட்டை வைத்து மூட வேண்டும்.

பதினைந்து நிமிட நேரத்துக்குள் அந்த பிஸ்கட்டை திருப்பிப் போட வேண்டும் (பிஸ்கட் பிரவுண் கலராக வரும்போது திருப்பவும்). வெந்ததும் எடுத்து ஆற வைத்துச் சாப்பிடவும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 | 80 | – | 40 | 70 |
| கத்தரி | 140 | 120 | 80 | 160 | 120 | 120 | 70 | 80 |
| கரட் | 120 | 120 | 80–200 | 120 | 140 | 160 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 200 | 80 | 300 | 160 | 220 | 90 | 100 |
| பாகல் | 140 | 120 | 130 | 160 | 160 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | 100 | 80 | 120 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 100 | 80 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 100 | 140 | 120 | 180 | 100 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 40 | 80 | 15 | 35 |
| தக்காளி | 100 | 200 | 140 | 240 | 180 | 280 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 | 30–40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 40 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 120 | 200 | 140 | 180 | 140 | 60 | 200 |
| புடோல் | 100 | 120 | 120 | 80 | 70–80 | 80 | 30 | 80 |
| கோவா | 140 | 140 | 100 | 160 | 120 | 160 | 90 | 100 |
| வெண்டி | 100 | 200 | 80 | 120 | 80–120 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 220 | 180 | – | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 100–160 | 180 | 140 | 160 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 30 | 50 | 20–30 | 30–40 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 110 | 80 | 120 | 80–100 | 120 | 75 | 120 |
| தேசிக்காய் | 500 | 300 | 600 | 350 | 380–400 | 200 | 350 | 350 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 140 | 120 | 200 | 140 | 160–180 | 140 | – | 150 |
| இராசவள்ளி | 150 | 130 | 180 | 160 | 140–160 | 160 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 150 | 140 | 170–180 | 140 | 150 | 150 |

# வீட்டுக்கு அழகு சேர்க்கும் வண்ணக் கொடிகள்

வீட்டுக்கு அழகு சேர்ப்பவை வண்ணங்களும், அலங்காரங்களும் தான். சூரிய ஒளி, மலர்கள் மற்றும் மஞ்சள் நிறம் எந்த இடத்தையும் பிரகாசப்படுத்த வல்லவையாகும். பிடித்த வடிவங்களில் அறைக்கலன்களை வாங்கி வீட்டை அழகுப்படுத்துவோம். வீட்டுக்கு உண்மையான அழகைத் தேடித்தருவது இயற்கைதான். முன்பெல்லாம் தோட்டம் வைக்க இடம் இருக்கும். அதில் எமக்கு விருப்பமான செடிகளை வைத்து அழகு பார்ப்பார்கள்.

இன்றைய இடநெருக்கடியில் நாம் குடியிருப்பது அடுக்குமாடி குடியிருப்பு என்றாலும், அந்த இடத்துக்குள் நாம் கொடிகள் வளர்க்கலாம். கொடிகள் என்றதும் பந்தல் கட்டவேண்டும் எனக் கற்பனை செய்ய வேண்டாம். இவற்றுக்காகப் பிரத்தியேகக் கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. எந்த இடங்களிலும் படர வேண்டுமென நினைக்கிறீர்களோ அந்த இடத்தில் படரத்தோதான வசதிகளை ஏற்படுத்தினால் போதும். போதுமான நிலவசதி இல்லாவிட்டால் கூடப்பரவாயில்லை, பெரிய தொட்டிகளில் கூட விதைகளை தூவிக் கொடிகளை வளர்த்து விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 . 02 . 1939



மறைவு 21 . 04 . 2016

அமரர்

# செல்லையா இராமலிங்கம்

கடந்த (21.04.2016) சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லையா இராமலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.05.2016) சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வலி தெற்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியூடாகவும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மலர் வளையம் சாத்தியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மகேசன் வீதி, நவாலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் முதல்வர்
**செல்வி சாந்தினி மாணிக்கம்** அவர்களின்
அன்புத் தந்தை

### முத்தையா மாணிக்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர் மாவிட்டபுரம்)

அவர்கள் கடந்த 17.05.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
யா/ செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை.

## மரண அறிவித்தல்

# முத்தையா மாணிக்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, சுண்டுக்குளியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மாணிக்கம் கடந்த (17.05.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் உமாசுதன், சாந்தினி (அதிபர், யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),. தேவசுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வாசுகி, கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் நதினி, சரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2016) ஞாயிற்றுக் கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**17/1, கோயில் வீதி,**
**சுண்டுக்குளி.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 636 5774**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 . 05 . 1946



மறைவு 21 . 04 . 2016

கடந்த 21.04.2016 ஆம் திகதி வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

# இளையகுட்டி நடேசு

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.05.2016) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மந்திராளி,**
**இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

திருமதி **அருளம்மா தம்பித்துரை**

பிறப்பு 10 . 10 . 1926



இறப்பு 19 . 05 . 2016

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்மா தம்பித்துரை நேற்று முன்தினம் (19.05.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பென்னையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இலங்கநாதன் மற்றும் தவமலர் (கனடா), செல்வ நாதன், சிவலிங்கம் (சுவிஸ்), ரஞ்சினிதேவி (கிளி, லண்டன்), நடேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமகிருஷ்ண வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 9911753, 077 573 4581**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மிகமோசமான பயங்கரவாதி வடக்கு முதல்வர்

## கூறுகின்றார் சோபித தேரர்

கொழும்பு, மே 21
இலங்கையில் தற்போது உள்ள மிகவும் மோசமான பயங்கரவாதி வட மாகாண முதலமைச்சரேயாகும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அத்திட்டிய மிஹிந்து செத் மதுரவில் நடைபெற்ற படைவீரர் நினைவு நிகழ்வில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது படைவீரர்களின் போர் வெற்றியை மலினப்படுத்தக் கூடாது. ஒட்டு மொத்த இலங்கையர்களுக்காகவுமே படை வீரர்கள் உயிர்த் தியாகம் செய்தார்கள். வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ் வரன் மிக மோசமான பயங்கரவாதியைப் போன்று செயற்படுகின்றார் எனவும் சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-5)

## அவிசாவளையில் நிகழ்ந்த பரிதாபச் சாவு

அவிசாவளை – கொஸ்கம – அகரவிட பகுதியைச் சேர்ந்த நபரொருவர் தீவிபத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை பெய்த மழையினால் பரவிய குளிரை தணிப்பதற் காக நபரொருவர் தீ மூட்டிவிட்டு உறக்கத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, திடீரென அவர் உறங்கிக் கொண்டிருந்த கட்டிலில் தீப்பற்றியுள்ளது. இதனால் பரிதாபமான முறையில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் 77 வயது டைய ஒருவரே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## யாழ்ப்பாணம்

வழங்கப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த சஞ்சீவ தர்மரத்ன பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவியுயர்வு பெற்று யாழ்.மாவட் டத்துக்கு நியமிக்கப்பட்டுள் ளார்.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த ஜி.கே.பெரேரா கொழும்பு வாகனப் பிரிவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார். இவர் கடந்த ஒரு வருடமாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றியிருந்தார்.

இதுதவிர, யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடந்த ஒரு வருடமாக கடமையாற்றிய டபிள்யூ.கே. ஜெயலத், காலி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி ரூபரஜனி(பாப்பா) சிறிராசா

**(ஓய்வுபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்)**



பிறப்பு:24.12.1959
இறப்பு:19.05.2016

உத்திராவத்தை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் 19, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூபரஜனி(பாப்பா) சிறிராசா 19.05.2016 வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்வராசா- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிறிராசாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**19, பலாலி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்: செ.சிறிராசா
(கணவர்)

077 548 1675

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் ஜோசப் சில்வானஸ்

**(ஓய்வுபெற்ற தேசிய வீடமைப்புத் திணைக்கள உத்தியோகஸ்தர்)**

மண்ணின் மடியில்
1950 . 02 . 15



இறைவன் அடியில்
2016 . 05 . 19

நவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஜோசப் சில்வானஸ் 19.05.2016 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மேரிபுஷ்பம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சைதனிய தேவி அவர்களின் அன்புக் கணவரும் தினேஸ், ஜோசப்பின், திலீப் (தபாலக உத்தியோகஸ்தர் - உரும்பிராய்), டயானா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோஜ்குமாரின் அன்பு மாமனும் றெனோஜனின் அன்புப் பேரனும் ஏபிரகாம பிலிப், றெபேக்கா, காலஞ்சென்ற சைலஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் தூய இம்மானுவேல் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**J.S திலீப்**

(68232)
(12.18)

077 160 1834

## மரண அறிவித்தல்

### திருமதி தனலஷ்மி நாகரத்தினம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலஷ்மி நாகரத்தினம் நேற்று (20.05.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு நாகரத்தினம் (சாந்தி அச்சக உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை (மில்க்வைற் ஸ்தாபகர்) - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும், இரவீந்திராதேவி, சந்திராதேவி, சாந்தாதேவி, கங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயும், வேலாயுதம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி) நந்தகோபால் (மில்க்வைற்) தயாபரன் (தயா அச்சகம், தயாவெளியீடு), சிவன்ராஜ ( T.O நெடுந்தீவு பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியும், Dr.சரவணன் (யாழ். போதனா வைத்தியசாலை), Dr.விஜிநீதா (சாவகச்சேரி, ஆதார வைத்தியசாலை), பாமா பகீரதன் (விவசாய பீட விரிவுரையாளர்), கோகுலன் (மருத்துவபீடம் முதலாம் வருட மாணவன் யாழ்ப்பாணம்), ரமணன் (மின்சாரசபை லிகிதர்), ரேகா - கீதசகிலன், காலஞ்சென்ற சிவதர்ஷன் மற்றும் ஜதுர்ஷன் (கட்டட மேற்பார்வையாளர்), குகதர்ஷன் (BCAS) , சாரங்ஹன் (மாணவன்- பரியோவான் கல்லூரி), சாம்பவி (மாணவி - வேம்படி உயர்தர பாடசாலை) ஆகியோரின் அம்மம்மாவும், தாரிகனின் (ஆஸ்திரேலியா) பூட்டியும், காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால், கனகராசா (மில்க்வைற் அதிபர்) லோகநாதன் வவநாதன் (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**575, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

**தயா - 077 396 5214 , வேலாயுதம் - 077 869 0214**

### திருமதி சரஸ்வதி நாகராசா



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் 88/40, பத்திரகாளி கோயிலடி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நாகராசா 19.05.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா- நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் நாகராசாவின் அன்பு மனைவியும் சிறி(சுவிஸ்), நவநீதன்(ஆஸ்திரேலியா), தபேஷ் (ஜேர்மனி), ஜெலக்சுமி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம், துரைராசா மற்றும் கந்தசாமி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பூமணி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் சுரேஸ் விஜயா, சசி, ரஞ்சி ஆகியோரின் மாமியாரும் ஜெசிக்கா, சிந்துஜன், ராஜு, தீபக், தரணியா, டனுஷியா, கேனுஜன், துளசி, பிரதாஸ், தான்சிகா, அனுஸ்கா, டியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**88/40, பத்திரகாளி கோயிலடி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**ந. நாகராசா**

(68232)
(12.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டிப்படைக்கிறது

ளது. இருப்பினும் கேகாலை மாவட்டத்தில் தொடர்ந்தும் மழையுடன் கூடிய கால நிலை நிலவி வருகின்றது. இதனால் அங்கு மண் சரிவில் புதையுண்டவர்களை மீட்பதில் கடும் சிரமங்களைப் பாதுகாப்புத் தரப்பினர் எதிர்கொண்டுள்ளனர். நேற்றையதினம் மூன்று சடலங்கள் மாத்திரமே மீட்கப்பட்டுள்ளன. மண் சரிவினால் புதையுண்ட 36 பேரின் சடலங்களும், வெள்ளத்தினால் உயிரிழந்த 28 பேரின் சடலங்களுமே இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 173 பேர் தொடர்பில் எது வித தகவல்களும் தெரியாததால். உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

**தொடர் மழை**

கடந்த 15 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் நிலவிய தாழமுக்கம் காரணமாக நாடளாவிய ரீதியில் மழை பெய்து வருகின்றது. வடக்கில் மழையின் பாதிப்பு ஓரளவு தணிந்துள்ளது. இருப்பினும் தலைநகரம் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் அதிகளவிலான மழை கொட்டித் தீர்த்ததுடன், சில பகுதிகளில் மண்சரிவும் ஏற்பட்டிருந்தன.

இந்தத் திடீர் இயற்கை இடரினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மண்சரிவினால் மூன்று கிராமங்கள் புதையுண்டு போயுள்ளன. அத்துடன் வெள்ளம் காரணமாக களனி கங்கையின் நீர்மட்டம் உயர்ந்தது. இதனால் களனி கங்கையை அண்டிய தலைநகர் மற்றும் ஏனைய பிரதேசங்கள் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டிருந்தன.

நேற்றுமுன்தினம் இரவிலிருந்து தலைநகர் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் மழை ஓரளவு குறைவடைந்திருந்தது. இதனால் நேற்று முன்தினம் மாலை 7.8 அடியாக இருந்த களனி கங்கையின் நீர் மட்டம் நேற்று மாலை 6.6 அடியாகக் குறைவடைந்துள்ளது. இதனால் தலைநகரில் மேலதிக பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

**மண்சரிவு**

கேகாலை மாவட்டத்தில் இரண்டு இடங்களில் மண் சரிவு ஏற்பட்டிருந்தது. புளத்கோபிட்டிய மற்றும் அரநாயக்க ஆகிய பிரதேசங்களே மண் சரிவை எதிர்கொண்டிருந்தன. இவ்வாறு மண் சரிவில் சிக்குண்டவர்களில் 36 பேரின் சடலங்களும், 5 உடற் பாகங்களும் நேற்று மாலை வரையில் மீட்கப்பட்டுள்ளன.

புளத்கோபிட்டியவில் புதையுண்ட 16 பேரில் 14 பேரின் சடலங்களும், அரநாயக்கவில் புதையுண்டவர்களில் 22 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. இன்னும் 173 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒட்டுமொத்த பாதிப்பு**

சீரற்ற காலநிலை காரணமாக ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 360 குடும்பங்களைச் சேர்ந்த 5 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் 63 ஆயிரத்து 730 குடும்பங்கள், 597 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 440 வீடுகள் முழுமையாகவும், 3 ஆயிரத்து 463 வீடுகள் பகுதியளவிலும் இடரினால் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## திங்களன்று

ஆகிய இரு தினங்களில் வந்துள்ளமையினால், நாளை மறுதினம் திங்கட்கிழமையை அரச விடுமுறை தினமாக அரசு பிரகடனப் படுத்தியிருந்தது.

இருப்பினும், நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள இடர்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவிகளை வழங்க, அரச ஊழியர்களின் பங்களிப்பு அவசியம் என்பத னால், விடுமுறை வழங்க முடியாதுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேகுணவர்த்தன தெரிவித் துள்ளார். (த-வ-5)

## [illegible]னாதிபதி

[illegible]த்துக்க[illegible] ஜனாதிபதி அலுவலகம் [illegible] வாகத்துக்குட்பட்ட நிறு[illegible] ாடு செய்த வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி, அன்னதானம் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, பணிக் குழாத்தினரின் நன்கொடைகள் ஆகியன பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் நிதியைக் கொண்டு, நிதியம் ஒன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களின் தற்போதைய தேவைகள், வெள்ள நீர் வற்றிய பின்னர் மீண்டும் சொந்த இடங்களுக்கு சென்ற பின் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், குடி தண்ணீர் வசதிகள் மற்றும் ஏனைய போசாக்கு மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதற்கு இந்த நிதியம் பயன்படுத்தப்பட உள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த-வ-5)

## இடரில் சிக்கிய

ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்துள்ளார். இது தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தற்போது நிலவுகின்ற சீரற்ற காலநிலை, மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு என்பன காரணமாக உயிரிழந்த, இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உணவு, உடை, சுகாதாரம் மற்றும் வீட்டுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், துரித நிவாரணம் வழங்குவதற்கும், தேவையான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இடர் சூழ்நிலைக்கு அச்சமின்றி முகம் கொடுத்து நிவாரணப் பணிகளிலும், வெள்ளத்தில் சிக்குண்டுள்ள மக்களை மீட்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கு மாறு பாதிக்கப்பட்ட மக்களிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இடர்களுக்கு உள்ளானவர்களுக்கு உதவியளிப்பதற்காக, முன்வந்துள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போதைய சூழ்நிலையில் அவர்களது உதவிகளை தொடர்ந்தும் பெற்றுக் கொடுக்குமாறும் அன்புடன் வேண்டுகிறேன்.

எமது நாடு எதிர்நோக்கியுள்ள இடரிலிருந்து மீண்டு, நாட்டு மக்களிடையே சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்காக, அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமையுடன் எதிர்பார்ப்புடனும் அணிதிரள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்று அந்த ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த-வ-5)

## இடரில் சிக்கியவர்களுக்

ஐ.என்.எஸ் சுற்லேஜ் என்ற கப்பல் ஆகியவற்றில், இந்தியாவின் அவசர உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (த-வ-5)

## இடர் பாதித்த

யாழ்.மாவட்டச் செயலகத்தினால் நேற்று விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடர் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கான நிவாரணப் பொருள்கள் சேகரித்தலும், விநியோகித்தலும் பொறிமுறை யாழ். மாவட்டச் செயலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளரின் பணிப்புக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நன்கொடைகளை வழங்க முன்வரும் நலன் விரும்பிகள் [illegible] விடயங்களை [illegible] இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ச.ரவியுடன் (தொலைபேசி 0773 957894) தொடர்பு கொள்ள முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கடந்த வாரத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் போன்றவற்றில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உலருணவுகளை வழங்குமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.பி.றோகண புஸ்பகுமார கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் கடந்த வாரத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை இடரால் மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் சேகரிக்கும் பணி வவுனியாவில் நடைபெற்று வருகிறது.

மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் போன்றவற்றில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசியப்பொருள்கள் சேகரிப்பு நடவடிக்கை தற்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வருகிறது. இந்த உலருணவு சேகரிப்பு நடவடிக்கையானது இன்றிலிருந்து (நேற்று) மூன்று நாள்களுக்கு இடம்பெற உள்ளது. எனவே பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உணவு பொருள்களைத் தர விரும்புபவர்கள் விசேடமாக உலர் உணவுப்பொருள்கள், குடிதண்ணீர், சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான சுகாதார ஆடைகளை விரைவாக வழங்கி உதவவேண்டும்- என்றார். (த-வ-5-21)

## தேங்காய்

கொண்டிருந்த போது, ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய மகிந்த ஆதரவணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இடர் நிலையை, தேசிய இடர் நிலையாகக் கருத வேண்டும். எனவே, இது தொடர்பில் நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வில் விவாதிப்பதற்கு நாளொன்றை ஒதுக்கித் தரவேண்டும், என்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இடர் முகாமைத்துவ அமைச்சின் அறிக்கையைப் பெற்று விவாதிப்போம். நீங்கள் தேங்காய் உடைத்திருக்காவிட்டால், இப்படி நடந்திருக்காது, என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு அமர்ந்தார்.

இதன்போது சபையிலும் சிரிப்பொலி எழுந்தது.

இதேவேளை, நாட்டில் இடம்பெறும் இயற்கை இடர் குறித்து விவாதிக்க எதிர் வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட அமர்வொன்று இடம்பெறவுள்ளது. நாடாளுமன்ற அமர்வு ஜூன் மாதம் 7 ஆம் திகதி வரை நேற்று முற்பகல் சபாநாயகரினால் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், அதன் பின்னர் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விசேட அமர்வை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## தொழிலின்

பதிவு செய்யுமாறு, வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சு கோரியுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடமாகாண சபை தோற்றம் பெற்ற 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து கடலில் தொழில் செய்யும்போது, சாவடைந்த கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்குக் கூட்டுறவு அமைச்சு வாழ்வாதார உதவு தொகையாக ஒரு இலட்சம் ரூபா வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. இதன் காரணமாகவே, கடலில் சாவடைய நேர்ந்த கடற்றொழிலாளர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்படுகின்றன.

கடலில் சாவடைந்த கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து, அதனை இறப்புச் சான்றிதழுடன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினூடாகக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கையளிக்கவேண்டும். இவ்வாறு விண் ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர் வரும் 24 ஆம் திகதி ஆகும் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, பனையில் இருந்து தவறி வீழ்ந்து சாவடைந்த சீவல் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக ஒரு இலட்சம் ரூபாவை வடமாகாண கூட்டுறவு அமைச்சு வழங்கி வருவதும், அந்த ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## பயங்கரவாதச்

அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். சித்திரவதைகள் தொடர்பிலான ஐ.நா. விசேட நிபுணர் ஜுவான் மென்டேஸ் மற்றும் நீதிமன்ற சுயாதீனத்துவம் தொடர்பான ஐ.நா சிறப்பு நிபுணர் மொனிகா பின்டோ ஆகியோர் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணம் தொடர்பாக இந்த செவ்வியின்போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜுவான் மென்டேஸ் பதில் வழங்கியுள்ளார். இதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக, அந்த நாட்டிலுள்ள உயர்மட்ட அதிகாரிகள் மிகவும் கவனமாக உள்ளனர்.

இந்தச் சட்டத்தை நீக்குவதற்கோ, திருத்தம் செய்வது தொடர்பிலோ, எப்படியான செயன்முறை பின்பற்றுவது குறித்து எந்தவித எதிர்பார்ப்பையும் இலங்கை அரசு வழங்கவில்லை.

இலங்கையில், விசேடமாக பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதித்துறை ஆகிய பிரதான கட்டமைப்புக்களை, மக்களுக்கு அதிக பட்ச நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும் - என்றார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், பயங்கரவாத தடைச் சட்டம் இலங்கையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## வெள்ளம் பாதித்தோரு

முன்வைத்துள்ளது.

தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் நலிந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளாதவது:-

நாட்டில் பேரிடர் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுகாதார வசதிகளை வழங்கவேண்டியுள்ளது. இதுவே தற்போது அத்தியாவசிய தேவையாக உள்ளது.

எனவே மருத்துவர்கள் இந்தக் காலப் பகுதியில் விடுமுறை பெறுவதையோ அல்லது விடுமுறையில் நீடிப்பதையோ தவிர்த்து கொள்ளவும்.

மேலும் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கு அண்மையில் வாழும்மருத்துவர்கள் தற்போது விடுமுறை பெற்றிருப்பார்களாயின், அவர்களை உடனடியாக மீளப் பணிக்குத் திரும்புமாறும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (த-வ-5)

## வெள்ள

கூறினர்.எம்புல்கம பகுதியில் சிறுவர்கள் இருவருடன், வயோதிபர் ஒருவர் தேங்கி நிற்கும்வெள்ளநீரில்படகுச்சவாரிசெய்துள்ளார். இதன்போது படகு திடீரென கவிழ்ந்துள்ளது. அதில் பயணித்த வயோதிபரும் சிறுவர் ஒருவரும் உயிரிழந்ததோடு, மற்றைய சிறுவனை பிரதேச வாசிகள் காப்பற்றியிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (த-வ-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியரின் கடமைக்கு இடையூறு வவுனியாவில் 4 இளைஞர் கைது

வவுனியா,மே 21

வைத்தியசாலையில் தாதியரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டு, வவுனியாவை சேர்ந்த நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளரைப் பார்வையிட வந்த இளைஞர்கள் சிலர், நோயாளரை வைத்தியர் பார்வையிடும் நேரத்தில் விடுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததோடு, அங்கு கடமையில் இருந்த தாதியர்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டனர்.

வைத்தியசாலையில் கடமையில் இருந்த தாதியர்களால் பதிவு செய்யப் பட்ட முறைப்பாட்டை அடுத்தே, குறித்த இளைஞர்களைக் கைது செய்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து வவுனியா வைத்தியசாலையினரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, நோயாளர் விடுதியில் வைத்தியர் பார்வையிடும்போது, அத்துமீறி உள்ளேவந்த குறித்த இளைஞர்களைத் தாதிய உத்தியோகத்தர்கள் வெளியே செல்லுமாறு பணித்தபோது, இளைஞர்கள் தாதிய உத்தியோகத்தருடன் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், தகாத வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளனர்.

இதனை அடுத்து அந்த நேரம் விடுதியில் கடமையில் இருந்த வைத்தியரால், வைத்தியசாலைப் பொலிஸாரிடம் குறித்த விடயம் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த இளைஞர்கள் வைத்தியசாலையில் இருந்து தப்பி ஓடியுள்ளனர். பின்னர் தாதியர்களிடம் தகாத முறையில் ஈடுபட்ட இளைஞர்களைக் கைது செய்யாவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகத் தாதியர்கள் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

அத்தோடு இது தொடர்பான முறைப்பாடுகளும் தாதியர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என வவுனியா வைத்தியசாலையினர் தெரிவித்தனர்.

(த-ஐ-21)

# பல்கலை. வவுனியா வளாகத்தில் இரண்டு நாள்கள் தொழிற்சந்தை

இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கும் முகமாக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் தொழிற்சந்தை ஒன்று பம்பைமடுவிலுள்ள வவுனியா வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தத் தொழிற் சந்தையானது எதிர்வரும் வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், ஆடைத்தொழிற்சாலை நிறுவனங்கள் உட்பட 30க்கும் மேற்பட்ட முன் னணி நிறுவனங் கள் கலந்துகொள்ள உள்ளதோடு, இந்த நிறுவ னங்கள் தமக்குத் தேவை யான தொழில் வல்லுநர் களை பல்வேறு துறைக ளில் நேரடியாகத் தெரிவு செய்து வேலை வாய்ப்புக்களையும் வழங்கவுள்ளன.

இந்த வேலை வாய்ப்புக்கள் பல்வேறு தகைமையுடையவர்க ளுக்கும் ஏற்ற வகையில் இருக்கும் எனவும் வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொழிற் சந்தையின் முதல் நாள் வெள்ளிக்கிழமை அனைத்து பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கும் மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்குமானதாகவும், இரண்டாம் நாளான சனிக்கிழமை பல்கலைக்கழகம் சாராத அனைவருக்குமானதாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலவசத் தொழில் வழிகாட்டல்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், இவ்விரு நாள்களும் இலவச பஸ் சேவை கள் வவுனியாவி லிருந்து பம்பை மடுவுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.(த-ஐ-21-402)

# இடர் பாதித்த இலங்கைக்கு இந்தியா அவசர உதவிகள்

## பிரதமர் மோடி உத்தரவு

கொழும்பு, மே 21

வெள்ளம் மற்றும் நிலச் சரிவால் இலங்கையில் பெருமளவானோர் உயிரிழந்துள்ளமைக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருத்தம்தெரிவித்துள்ளார். அத்துடன் அவசர உதவிகளை அனுப்பிவைக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அவர் வெளியிட்டுள்ள செய்தியில், மோசமான கால நிலையால் இலங்கையில் உயிர்களை இழந்தவர்களுக்காக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவசரகால அடிப்படையில் அரசுக்கும், மக்களுக்கும் உதவிகளை வழங்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

# அதிகாரிகளின் கூட்டங்களுக்கு மக்கள் பங்களிப்பு மிகஅவசியம்

முல்லைத்தீவு,மே 21

அதிகாரிகளால் நடாத்தப்படுகின்ற அனைத்துக் கூட்டங்களிலும் பங்குபற்றி ஒத்துழைப்பு நல்கினால் , கிராமத்தின் அபிவிருத்தியையும் மக்களுக்கான பயன்பாடுகளையும் இலகுவாகக் கொண்டு செல்ல முடியும். – இவ்வாறு கற்சிலைமடு கிராம அலுவலர் த.தனபாலராஜ் தெரிவித் துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு கிராம அலுவலகர் பிரிவில் அண்மையில் நடைபெற்ற கிராம எழுச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்பில் அக்ரிட் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கிராம அபிவிருத்தி திட்டமானது, கிராமத்தின் அபிவிருத்திக்கும் அதன் வளர்ச்சிக்கும் மிகவும் பயன்பாடாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இதற்கு மக்களது ஒத்துழைப்பு மிக அவசியமாக உள்ளது. இந்தத் திட்டமானது மக்களுக்குப் பெரும் பயனை ஈட்ட வல்லது. எனவே செயற்படக்கூடிய அமைப்பைத் தெரிவு செய்வற்கான கூட்டத்துக்கு அனைவரும் வாருங்கள். அதிகாரிகளால் அறிவிக்கப்படும் கூட்டங்களுக்குத் தவறாது வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குங்கள். இதனால் மக்களுக்கான பயன்களைப் பெற்றுக் கொள்வதுடன் கிராம அபிவிருத்தியும் சிறப்பாக முன்னெடுக்கப்படும்.

தற்போது இந்தக் கற்சிலைமடுக் கிராமத்தில் 5 குடிதண்ணீர் கிணறு வெட்டுவதற்கு இடம் கேட்டுள்ளனர். மிகவும் அத்தியாவசிய இடங்களிலே இவை வெட்டப்பட வேண்டும். ஆனால் உங்களின் ஆலோசனையைப் பெறமுடியாத நிலையில் நானே தெரிவு செய்து சில இடங்களைக் குறிப்பிட்டு அனுப்பி உள்ளேன். உங்கள் ஆலோசனைக்கேற்ப அந்தக் கிணறுகள் அமைக்கப்படும். எனவே தவறாது ஒன்று கூடல்களில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கிப் பயனடையுங்கள் – என்றார். (த-ஐ-21-500)

## மரண அறிவித்தல்கள்

### யோசப் வின்சென்ற்



யாழ்ப்பாணம் மவுண் காமல் வீதியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் வின்சென்ற் நேற்று (20.05.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப்-மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிலிப் - மரியபுஸ்பம் தம்பதியரின் அன்பு மருமகனும், பிலிப்டொறிஸ்மரினாவின் அன்புக் கணவரும், பிரசாந்தன், பிரதீபா, பிரியங்கா ஆகி யோரின் பாசமிகு தந்தையும், தேவராசா, றொசான் ஆகியோரின் மருமகனும், பிரான்சிஸ் சேவியர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்ரன் மற்றும் அலோசியஸ், கிறிஸ்ரியன் (இலங்கை வங்கி), வயிலட், றாயு (பெல்யியம்), அருள் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு அவரது இல்லத்தில் நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 13C, மூளாய் வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### தம்பையா தியாகராசா
(இளைப்பாறிய தலைமைத் தபாலதிபர் யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் தற் போது Epping Australia வை வசிப்பிடமாகவும் கொ ண்ட தம்பையா தியாகராசா (இளைப்பறிய தலைமைத் தபாலதிபர் யாழ்ப்பாணம்) கடந்த (17.05.2016) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-நாகமுத்து தம்பதிகளின் புதல்வரும் வல்லிபுரம்-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் தயாளினி (Sydney-Australia) , வரதன் (லண்டன்), தயாளன்(USA), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவச்சந்திரன் (Sydney-Australia) , காலஞ்சென்ற கௌரி (லண்டன்), கல்யாணி (USA) ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஆரபி,Scott, பூமிதா, தாமரா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், நடராசா, இரத்தினம், செல்லத்துரை, சுப்ரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.05.2016 ஞாயிற்றுக்கிழமை Macquarie Park (Corner of Delhi Road & Passey Road, North Ryde) மயானத்தில் 12.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
Sydney-Australia.
**Tel: 00612 987 66258, 00614 170 64847**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வெள்ளைச்சி(வெள்ளையம்மா) கோகிலான்



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், 27/37, புங்கன்குளம் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெள்ளைச்சி கோகிலான் 19.05.2016 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோகிலானின் அன்பு மனைவியும், சீதாலட்சுமி, போதகர் ஆபேல்கணேசன் (பிரான்ஸ் சீயோன் சுவிஷேச சபையின் தலைமைப் போதகர்), தவம் (சண்முகம்), மாதா (வடிவேலன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.05.2016) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்
வெளிப்படுத்தல்– 14:13)

**புங்கன்குளம்,**
**ஈச்சமோட்டை**

**தகவல்:**
**போதகர் ஆபேல் கணேசன்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**021 205 1041, 077 803 5032**

### வேலுப்பிள்ளை நாகராஜா



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடாவில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை நாகராஜா கடந்த (17. 05.2016) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுவர்ணாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், வேலாயுதம்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற கோணேஸ்வரன் (முன்னாள் முல்லைத் தீவு -புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், பணிப்பாளர், கொழும்பு சமூகசேவை திணைக்களத் தொழில் பயிற்சி பிரிவு, அளவெட்டி கோணேஸ் மற்ஸ் அக்கடமி நிறுவுனர், J.P) கேதீஸ்வரன் (பிரான்ஸ்), நகுலாம்பிகாதேவி (கொழும்பு), நகுலேஸ்வரன் (கனடா, முன்னாள் இ.போ.ச. காப்பாளர், கோண்டாவில் டிப்போ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியதர்சினி (கொழும்பு), விமலச்சந்திரன் (கொழும்பு) , நவறஞ்சினி (பிரான்ஸ்), நளினி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், மிதுராங்கன், சுருதிகா, கேசிகா, நவீஸ், மொனீஸன் ஆகியோரின் பேரனும், செல்வராஜாவின் (ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர், தெல்லிப்பழை ப.நோ. கூட்டுறவுச் சங்கம்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகம் நாகேஸ்வரி வீதியில் அமைந்துள்ள டாக்டர் சிவபாலனின் இல்லத்தில் நாளை (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி,**
**பருத்திக்கலட்டி,**
**சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
021 224 2237, 077 636 5841
077 9426408, 077 696 9517
077 717 4561

# கலைமதி, டயமன்ஸ் முன்னேற்றம் யங்ஹென்றிஸின் கால்பந்தாட்டத்தில்

மாங்குளம், மே 21
யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன கலைமதி, டயமன்ஸ் அணிகள்.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. இதன்படி நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து இருதயராஜா அணி மோதியது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் ஓடி மறைந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் திர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது கலைமதி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ், சென்.பீற்றர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர் அணியின் பகீரதன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். அடுத்த இரு நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் டயமன்ஸின் பிறேம்குமார். பதிலடிகொடுத்ததுடன் விடவில்லை. அந்த அணியின் சார்பாக 25ஆவது, 26 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது டயமன்ஸ். இரண்டாம் பாதியிலும் டயமன்ஸின் ஆட்டம் மேலோங்கிக் காணப்பட்டது. ரஜீவன் 39ஆவது நிமிடத்திலும், வாகீசன் 48 ஆவது நிமிடத்திலும், ரஜீவன் 60ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாம் பாதியில் சென்.பீற்றர் சார்பாக பெறப்பட்ட கோலை 53ஆவது நிமிடத்தில் றீகன் பெற்றிருந்தார். (ம-422)



# தப்புவாரா செரபோவா

தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் தடை விதிக்கப்பட்ட ரஷ்யாவின் மரிய செரபோவா மீதான விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன.

மெல்டோனியம் என்ற ஊக்கமருந்தைப் பயன்படுத்திக் கடந்த மார்ச் மாதம் தடை பெற்றார் நட்சத்திர வீராங்கனையான செரபோவா. இந்த நிலையில் செரபோவா மீதான விசாரணைகள் எப்போது வேண்டுமானாலும் நடைபெறலாம் என்று கருதப்படுகின்றது. சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் இங்கிலாந்தில் வைத்து அவரை விசாரணை நடத்த முடிவு செய்துள்ளதாக நேற்று அறிவித்துள்ளது. இதனால் அடுத்த மாதத்துக்குள் அவர் மீதான விசாரணைகள் முழுமையாக நடைபெற்று முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசாரணைகளின் முடிவில், செரபோவா குறித்த குற்றங்களில் இருந்து முழுமையாக விடுவிக்கப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. ஏனெனில் மெல்டோனியம் என்ற குறித்த மருந்து கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியே தடை செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. எனவே டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி இந்த மருந்தை எடுத்துக் கொண்டவர் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே நடந்துள்ளார். அதே நேரம் குறித்த மருந்தின் தாக்கம் நான்கு அல்லது ஐந்து மாதங்கள் வரை உடலில் இருக்குமென்பதால், குறித்த நபர் ஒருவரின் ஊக்கமருந்துப் பாவனை அறியப்பட்ட நாளில் இருந்து சில நாட்களுக்கு முன்னர் அவர் அந்த மருந்தைப் பயன்படுத்தியதாக அர்த்தம் இல்லை. இந்த அடிப்படையில் பார்த்தால் மார்ச் மாதம் தடை பெற்ற செரபோவா, இந்த வருடத்தில் மெல்டோனியத்தை பயன்படுத்தினார் என்று எடுத்துக்கொள்ள இயலாது. அவர் கடந்த வருடத்தின் இறுதிப்பகுதிகளிலும் பயன்படுத்தியிருக்கலாம். இவ்வாறான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு செரபோவா எச்சரிக்கையுடன் விடுவிக்கப்படலாம். அல்லது அவருக்கு 4 ஆண்டுகள் தடை என்பதை விடுத்து குறைந்த் பட்ச தண்டனைகள் விதிக்கப்படலாம். (ம)

# இறுதியில் ஆலடி சிந்து

யாழ்ப்பாணம், மே 21
பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் ஆலடி சிந்து அணி இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

தொடரின் ஆட்டங்கள் அறிவொளி கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து ஏ அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடிசிந்து ஏ அணி 4:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-23)

# வென்றது கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம், மே 21
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பெண்கள் பிரிவு ஆட்டமொன்றில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றுள்ளது.


கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் நேற்று கடந்த புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதியது. இதில் கே.ஸி.ஸி.ஸி. அணி 55:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாக வெற்றி பெற்றது. (ம-23)

# போராடி வென்றது கலைமதி

யாழ்ப்பாணம், மே 21
யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி அணி வெற்றிபெற்றுள்ளது.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் எதுவித கோலையும் பெறாததனால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட, முடிவில் கலைமதி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# மன்செஸ்டர் யுனைற்ரெட் வெற்றி




இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வந்த பிறீமியர் லீக் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் யுனைற்ரெட் வெற்றி பெற்றுள்ளது. மன்செஸ்டர் யுனைற்ரெட்-போர்ண்மெத் அணிகளுக்கிடையே மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்து, பொய்க் குண்டினால் கைவிடப்பட்ட ஆட்டமே கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தது.

இந்த ஆட்டத்தில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் தலைவர் வெய்ன் ரூனி 43ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் 1:0 என்ற யுனைற்ரெட்டின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல்பாதி. 74ஆவது, 87ஆவது நிமிடங்களில் ஆசிலியங் இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல்கணக்கில் மன்செஸ்டர் யுனைற்ரெட் வெற்றி பெற்றது. (ம)



இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கம் தேசிய மட்ட ரீதியில் நடத்திய தனியாள் சதுரங்கப் போட்டிகள் எல்பிட்டிய ஆனந்த மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் நடைபெற்றன. குறித்த போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்தை 23 மாணவர்கள் பிரதிநிதித்துவம் செய்தனர். (ம-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டுக்குளி, மெதடிஸ்த பெண்கள் இறுதியில் மோதத் தகுதி பெற்றன

கரணவாய், மே 21
மாகாண மட்டப் பூப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பன இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

குறித்த தொடரின் அரையிறுதியாட்டங்கள் மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்றன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையும் மோதின. இதில் 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் யாழ். இந்து மகளிர் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் 3:2 என்ற செற்கணக்கில் போராடி வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது
(ம-108,433)





## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 21

**யங்ஹென்றிஸின் தொடர்**
யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென்.ஹென்றிஸ்கல்லூரிமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட் அணியும், மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை யுனைற்ரெட் அணியை எதிர்த்து மன்னார் தோட்டவெளி சென்.நீக்கிலஸ் அணியும், இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென்.ஜோசப் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளன.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழுகழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் நீகன் ஸ்ரார் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணி மோதவுள்ளது.

**கிளிநொச்சி லீக்கின் தொடர்**
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் கால்பந்தாட்டத் தொடரொன்றை நடத்தி வருகிறது. கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பூநகரி கலையொளி அணியை எதிர்த்து திருவையாறு அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முரசுமோட்டை விளைபூமி அணியை எதிர்த்து வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்து உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கனகபுரம் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து சந்திர உதயம் அணி மோதவுள்ளது. (ம-422-23)

## கிளிநொச்சி லீக்கின் முடிவுகள்

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணி களின் விவரங்கள் வருமாறு.

சனிக்கிழமை முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் முரசுமோட்டை விளைபூமி அணியை எதிர்த்து கிளிநொச்சி திருநகர் அணி மோதியது. இதில் முரசுமோட்டை விளைபூமி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்து ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணி மோதியது. இதில் வட்டக்கச்சி இளந்தளிர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து பூநகரி இளந்தளிர் அணி மோதியது. இதில் உருத்திரபுரம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் கனகபுரம் அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை நீடித்த இந்த ஆட்டத்தில் கனகபுரம் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## மேசைப் பந்தாட்டம்

கரணவாய், மே 21
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான, 15 வயது மற்றும் 19 வயது ஆண்கள், பெண்கள் பிரிவினருக்கான மாகாணமட்ட மேசைப் பந்தாட்டத் தொடர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் இரண்டு தினங்கள் வரை மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.
(ம-108,422)

## செயலகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டம்

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்றும், நாளையும் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதன்படி இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஏ பிரிவு ஆட்டங்களில் காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 9.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காரைநகர் பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 11.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், மே 21
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

கழுகுகளின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது. இதில் யங்கம்பன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23,108)

## ஐ.பி.எல். கிண்ணம்




## ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பென்சிச் விலகல்

நடைபெறவுள்ள பிரான்ஸ் ரென்னிஸ் தொடரிலிருந்து சுவிற்சர்லாந்தின் இளம் வீராங்கனையான பென்சிச் விலகுவதாக அறிவித்துள்ளார்.

முதுகுப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் வெளியேறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 19 வயதான பென்சிச், ரென்னிஸ் உலகில் வளர்ந்து வரும் வீராங்கனையாகக் கருதப்படுகிறார். றோயேர்ஸ் கிண்ணத்தைத் தவிர ஏனைய முக்கிய கிண்ணங்களைக் கைப்பற்றாவிட்டாலும் ஒவ்வொரு தொடரிலும் காலிறுதி, அரையிறுதி வரை முன்னேறுவதன் மூலம் தரப்படுத்தலிலும் ஏற்றம் கண்டிருந்தார். சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட தரப்படுத்தலில் எட்டாவது இடத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட அவர், பிரான்ஸ் தொடரைத் தவறவிடுவதன் மூலம், அடுத்து வெளியாகும் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களை விட்டு வெளியேறவும் வாய்ப்புக்கள் உள்ளன. (ம)



# பளுதூக்கல் போட்டி

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட பளுதூக்கல் சங்கம், யாழ். மாவட்ட கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் இரு பாலாருக்குமான பளுதூக்கல் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சுண்டுக்குளி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்கு பற்ற விரும்புபவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-422)



# பிளே ஓவ் கனவை தக்கவைத்தது டெல்லி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஹைதராபாத்-டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றி பெற்றது டெல்லி.

ஹைதராபாத் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறுவதை உறுதிசெய்துவிட்டது. ஆயினும் இந்த ஆட்டத்தில் வென்றால் மட்டுமே டெல்லியால் பிளே ஓவ் நம்பிக்கையைப் பெற முடியும். எனவே கட்டாய நிலைப்பாட்டில் அந்த அணி களமிறங்கியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஹைதராபாத்தின் ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் தவான். 10 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் தவான். ஒரே ஓட்டத்துடன் பவிலியனுக்குத் திரும்பினார் கூடா. 10 ஓட்டங்களுடன் பிரீத்வைட்டின் பந்தில் போல்ட் ஆனார் யுவராஜ். இதற்காக அவர் 11 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். ஓர் முனை இவ்வாறு பலவீனமாக உணரப்பட்டாலும் மறுமுனையில் பவுண்டரிகளைப் பதிவுசெய்து பலம் சேர்த்துக் கொண்டிருந்தார் வோர்ணர். ஹைதராபாத்தின் பந்துவீச்சுப் பலமாக ரகுமான், நெக்ரா, புவனேஸ்குமார், சரண் என்று பலரைக் குறிப்பிட்டாலும் ஆனால் துடுப்பாட்ட பலமாக வோர்ணரை மட்டுமே குறிப்பிடலாம். அந்த அளவுக்கு நடப்பு வருடத் தொடரில் அவர் தனது அணியைத் தாங்குகிறார். ஹென்றிக்ஸ், வோர்ணர் தாக்குப்பிடிக்க நான்காவது இலக்கை இழக்காமல் 13.1 பந்துப்பரிமாற்றத்தில் 100 ஓட்டங்களை எட்டியது ஹைதராபாத். 40 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வோர்ணர். 18 ஓட்டங்களுடன் ஹென்றிக்ஸை வீழ்த்தினார் டுமினி. வோர்ணரும் 73 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப முடிவில் ஹைதராபாத் 158-7. பந்துவீச்சில் டெல்லியின் சார்பாக பிரீத்வைட் 2 இலக்குகளையும், டுமினி, கட்டர் நைல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு அதன் நம்பிக்கையான குயின்டன் டி ஹொக் இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இந்த இரு ஓட்டங்களுக்காக அவர் 9 பந்துகளை எதிர் கொண்டிருந்தார். பன்ட், நாயர் இணைய 7.4 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களைத் தொட்டது டெல்லி. இணைப்பாட்டம் தொடர்ந்தும் நிலைபெற சரிவில் இருந்து மீண்டு ஹைதராபாத்துக்கு எதிராக பலத்த போராட்டத்தை வெளிப்படுத்தியது அந்த இணை. அணியின் ஓட்டம் 82ஆக இருந்த பொழுது 32 ஓட்டங்களுடன் ரண் அவுட் செய்யப்பட்டார் பன்ட். நாயருடன் இணைந்தார் டுமினி. நாயரின் அரைச்சதம் 42 பந்துகளில் பதிவானது. இந்த அரைச்சதத்தை அவர் 25 தொடக்கம் 35 பந்துகளுக்குள் பெற்றிருந்தால் இன்னும் அழுத்தங்களைக் குறைத்திருக்கலாம். இறுதி 5 பந்துப்பரிமாற்றங்களில் 56 ஓட்டங்களைப் பெற்றால் டெல்லிக்கு வெற்றியென்ற நிலமை. 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டுமினி. இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களில் 28 ஓட்டங்கள் தேவை என்றிருந்த போது நாயருடன் இணைந்தவர் பிரீத்வைட். வந்த வேகத்தில் அடுத்தடுத்து இரு பவுண்டரிகளைப் பதிவு செய்த போதிலும் ரகுமானை எதிர்த்து அவரால் தாக்குப் பிடிக்க இயலவில்லை. 10 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் 11 ஓட்டங்கள் தேவை. நெருக்கடி ஏற்றபட்டாலும் இறுதி இரு பந்துகளில் அடுத்தடுத்து பவுண்டரிகளைப் பதிவுசெய்து டெல்லியின் பிளேஓவ் கனவை தகர்ந்துவிடாது பார்த்தார் நாயர். அவர் இறுதிவரை ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்துவீச்சில் ஹைதராபாத்தின் சார்பாக சரண் இரு இலக்குகளையும் ரகுமான் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# இலங்கை திணறல்

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளில், இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் 298 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்ததுடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 91 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஒரு முனையில் கேல்ஸ் நிலைத்து நின்றாலும் மறு முனையில் ஹொம்டன், ரூட், வின்ஸ் ஒற்றை யிலக்கத்துடன் ஆட்டமிழந்தனர். கேல்ஸ், பரிஸ்ரௌவ் மூலம் இணைப்பாட்டம் அரங்கேற முதல் நாள் முடிவில் இங்கிலாந்து 171-5 என்ற நிலையில் இருந்தது. கேல்ஸ் 71 ஓட்டங்களுடனும், பரிஸ்ரௌவ் 54 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை. மேலதிக இலக்கை இழக்காமல் 200 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. கேல்ஸுக்கு பின்னர் களமிறங்கிய பரிஸ்ரௌவ் கேல்ஸுக்கு முன்னர் சதத்தை நிறைவு செய்யக்கூடிய வகையில் சென்று கொண்டிருந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 234 ஆக இருந்த போது 86 ஓட்டங்களுடன் கேரத்தால் வீழ்த்தப்பட்டார் கேல்ஸ். சமீரவின் வேகம் திடீர் எழுச்சி கண்டது. மொயின் அலி, புரோட் இருவரும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டனர். சதம் கடந்தார் பரிஸ்ரௌவ். ஸ்ரீவ் பின் ஓரளவு தாக்குப்பிடிக்க ஒன்பதாவது இலக்குக்காக இணைப்பாட்டமாக 50 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 140 ஓட்டங்களுடன் பரிஸ்ரௌவின் இன்னிங்ஸை முடித்தார் சமீர. ஸ்ரீவ் பின்னுக்கு கேரத் முடிவுகட்ட 298 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக சமீர, சானக இருவரும் தலா 3 இலக்குகளையும், கேரத் 2 இலக்குகளையும், எரங்க, பிரதீப் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது இலங்கை. ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார் கருணாரத்ன. சில்வா, மெண்டிஸ் இருவரும் முறையே அண்டர்சன், புரோட் கூட்டணியால் வீழ்த்தப்பட 12 ஓட்டங்களில் மூன்று இலக்குகளை பறிகொடுத்தது இலங்கை. சந்திமல், மத்தியூஸ் இருவரும் இணைந்து ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையாயினும் பத்துப் பந்துப்பரிமாற்றங்கள் வரையாவது தாக்குப் பிடித்தனர். சந்திமல்லை வெளியேற்றினார் ஸ்டோக்ஸ். மத்தியூஸை 34 ஓட்டங்களுடனும், சானகவை ஓட்டமெதனையும் பெறவிடாதும், கேரத்தை ஒரு ஓட்டத்துடனும் இருக்கைக்குத் திருப்பினார் அண்டர்சன். அப்பொழுது இலங்கை 83-7. இறுதி நம்பிக்கையான திரிமன்னே 22 ஓட்டங்களுடனும், ஏனைய இலக்குகளும் அடுத்தடுத்து சரிய 91 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அண்டர்சன் 5 இலக்குகளையும், புரோட் 4 இலக்குகளையும், ஸ்டோக்ஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை 1-0 என்றிருந்த பொழுது மழை குறிக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. (ம)



# சுண்டுக்குளி, மெதடிஸ்த பெண்கள் பூப்பந்தாட்ட இறுதியில் பலப்பரீட்சை

கரணவாய், மே 21

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடரில் 15 வயது பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பன இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயரதரப் பாடசாலையும். தயங்கி சைவ மகா வித்தியாலயமும் மோதின. இதில் மெதடிஸ்த பெண்கள் உயரதரப் பாடசாலை 3:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயமும் மோதின. இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இறுதியாட்டம் இன்று நடைபெறும். (ம-108,433)

**வேலைவாய்ப்பு**

*யாழ்.கச்சேரியடியில் உள்ள அலுவலகத்தில் போட்டோ பிரதி செய்யக் கூடியவர் (பெண்கள்).

*கணினி ரைப் செற்றிங் (Page maker) செய்வதில் நல்ல தேர்ச்சி உடையவர் தேவை.

076 807 9282

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.